SELECTED POEMS OF

BHARATHIDASAN

Translated by

Dr. V. MURUGAN



International Institute of Tamil Studies
Madras - 600 113.

Selected Poems of

BHARATHIDASAN

Translated by

Dr. V. MURUGAN

International Institute of Tamil Studies

Madras - 600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title	:	SELECTED POEMS OF BHARATHIDASAN TRANSLATION FROM TAMIL TO ENGLISH
Translator	:	Dr. V. Murugan Presidency College, Madras - 600 005.
Publisher & Copyright	:	INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES C.P.T. CAMPUS, T.T.T.I. POST MADRAS-600 113.
Publication No.	:	195
Language	:	TAMIL AND ENGLISH
Date of Publication	:	DECEMBER 1994.
Edition	:	First
Paper Used	:	White Printing 60 GSM
Size	:	21x14 cms.
Printing	:	Laser Typesetting Offset Printing.
Number of Copies	:	1000
Number of Pages	:	XX + 290
Price	:	Rs.60/- (Rupees Sixty only)
Printer	:	Sri Yeses Print House 4&5 Thanappa Street, Triplicane, Madras - 600 005.
Subject	:	Translation of Pavendar Bharathi Dasan's Selected 100 poems from Tamil to English

Professor **K. PONNUSAMY,** M.Sc., B.L.,
Minister For Education.

அணிந்துரை

1968 ஆம் ஆண்டு நடந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது அறிஞர் அண்ணா அவர்களால் திட்டமிட்டபடி 1970 அக்டோபர் 21 ஆம் நாள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடங்கப்பட்டது.

இந்நிறுவனம் தமிழுடனும், பிற துறைகளோடும் தொடர்புபடுத்தி ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும் வெளியிட்டு வருகிறது. மொழிபெயர்ப்பு என்ற நிலையில், தமிழின் சிறந்த இலக்கியப் படைப்புகளை இந்நிறுவனம் மொழிபெயர்க்கும் பணியைச் செய்து வருகிறது. அப்பணியின் முத்திரைத்தான் 'Selected poems of Bharathidasan' என்ற இந்நூல். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையின் விடிவெள்ளி பாரதி என்றால் அந்த இலக்கிய வகையின் மூலம் தமிழரின் இருளகற்ற வந்த செஞ்ஞாயிறு பாரதிதாசன் ஆவார்.

தமிழ்ச் சமூகத்தில் புரையோடிக் கிடந்த சாதி, மதம், மூட நம்பிக்கைகள், பெண்ணடிமை, பொருளியல் ஏற்றத்தாழ்வு முதலியவற்றைச் சுட்டெரிக்கும் சூரியனாகப் பாரதிதாசன் திகழ்ந்தார்.

'தாய் எழில் தமிழில் என்றன் தமிழரின் கவிதைகளை ஆயிரம் மொழிகளில் காண அவாவுற்றவர்' புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். தமிழ்மொழியின் சிறப்பை அயலவர் உணர மொழிபெயர்ப்பே சிறந்த கருவி என்பது பாரதிதாசனின் திண்ணமான கருத்து என்பதற்கு இப்பாடலே சான்று.

பாரதிதாசன் நூற்றாண்டு விழாவையொட்டி தேர்ந்தெடுக்கப்பட்ட அவருடைய 100 கவிதைகளை ஆங்கிலத்திலும், திராவிடமொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கும் திட்டத்தை இந்நிறுவனம் மேற்கொண்டது.

1995 சனவரியில் தஞ்சையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையில் நிகழவிருக்கும் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி இம்மொழிபெயர்ப்பு நூல் வெளிவருகிறது.

பண்டை நலம் புதுப்புலமை
பழம்பெருமை அனைத்தையும் நீ
படைப்பாய் இந்நாள்
தொண்டு செய்வாய் தமிழுக்குத்
துறைதோறும், துறைதோறும்
துடித்தெழுந்தே!

என்ற பாவேந்தரின் கனவுகளை நனவாக்கும் வகையில் ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய நான்கு மொழிகளில் அவருடைய கவிதைகளை மொழிபெயர்ப்பில் வெளியிட முயன்றுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தைப் பெரிதும் பாராட்டுகின்றேன். அத்தகைய அரிய நூல் ஒன்று வெளிவர பணியாற்றிய மொழி-பெயர்ப்பாளர்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

(க. பொன்னுசாமி)

Professor ***K. PONNUSAMY,*** Msc., B.L.,
Minister For Education

Secretariat
Madras - 600 009.

FOREWORD

Aringhar Anna, former Chief Minister of Tamil Nadu, with the earnest association of the eminent scholars of Tamilology planned to start a Tamil Research Institute with the prime intention of promoting advance research in Tamilology in the year 1986. Accordingly on 21st, October 1970, the International Institute of Tamil Studies was incepted as a research institute in Madras, the state capital of Tamil Nadu.

International Institute of Tamil Studies has been concentrating on inter-disciplinary research and translating great Tamil classical works into English. It is through translation we expose the richness of our literature to the unknown world.

In continuation to this venture the present work entitled 'Selected poems of Bharathidasan' has been designed. It is Bharathidasan who has been responsible in creating social awareness among the Tamils in the matters related to caste, religion feminism and social imbalances.

The present anthology consists of 100 poems of Bharathidasan and these poems have been translated into English and other Dravidian languages such as Telugu, Kannada and Malayalam.

It is a pleasure that a book of this kind is being released at this Ceremonial 8th World Tamil Conference by the Honourable Chief Minister of Tamil Nadu Purătchi Thalaivi Dr.J.Jayalalitha.

I appreciate the sincere efforts of the Director of The International Institute of Tamil Studies in bringing out the translated Volumes to fulfil the dream of Bharathidasan.

'new talents and ancient pride!
this day
You shall render service to Tamil
in every sort of department
awakening in a spur!

(Prof. K. PONNUSAMY)

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை – 600 113.

முன்னுரை

பாட்டுத்திறத்தால் இவ்வையகத்தைப் பாலித்திடக் கவிதை பாடிய பாரதியின் வழித்தோன்றலாகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் விளங்கினார். சமுதாயக் கொடுமைகளைச் சாடுவதில் பாரதியைத் துப்பாக்கி என்றால் பாரதிதாசனைப் பீரங்கி என்று கூறலாம்.

"இருளினை வறுமை நோயை
இடறுவேன்; என்னு டல்மேல்
உருள்கின்ற பகைக்குன்றை நான்
ஒருவனே உதைப்பேன். நீயோ
கருமான்செய் படையின் வீடு!
நான் அங்கோர் மறவன்! கன்னற்
பொருள் தரும் தமிழே நீ ஓர்
பூக்காடு; நானோர் தும்பி"

(அழகின் சிரிப்பு, பா.10)

என்று பாரதிதாசன் தமிழைப் பூக்காடாகவும் தன்னைத் தும்பியாகவும் பகைவர் கூட்டத்தைத் தூள் செய்யும் படைவீரனாகவும் தன்னைப் பாவித்தார். பாரதிக்கு ஒரு தாசன் தான் கிடைத்தார். ஆனால் பாரதிதாசனுக்கோ பல தாசர்கள் கிடைத்தார்கள்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் பாரதியாரின் சிந்தனைச் செல்வாக்கைக் காட்டிலும், பாரதிதாசனின் சிந்தனைச் செல்வாக்கு மிகுந்து காணப்படுகிறது.

சாதிமத ஒழிப்பு, வகுப்புரிமை பாதுகாப்பு, பொது உடைமை ஆட்சி அமைப்பு, பெண்ணடிமை ஒழிப்பு, தமிழ் மொழி வளர்ச்சி, தமிழின வளர்ச்சி என்ற கொள்கைகளைக் குறையாதக் கவித்துவத்தோடு கவிதைகளை வழங்கி ஒரு புதிய பொற்காலத்தை உருவாக்க முனைந்தார்.

தமிழகம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவை 1991-ஆம் ஆண்டு சிறப்பாகக் கொண்டாடியது. தென்கைப் பண்பாட்டு மையத்தின் நிதியுதவியுடன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தென்னக

மாநிலத் தலைநகர்களான ஆந்திராவில் திருப்பதியிலும், கர்நாடகத்தில் பெங்களூரிலும், கேரளாவில் திருவனந்தபுரத்திலும் பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவைக் கவினுற நடத்தியது. அம்மாநிலத்தில் உள்ள தமிழ்ச் சங்கங்களோடும் பல்கலைக் கழகங்களோடும் இணைந்து கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், கவியரங்குகள் ஆகியவற்றையும் நடத்தின. இந்நிகழ்ச்சிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் சிக்கன நடவடிக்கை மேற்கொண்டு, சேமிப்பின் மூலம் கிடைத்த பன்னிரண்டாயிரத்தைப் (12,000) பாவேந்தரின் நினைவாகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்களைப் பிற மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட இந்நிறுவனம் எண்ணியது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்களில் தெரிந்தெடுக்கப்பட்ட நூறு பாடல்களை ஆங்கிலம் மற்றும் திராவிட மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட முனைந்தது. தக்காரை வைத்து மொழிபெயர்ப்புப் பணி மேற்கொள்ளப் பட்டது. முனைவர் வி. முருகன் ஆங்கிலத்திலும், பசுமலை அரசு கன்னடத்திலும், முனைவர் பத்மநாபன் தம்பி, முனைவர் தேச மங்கலம் இராமகிருட்டிணன் ஆகிய இருவரும் மலையாளத்திலும், சி.ஆர். சர்மா தெலுங்கிலும் பாரதிதாசன் பாடல்களை மொழிபெயர்த்து வழங்கி உள்ளனர். அவர்களுக்கு இந்நிறுவனம் நன்றி செலுத்துகிறது.

பாரதிதாசன் பாடல்களை மொழிபெயர்க்கும் திட்டத்திற்கு அடிகோலியவர் இந்நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் முனைவர் சிலம்பொலி செல்லப்பனார் ஆவார். தொடர்ந்து அம்முயற்சியை நிறைவு செய்த பெருமை முன்னாள் இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிமிருதுலகுமாரி தாமசு அவர்களைச் சாரும். இம்முயற்சியை மேற்கொண்ட இவ்விருவருக்கும் நன்றி கூறுவது எனது கடமையாகும்.

இந்நிறுவனத்தின் தலைவரான மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இம்மொழிபெயர்ப்பு நூல்களுக்குத் தமிழிலும், ஆங்கிலத்திலும் சிறந்த முன்னுரைகள் வழங்கியுள்ளார். நிறுவன வளர்ச்சியில் பெரிதும் ஈடுபாடு கொண்டு விளங்கும் அப்பெருந்தகைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ச.சு. இராமர் இளங்கோ

Dr. S.S. RAMAR ILANGO
Director

International Institute of
Tamil Studies
Madras - 600 113.

PREFACE

Bharatidasan is the poetic descendant of Bharati who with his poetic versatality sang for the welfare of this world. If Bharati could be considered as a gun in condemning the social injustice, Bharatidasan could be said to be a canon. In praising Tamil, Bharatidasan sings as follows:

I shall knock down
the poverty, the darkness;
I will kick away
all by myself
the mountainous group
of enemies;
Oh, Tamil, you are
the blacksmith's workshop of arms
where I am a soldier;
Oh, Tamil, the bestower of sweet things,
You are a forest of flowers
Where I am a bee

In the above verse Bharatidasan compares Tamil to a forest of flowers and himself to be a bee in it. He also considered himself as a soldier who destroys the group of enemies. Bharati had only one follower, but Bharatidasan had many.

In the twentieth Century poems one finds the influence of Bharatidasan more than that of Bharati.

He, in order to create a golden era made an effort through his poems which depict the abolishment of caste and religion, socialist regime, eradication of the slavery of women, development of Tamil Language and development of Tamils.

Tamil Nadu, in 1991 celebrated the Centenary of Bharatidasan. With the financial aid of the South Zone Cultural Center, the International Institute of Tamil Studies celebrated the Centenary celebration of Bharatidasan at Tirppti - Andra pradesh, Bangalore - Karnataka and Tiruvananthapuram - Kerala. This Institute also conducted cultural performances, seminars, and poets forums in collaboration with the Universities and Tamil Sangams of the respective states. With Rs.12,000 which was saved from the financial aid given to this purpose, the International Institute of Tamil Studies decided to publish translations of hundred selected poems of Bharatidasan in other Dravidian languages such as Malayalam, Telgu and Kannada and in English.

These translations were carried out in English by Dr. V. Murugan, in Kannada by Mr. Pacumalai Arasu, in Malayalam by Dr. Padmanabhan Tambi, and Dr. Ramakrishnan, and in Telugu by Dr. C.R. Sarma. This Institute expresses its gratitude to these translators.

This project of translating the poems of Bharatidasan was first initiated by the former Director of this Institute Dr. Cilampoli Chellappan. This endeavour was continued and was successfully executed by Dr. Annie Mrithulakumari Thomas, the former Director-in-charge. I express my sincere thanks to both of them.

The Chairman of this Institute, the Honorable Education Minister has given valuable fore-words both in English and Tamil to these books of Translations. My sincere thanks are to him, for his involvement in the development of this Institute.

Dr. S.S. Ramar Ilango.

ABOUT THE TRANSLATOR

Dr.V.Murugan (6-1950) holds, besides M.A., and M.Phil degrees in English, a Ph.D in Comparative Literature and a Post-Graduate Diploma in Applied Linguistics. He has 20 years of collegiate teaching experience, has been a research guide for M.Phil & Ph.D, guiding 10 scholars for Ph.D. He has specialized in Comparative Literature, Translation and English Language Teaching, has published 5 books of translation, two of which received the 'Best Translation of the Year' award of the Tamil University in 1988 & 1989. Besides, he has published 14 articles and edited several books including the Encyclopaedia of Tamil Literature (Vol I) and the Journal of the Institute of Asian Studies. Presently, he teaches at Presidency College, Madras.

பொருளடக்கம்

CONTENTS

Preface
Foreword
A note of the Translator

1	சிரித்த முல்லை THE SMILING MULLAI CREEPER	1
2	கானல் THE HEAT	3
3	இன்பத் தமிழ் THE LOVELY TAMIL	5
4	தமிழ் வளர்ச்சி DEVELOPING TAMIL	7
5	காதலைத் தீய்த்த கட்டுப்பாடு THE RESTRICTION THAT SCORCHED LOVE	9
6	கைம்மைப் பழி THE SLANDERED WIDOWHOOD	15
7	மூடத் திருமணம் A FATUOUS MARRIAGE	19
8	பெண்ணுக்கு நீதி JUSTICE TO WOMEN	23
9	ஆண் குழந்தை தாலாட்டு LULLABY FOR A MALE CHILD	27
10	பெண் குழந்தை தாலாட்டு LULLABY FOR A FEMALE CHILD	31
11	உலக ஒற்றுமை UNITY OF THE WORLD	33
12	பேரிகை THE (KETTLE) DRUM	35
13	கூடித் தொழில் செய்க BAND TOGETHER IN WORK	37
14	ஆய்ந்துபார் ! PONDER OVER !	41

15 முன்னேறு 47
ADVANCE
16 உலகப்பன் பாட்டு 49
THE SONG OF THE COMMON MAN
17 உலகம் உன்னுடையது 53
THE WORLD IS YOURS
18 வியர்வைக் கடல் 57
THE SEA OF SWEAT
19 நீங்களே சொல்லுங்கள் 63
TELL ME YOURSELVES
20 புதிய உலகு செய்வோம் 67
LET US MAKE A NEW WORLD
21 சுதந்திரம் 69
FREEDOM
22 நம் மாதர் நிலை 71
THE STATUS OF OUR WOMEN
23 ஏசுநாதர் ஏன் வரவில்லை ? 73
WHY HASN'T JESUS CHRIST COME ?
24 எங்கெங்குக் காணினும் சக்தியடா 75
SAKTHI MANIFESTS EVERWHERE
25 எங்கள் தமிழ் 77
OUR TAMIL LANGUAGE
26 கைம்மைக் கொடுமை 79
THE TYRANNY OF WIDOWHOOD
27 குழந்தை மணத்தின் கொடுமை 83
THE CRUELTY OF CHILD MARRIAGE
28 கைம்மை நீக்கம் 87
ERADICATION OF WIDOWHOOD
29 தொழிலாளர் விண்ணப்பம் 89
APPEAL BY WORKMEN
30 மானிட சக்தி 93
THE POWER OF BEING HUMANE
31 புத்தகசாலை 95
LIBRARY

32	பத்திரிகை NEWSPAPERS	99
33	அழகு LOVELINESS	103
34	ஞாயிறு THE SUN	105
35	குன்றம் THE HILL	113
36	செந்தாமரை THE RED LOTUS	121
37	இருள் DARKNESS	129
38	ஆலைத் தொழிலாளி THE MILL-HAND	135
39	அன்பு LOVE	137
40	பொறுமை FORBEARANCE	139
41	நிலா THE MOON	141
42	தமிழ் TAMIL	143
43	பெற்றோர் ஆவல் THE YEARNING OF THE PARENTS	145
44	பெண் கல்வி EDUCATION FOR WOMEN	147
45	தந்தை பெண்ணுக்கு FATHER TO DAUGHTER	149
46	ஆட வந்தாள் SHE CAME TO DANCE	151
47	தமிழ்த் தொண்டு SERVICE TO TAMIL	153
48	வாய்மை முரசு PROCLAMATION OF TRUTH	155

49 நிலாப் பாட்டு 157
THE SONG OF THE MOON

50 பிள்ளைக்கு நீதி 159
COUNSEL TO CHILDREN

51 மாணவர்க்கு எழுச்சி 161
A CALL OF AWAKENING TO STUDENTS

52 தாயகமே வாழி 163
MAY THE MOTHERLAND PROSPER

53 ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது 165
A MOTHER'S HEART REJOICES

54 படி!படி!படி! 167
STUDY ! STUDY! STUDY!

55 திருடாதே 171
TAKE NOT TO STEALING

56 விண்மீன் 173
THE STAR

57 புரட்சி செய் 175
RISE IN REBELLION

58 இயற்கையில் இல்லை மனிதருக்கு ஏன்? 177
THEY DON'T EXIST IN NATURE, WHY SHOULD MEN HAVE THEM ?

59 பார் !பார்! 179
DO LOOK AT (THEM)

60 அகர முதலி 181
LEXICON

61 குறள் படித்தேன் 183
I STUDIED TIRUKKURAL

62 என்நாடு 185
MY MOTHERLAND

63 சிறுவனின் கனவுகள் 187
THE DREAMS OF A YOUNG BOY

64 இயற்கைச் செல்வம் 189
THE WEALTH OF NATURE

65 இருசுடரும் என் வாழ்வும் 191
THE TWO LIGHTS AND MY LIFE

66 தென்றல் 193
THE SOUTH WIND
67 பாரதி உள்ளம் 197
THE HEART OF PARATI
68 மகா கவி 199
THE POET SUPREME
69 இசைத்தமிழ் 205
VERSES IN TAMIL SET TO MUSIC
70 சங்கங்கள் 207
UNIONS
71 கொட்டு முரசே ! 213
BEAT O DRUM !
72 அவள் யார் ? 215
WHO IS SHE ?
73 அவள் 217
SHE
74 பிறக்க முடியாது 219
ONE IMPOSSIBLE TO SEE BORN ON THIS EARTH .
75 திரும்பிப் பார்த்தால் என்ன? 221
WHY NOT CAST A FAVOURABLE LOOK ?
76 கலப்பு மணம் வாழ்க ! 223
MAY INTERMARRIAGE PROSPER !
77 நானும் அவளும் 225
SHE AND I
78 பெண் 227
WOMAN
79 அண்ணல் பெயர் வாழ்க ! 229
MAY THE LOFTY NAME (OF GANDHI) PROSPER !
80 லெனின் 231
LENIN
81 புரட்சிக்கவி - நிலவெழுச்சி 233
THE RISE OF THE MOON
82 மூட நம்பிக்கை 237
SUPERSTITIONS

83	நல்ல மாமி A BENEVOLENT MOTHER-IN-LAW	241
84	வானவில் THE RAINBOW	243
85	துணைவர் இலக்கணம் THE ESSENTIAL TRAITS OF THE HELP-MEET	245
86	உலகுக்கு மீட்சி உண்டா ? IS THERE A REGENERATION FOR THIS WORLD ?	251
87	தாயும் சேயும் MOTHER AND CHILD	257
88	குழந்தை வளர்ப்பு BRINGING UP THE CHILD	259
89	குயில் THE CUCKOO	263
90	சோலை ஆடலரங்கு THE FOWER GROVE-THEATRE	267
91	வீட்டுத் தோட்டப் பூங்கா THE ENCLOSED GARDEN	269
92	எறும்பின் தவம் THE PENANCE OF AN ANT	271
93	சூறையில் ஓடம் A BOAT IN THE WHIRLWIND	273
94	உயிர் உறங்கா இரவு THE NIGHT WHEN THE SOUL WENT SLEEPLESS	277
95	எக்காளக் குயில் THE TRUMPETING CUCKOO	279
96	என்றைக்கும் பஞ்சமில்லை NO FAMINE EVERMORE	281
97	பந்து விளையாட்டு BALL-PLAY	283
98	சாவாத உழவன் THE UNEXHAUSTED PLOUGHMAN	285
99	யார் குற்றவாளி ? WHO IS THE OFFENDER ?	287
100	என் நிலைக்கு முல்லை சிரித்தது THE JASMINE LAUGHED AT MY PLIGHT	289

1 சிரித்த முல்லை

மாலைப் போதில் சோலையின் பக்கம்
சென்றேன். குளிர்ந்த தென்றல் வந்தது.
வந்த தென்றலில் வாசம் கமழ்ந்தது.
வாசம் வந்த வசத்தில் திரும்பினேன்.
சோலை நடுவில் சொக்குப் பச்சைப்
பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்து
குலுக்கென்று சிரித்த முல்லை
மலர்க்கொடி கண்டேன் மகிழ்ச்சிகொண் டேனே !

1. THE SMILING MULLAI CREEPER

I went to a flower grove in an evening.
The breeze of the cool South Wind there came
That carried a fragrance fine;
Turning my eyes to the direction therein,
I found to my joy and ecstasy
A *mullai* creeper in the midst of the grove
Growing about in captivating green
(As if) wearing a silken dress,
And smiling about in beatitude large.

2 கானல்

'வானும் கனல்சொரியும்! – தரை
மண்ணும் கனல் எழுப்பும் !
கானலில் நான் நடந்தேன் – நிழல்
காணும் விருப்பத்தினால் !
ஊனுடல் அன்றிமற்றோர் – நிழல்
உயிருக் கில்லை அங்கே !
ஆன திசைமுழுதும் – தணல்
அள்ளும் பெருவெளியாம்!

ஒட்டும் பொடிதாங்கா – தெடுத்
தூன்றும் அடியும்சுடும்;
விட்டுப் புறங்குதித்தால் – அங்கும்
வேகும்! உளம்துடிக்கும் !
சொட்டுப் புனல்அறியேன் ! – ஒன்று
சொல்லவும் யாருமில்லை !
கட்டுடல், செந்தணலில் – கட்டிக்
கந்தக மாய்எரியும் !

முளைத்த கள்ளியினைக் – கனல்
மொய்த்துக் கரியாக்கி
விளைத்த சாம்பலைப்போய் – இனி
மேலும் உருக்கிடவே
கொளுத்தி டும்கானல் ! – உயிர்
கொன்று தின்னும்கானல் !
களைத்த மேனிகண்டும் – புறங்
கழுத்த றுக்கும்வெளி !

திடுக்கென விழித்தேன் – நல்ல
சீதளப் பூஞ்சோலை !
நெடும் பகற்கனவில் – கண்ட
நெஞ்சுறுத் தும்கானல்
தொடர்ந்த தென்நினைவில்! – குளிர்
சோலையும் ஓடையுமே
சுடவ ரும்கனலோ – என்று
தோன்றிய துண்மையிலே.

2. THE HEAT

There's the emission of heat from the sky,
So was it from the dust of the earth;
I walked along in the thick of the same
Hoping to find some shade around.
None of that for the soul to soothe
Save for the shadow of the body;
The heat burning there's in directions all
Through the vast expanse about.

It burnt the foot too that moved on,
Unable to bear the heat of the particles stuck;
Moving it backward wouldn't lessen the pain
It went deep beyond the pain of the body,
Not a drop of water anywhere to be seen
And no one there was to guide me therein;
It burnt all over in red flames like,
Crystals of burning sulphur resembling.

Fierce and blazing was the heat
That could scorch the cactus spines fresh,
Scorch them to charcoal, to ashes reduced
And incinerating the ashes further;
Raging and deathly was the heat;
The face wearing fatigue intense,
The expanse open and naked
Could break the back of the neck.

Wake up suddenly as I did
It's a flower grove cool and lovely
(But) the fearsome heat in the day-dream extended
Lingered in my mind for long.
'Are the brook and the grove
The fiery heat that scorched me!'
Thus in fact my wonderment went.

3 இன்பத் தமிழ்

தமிழுக்கும் அமுதென்று பேர் ! —அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர் !
தமிழுக்கு நிலவென்றுபேர் ! — இன்பத்
தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர் !
தமிழுக்கு மணமென்றுபேர் ! — இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர் !
தமிழுக்கு மதுவென்று பேர் ! — இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!
தமிழ் எங்கள் இளமைக்குப் பால் — இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்குவேல் !
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் ! — இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன் !
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள் ! — இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள் !
தமிழ் எங்கள் பிறவிக்குத்தாய் ! — இன்பத்
தமிழ் எங்கள் வலமிக்க உளமுற்ற தீ !

3. THE LOVELY TAMIL

Tamil too is called the ambrosia!
That, the lovely Tamil, is as precious as our life!

Tamil is called the moon!
That, the lovely Tamil, is the water to our society's growth!

Tamil is called the fragrance!
That, the lovely Tamil, is the abode destined of our lives!

Tamil is called the liquor!
That, the lovely Tamil, is the root of the ripe plant of our rights!

Tamil is the milk of our youth!
That, the lovely Tamil, is the spear of our bards!

Tamil is the sky of our eminence!
That, the lovely Tamil, is the honey our vitalizer!

Tamil is the shoulder of our learning!
That, the lovely Tamil, is the steeled prop of our poetic flow!

Tamil is the mother of our genesis!
That, the lovely Tamil, is our quickening fire!

4 தமிழ் வளர்ச்சி

எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்.
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்.
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளியுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்.
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்.

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும் !
தமிழ்மொழியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்.
இலவச நூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்.
எங்கள் தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறைகளைந்தோமில்லை.
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர் !

4. DEVELOPING TAMIL

Works lucid and simple we must write in Tamil;
Works of grammar fresh and new we must make;
Tamil, classical, must be made fecund and flourishing too
With books marked by terminology and illustration meet,
Works that embody the fruits of every newer thought foreign;
A matter of shame it should be to us all here
Were a Tamil, penury afflicting, to go unschooled.

There must flow everywhere unhindered
Works of worldly experience and thought in disciplines all
That are in the language of the common man
That one could read with ease, unaided;
Tamil must steer clear of religions one and all;
There must be free libraries everywhere;
Wasted are generations many
In talk untiring of our Tamil's preeminence;
Its inadequacies we haven't weeded.
Come! let us build up our brilliant Tamil.

5 காதலைத் தீய்த்த கட்டுப்பாடு

வேற்றூர்போய் நள்ளிரவில் வீடுவந்த
வேலனிடம், ஆள் ஒருவன் கடிதம்தந்தான்,
ஏற்றதனை வாசிக்க லுற்றான் வேலன்:
'என்னருமைக் காதலரே, கடைசிச்சேதி;
நேற்றிரவு நாமிருவர் பூந்தோட்டத்தில்
நெடுநேரம் பேசியதை என்தாய் கண்டாள் !
ஆற்றாத துயரால்என் தந்தை, அண்ணன்
அனைவரிட மும்சொல்லி முடித்துவிட்டாள்.

குடும்பத்தின் பெயர்கெடுக்கத் தோன்றிவிட்டாய்
கொடியவளே ! விஷப்பாம்பே ! என்றுதந்தை
தடதடவென் றிருகையால் தலையில்மோதித்
தரையினிலே புரண்டழுதார், அண்ணன் அங்கு
மடமடவென் றேகொல்லைக் கிணற்றில்வீழ்ந்தே
மாய்வார்போல் ஓடிப்பின் திரும்பி வந்து
படுபாவி தாலியற்ற பிறகும்இந்தப்
பழுதுநடை கொள்வதுண்டோ என்று நைந்தார்.

தாயோஎன் எதிர்வந்து, தாலியோடு
சகலமும் போயினஏடி இன்னும்என்ன !
தீயாகிக் கொளுத்திவிட்டாய் எம்மையெல்லாம் !
தெருவார்கள் ஊரார்கள் இதையறிந்தால்
ஓயாமல் தூற்றிடுவார் ! யாம் இவ்வூரில்
உயர்ந்திருந்தோம்; தாழ்த்திவிட்டாய் அந்தோ, நீதான்
பாயேனும் விரித்ததிலே படுப்பதுண்டா
பதியிழந்தால் ? மூதேவி ! என்றுசொன்னாள்.

5. THE RESTRICTION THAT SCORCHED LOVE

Vēlan̲ back home at midnight
After a visit to another village,
A messenger handed him a letter
Which read:
My heart's dear!
It's my last message.
Our meeting last evening in the flower garden
Where we conversed for long
My mother did see;
Perturbation deep impelling
She conveyed it to all
Father, brother and everyone.

Beating his head wild
And writhing on the floor
Father cried, his words flung at me:
"A poisonous snake and an evil one!
You've been here to undo our family's name!"
Brother ran in haste
Towards the backyard well
As if intending to jump into it and die,
But came back then cursing me,

"O sinner! would you take to this sinful course
Widowed as you are!"

தந்தையார் 'அடி உன்னைக் கொன்று போட்டுத்
தலையறுத்துக் கொள்ளுகின்றேன்' என்பார். அண்ணன்
அந்தமதி யற்றவனைக் கொல்வேன்என்றே
அருகிருக்கும் கொடுவாளைப் பாய்ந்தெடுப்பான் !
இந்தவிதம் கொதித்தார்கள் இரவுமட்டும் !
இனிஎன்னால் அவர்கட்குத் தொல்லைவேண்டாம்;
சுந்தரனே, என்காதல் துரையே ! உன்னைத்
துறக்கின்றேன் இன்றிரவில் கடலில்வீழ்ந்தே !'

காதலியின் கடிதத்தில் இதை வாசித்தான் !
கதறினான் ! கடல்நோக்கிப் பறந்தான் வேலன் !
ஈதறிந்தார் ஊரிலுள்ளார் ! ஓடினார்கள் !
எழில்வானம், முழுநிலவு, சமுத்திரத்தின்
மீதெல்லாம் மிதக்கும்ஒளி, அகண்டாகாரம்
மேவு பெருங் காட்சியில்ஓர் துன்பப் புள்போல்
மாதுகடற் பாலத்தின் கடைசிநின்று
வாய்விட்டுக் கதறுகின்றாள் வசமிழந்தாள்:

எனைமணந்தார் இறந்தார்; என் குற்றமல்ல;
இறந்தவுடன் மங்கலநாண், நல்லாடைகள்,
புனை மலர் குங்குமம்அணிகள் போனதுண்டு;
பொன்னுடலும் இன்னுயிரும் போனதுண்டோ ?
எனை ஆளும் காதலுக்கோர் இலக்கியத்துக்
கிசைந்ததெனில் உயிரியற்கை ; நான்என்செய்வேன் ?
தனையடக்கிக் காதலினைத் தவிர்த்து வாழும்
சகம் இருந்தால் காட்டாயோ நிலவேநீதான் !

கண்படைத்த குற்றத்தால் அழகியோன்என்
கருத்தேறி உயிர்ஏறிக் கலந்துகொண்டான் !
பெண்படைத்த இவ்வுலகைப் பல்லாண்டாகப்
பெற்றுணர்ந்த நெடுவானே ! புனலே ! கூறீர்,

Mother came then and burst out:
"What do you look for now
With everything gone with your wedding thread!
You've burnt us all (by your deed)!
Should it be known to the neighbours and the folk of this town,
They'd slander and abuse us to no end!
Our name and standing are gone,
Alas! we now remain slighted by your deed.
Widowed, would one think of ease
The ease and bliss of matrimony
You the accursed!"

And father said:
"I shall sever my head
Killing you first O the base one!"
Brother then would jump to the curved knife nearby
Saying "I would murder that crazy fellow!"
The whole night passed passions burning thus.
Let them be anguished no more on my count.
O the handsome one, the lord of my heart!
I forsake you by falling into the sea tonight!

Contents of the letter read,
Velan cried in anguish
And ran towards the sea in haste.
Tidings known, the villagers followed.
There's the lovely sky and the full moon,
The effulgent light (as if) floating all over;
There stood the woman on the pier's edge
Resembling a distressed bird alone
In the midst of the vast expanse boundless

மண்படைப்பே காதலெனில் காதலுக்கு
மறுப்பெதற்குக் கட்டுப்பா டெதற்குக்கண்டார்?
புண்படைத்த என்நாடே, கைம்மைக்கூர்வேல்
பொழிகின்றாய் மங்கையர்மேல்! அழிகின்றாயே!

ஆடவரின் காதலுக்கும், பெண்கள் கூட்டம்
அடைகின்ற காதலுக்கும், மாற்றமுண்டோ?
பேடகன்ற அன்றிலைப்போல், மனைவிசெத்தால்
பெருங்கிழவன் காதல்செயப் பெண்கேட்கின்றான்!'
வாடாத பூப்போன்ற மங்கைநல்லாள்
மணவாளன் இறந்தால்பின் மணத்தல்தீதோ?
பாடாத தேனீக்கள், உலவாத் தென்றல்,
பசியாத நல்வயிறு, பார்த்ததுண்டோ?

இளமைதந்தாய், உணர்வுதந்தாய், இன்பங்காணும்
இன்னுயிரும் தந்திட்டாய் இயற்கைத்தேவி,
வளமையற்ற நெஞ்சுடையார் இந்நாட்டார்கள்
மறுக்கின்றார் காதலினைக் கைம்மைகூறித்!
தளைமீற வலியில்லேன்! அந்தோ, என்றன்
தண்டமிழின் இனிமைபோல் இனியசொல்லான்
உளமாரக் காதலித்தான் என்னை! அன்னோன்
ஊர்நிந்தை ஏற்பதனைச் சகிப்பேனாநான்!

ஒருயிரும் இரண்டுடலும் நாங்கள்! எம்மை
உளிகொண்டு வெட்டிவிட்ட கட்டுப்பாடே,
தீராத காதலினை நெஞ்சத்தோடு
தீய்த்து விட்டாய் என்றாள் – பின் ஓடிவந்து
சீராளன் தாவினான்! – வீழ்ந்தாள்! – வீழ்ந்தான்!
தேம்பிற்றுப் பெண்ணுலகு! இருவர் தீர்ந்தார்!
ஊரார்கள் பார்த்திருந்தார் கரையில்நின்றே
உளம் துடித்தார்; எனினும் அவர் உயிர்வாழ்கின்றார்.

She jumped into the sea!
He too followed! Gone are the two!
Women sobbed thereon,
The villagers on the shore stood shaken at heart.
But they are not dead.

6 கைம்மைப் பழி

கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே இங்கு
வேரிற் பழுத்த பலா – மிகக்
கொடியதென் றெண்ணிடப் பட்டதண்ணே குளிர்
வடிகின்ற வட்ட நிலா !

சீரற் றிருக்குதையோ குளிர் தென்றல்
சிறந்திடும் பூஞ் சோலை – சீ
சீஎன் றிகழ்ந்திடப் பட்டதண்ணே நறுஞ்
சீதளப் பூ மாலை.

நாடப்படா தென்று நீக்கி வைத்தார்கள்
நலஞ்செய் நறுங் கனியைக் – கெட்ட
நஞ்சென்று சொல்லிவைத் தார்எழில் வீணை
நரம்புதரும் தொனியை.

சூடப் படாதென்று சொல்லிவைத் தார் தலை
சூடத்தகும் க்ரீ டத்தை – நாம்
தொடவும் தகாதென்று சொன்னார் நறுந்தேன்
துவைந்திடும் பொற் குடத்தை !

இன்ப வருக்கமெல் லாம்நிறை வாகி
இருக்கின்ற பெண்கள் நிலை – இங்
கிவ்விதமாக இருக்குதண்ணே ! இதில்
யாருக்கும் வெட்க மிலை !

தன்கண வன்செத்து விட்டபின் மாது
தலையிற்கைம் மைஎன ஓர் – பெருந்
துன்பச் சுமைதனைத் தூக்கிவைத் தார்; பின்பு
துணைதேட வேண்டாம் என்றார்.

6. THE SLANDERED WIDOWHOOD

Here lies unclaimed, O brother
The jackfruit ripe at the root!
Taken for one dreaded, O brother
Is the round moon raining coolness!

Lacking in grace there remains, alas!
The flower grove the cool South Breeze marked!
There stands dispraised, O brother
The wreath of the fragrant lotus flowers!

Rejected as baneful it was
The health-giving goodly fruit!
Wild venom it was called
The strains that the lovely strings of *Veena* issue!

They called it unworthy of adoring the head
The crown most becoming of its kind!
They said it's unworthy of being touched even
The golden pot curdled wholesome honey in!

This is the state of our women here O brother!
The women who are seen as
The source complete of loveliness and joy.
And no one's head hangs down in shame!

துணைவி இறந்தபின் வேறு துணைவியைத்
தேடுமொர் ஆடவன் போல் – பெண்ணும்
துணைவன் இறந்தபின் வேறு துணைதேடச்
சொல்லிடு வோம்புவி மேல்.

'கணை விடு பட்டதும் லட்சியம் தேடும்' நம்
காதலும் அவ்வாறே – அந்தக்
காதற் கணைதொடுக் காத உயிர்குலம்
எங்குண்டு சொல் வேறே?

காதல் இல்லாவிடம் சூனியமாம் புவி
காதலினால் நடக்கும்! – பெண்கள்
காதலுளத்தைத் தடுப்பது, வாழ்வைக்
கவிழ்க்கின்றதை நிகர்க்கும்.

காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே கெட்ட
கைமையைத் தூர்க்கா தீர்! – ஒரு
கட்டழகன் திருத் தோளினைச் சேர்ந்திடச்
சாத்திரம் பார்க்கா தீர்!'

The tragic burden of widowhood
They put on a woman's head
Who survived her husband,
And denied her the bliss of matrimony.

A man his helpmate dying
Goes in for another in marriage;
Let a woman widowed be granted the same,
Let it be the order on the earth now on.

An arrow shot seeks its target,
So does the love human.
Do there exist living beings anywhere
That don't go in quest of love? tell me!

Void is the place that goes without love,
And it's love that makes the world go round!
Thwarting the passion of love in women
Is like undoing life itself.

Let not the heart, the fountain of love be stopped up
With the cursed thing called widowhood!
Don't bring in the authority of scriptures
Against a widowed woman uniting to a handsome youth!

7 மூடத் திருமணம்

'முல்லை சூடி நறுமணம் முழுகிப்
பட்டுடை பூண்டு பாலொடு பழங்கள்
ஏந்திய வண்ணம் என்னருமை மகள்
தனது கணவனும் தானு மாகப்
பஞ்சணை சென்று பதைப்புறு காதலால்
ஒருவரை ஒருவர் இழுத்தும் போர்த்தும்,
முகமல ரோடு முகமலர் ஒற்றியும்,
இதழோடு இதழை இனிது சுவைத்தும்,
நின்றும் இருந்தும் நேயமோடு ஆடியும்
பிணங்கியும், கூடியும் பெரிது மகிழ்ந்தே
இன்பத்துறையில் இருப்பர்' என்று எண்ணினேன்.
இந்த எண்ணத்தால் இருந்தேன் உயிரோடு !
பாழும் கப்பல் பாய்ந்து வந்து
என்மகள் மருகன் இருக்கும் நாட்டில்
என்னை இறக்கவே, இரவில் ஒருநாள்
என்மகள் – மருகன் இருவரும் இருந்த
அறையோ சிறிது திறந்து கிடந்ததை
நள் இராப்பொழுதில் நான் கண்ட போதில்
இழுத்துச் சாத்த என்கை சென்றது;
கழுத்தோ கதவுக்கு உட்புறம் நீண்டது !
கண்களோ மருகனும் மகளும் கனிந்து
காதல் விளைப்பதைக் காண ஓடின !
வாயின் கடையில் எச்சில் வழியக்
குறட்டை விட்டுக், கண்கள் குழிந்து
நரைத்தலை சோர்ந்து, நல்லுடல் எலும்பாய்ச்
சொந்த மருகன் கிழவன் தூங்கினான் !
இளமை ததும்ப, எழிலும் ததும்பக்
காதல் ததும்பக், கண்ணீர் ததும்பி
என்மகள் கிழவனருகில் இருந்தாள்.
சிவந்த கன்னத்தால் விளக்கொளி சிவந்தது !
கண்ணீர்ப் பெருக்கால் கவின்உடை நனைத்தாள் !

7. A FATUOUS MARRIAGE

Decked with *mullai* flowers,
Perfumed all over the body,
And putting on the silken dress,
My daughter precious to my heart
Fruits and milk in hand
Would go to her bed her husband by;
Passion vibrant and youthful marking
They'd plunge into the thick of love play:
Pulling one to the other and covering themselves,
Their faces coming closer and touching,
Their lips together tasting deep;
They'd stand and they'd lie on bed
They'd sport in love intimate
They'd feign discord and be in congress
They'd revel in conjugal bliss intense.
All this I imagined of my daughter,
It's that which kept me alive,
The curs'd ship came then in haste
And took me to the land of daughter and son-in-law
And on a night there
I found the door of their room a little open
It was night deep!
My hands extended to close it full,
But my neck stretched out thro' the door,
My eyes roved in desiring to see
My daughter and son-in-law in amorous bliss;
There was the old man my own son-in-law snoring,

தொண்டு கிழவன் விழிப்பான் என்று
கெண்டை விழிகள் மூடாக் கிளிமகள்
காதலும் தானும் கனலும் புழுவுமாய்
ஏங்கினாள் ; பின்பு வெடுக்கென்று எழுந்தாள்.
சர்க்கரைச் சிமிழியை பாலிற் சாய்த்தாள்.
செம்பை எடுத்து வெம்பி அழுதாள்.
எதையோ நினைத்தாள் ! எதற்கோ விழித்தாள் !
உட்கொளும் தருணம் ஓடிநான் பிடுங்கினேன்.
பாழுந் தாயே ! பாழுந்தாயே !
என்சாவுக்கே உனை இங்கு அழைத்தேன் !
சாதலைத் தடுக்கவோ தாய்எமன் வந்தாய்?
என்று – எனைத் தூற்றினாள். இதற்குள் ஓர்பூனை
சாய்ந்தபாலை நக்கித் தன்தலை
சாய்ந்து வீழ்ந்து செத்தது கண்டேன்.
மண்ணாய்ப் போக ! மண்ணாய்ப் போக !
சமூகச் சட்டமே ! சமூக வழக்கமே !
நீங்கள், மக்கள் அனைவரும்
ஏங்கா திருக்க மண்ணாய்ப் போகவே !

Saliva oozing out at the extremity of the mouth,
Eyes sunk, hair greyed and body a living skeleton like.
And there was my daughter by his side
Youthfulness and beauty and love overflowing.
Tears flowed from her eyes,
Wetting her dress finely made.
Her reddened cheeks turned the light of the lamp red;
And there she was the parrot-like lovely one
Like a worm caught in fire
With eyes fish-like refusing to close
Hoping to see her husband who's aging fast
Awakened from sleep,
She yearned and hungered (for union).
Then she got up sharp in haste
Took the tiny sugar box
Turned it into the milk;
Holding that metal-pot,
She wept piteously,
Then she tarried a little staring awhile;
As she was about to consume it,
I ran forward and snatched it right.
"O mother hapless and insipid!
I called you here as witness to my death!
Have you come to prevent it, O the hell of a mother!"
She started abusing me.
There came a cat just then,
That started licking the milk spilt.
And I saw it falling down dead.

Let it go to dust! Let it go to dust!
Let the marriage of minds incompatible go to dust!
O the codes of the society its rites and rituals!
Let them all go to dust
So that we don't go thwarted!

8 பெண்ணுக்கு நீதி

கல்யாணம் ஆகாத பெண்ணே ! – உன்
கதிதன்னை நீநிச் சயம் செய்க கண்ணே !

(கல்)

வல்லமை பேசியுன் வீட்டில் – பெணை
வாங்கவே வந்திடு வார்கள்சில பேர்கள் ;
நல்ல விலை பேசுவார் – உன்னை
நாளும் நலிந்து சுமந்து பெற்றோர்கள்,
கல்லென உன்னை மதிப்பார் – கண்ணில்
கல்யாண மாப்பிள்ளை தன்னையுங் காட்டார் ;
வல்லி உனக்கொரு நீதி – 'இந்த
வஞ்சகத் தரகர்க்கு நீ அஞ்சவேண்டாம்'

(கல்)

பெற்றவ ருக்கெஜ மானர் – எதிர்
பேசவொண் ணாதவர் ஊரினில் துஷ்டர்,
மற்றும் கடன் கொடுத்தோர்கள் – நல்ல
வழியென்று ஜாதியென் றேயுரைப் பார்கள் ;
சுற்றத்திலே முதியோர்கள் – இவர்
சொற்படி உன்னைத் தொலைத்திடப் பார்ப்பார்.
கற்றவளே ஒன்று சொல்வேன் – 'உன்
கண்ணைக் கருத்தைக் கவர்ந்தவன் நாதன் !'

(கல்)

8. JUSTICE TO WOMEN

O woman not yet united to a man in matrimony!
You be the mistress of your destiny!

There are some men
That would come to your house
To buy you in marriage thro' imperious talk;
There would be offer of a good price,
You would be a piece of stone
In the eyes of your parents,
Who suffered all through to bring you up;
They wouldn't show you the groom too;
O the woman resolute! take it a code for your life –
Be not afraid of these crafty brokers.

The masters of your parents outside,
Those that cannot be spoken against,
The overbearing men of the place,
And the creditors –
All will speak of the 'right' path, the path of caste;
The elders among the kin would go by their words
And see that you're got rid of.
O the learned one listen to me!
Your groom right is the one
Who's drawn your eyes and heart to him!
Even the horse confined in a solitary stable

தனித்துக் கிடந்திடும் லாயம் – அதில்
தள்ளியடைக்கப் படுங்குதி ரைக்கும்
கனைத்திட உத்தர வுண்டு – வீட்டில்
காரிகை நாணவும் அஞ்சவும் வேண்டும் ;
கனத்த உன் பெற்றோரைக் கேளே ! – அவர்
கல்லொத்த நெஞ்சை யுன் கண்ணீரினாலே
நனைத்திடுவாய் அதன் மேலும் – அவர்
ஞாயம் தராவிடில் விடுதலை மேற்கொள் !

(கல்)

மாலைக் கடற்கரை யோரம் – நல்ல
வண்புனல் பாய்ந்திடும் மாநதிதீரம்
காலைக் கதிர் சிந்து சிற்றூர் – கண்
காட்சிகள் கூட்டங்கள் பந்தாடு சாலை
வேலை ஒழிந்துள்ள நேரம் – நீ
விளையாடுவாய் தாவி விளையாடு மான்போல் !
கோலத்தினைக் கொய்வதுண்டோ? – 'பெண்கள்
கொய்யாப் பழக்கூட்டம்' என்றே உரைப்பாய்.

Does have the liberty to neigh.
But a woman within the domestic walls
Should go bashful, shy and timid;
Do make an appeal to your headstrong parents!
Drench their stony hearts with your tears.
Denied justice even then,
Do seek liberty absolute!

In your leisure time earned
Do go in for play free like a deer!
Be it the sea-shore in the evenings,
The banks of a finely flowing river,
A hamlet lit by the rays of the morning sun,
Or exhibitions, public gatherings and play-fields.
Would one seek to destroy (an object of) loveliness?
Proclaim,"Women submit not to fetters"!

9 ஆண் குழந்தை தாலாட்டு

ஆராரோ ஆரரிரோ ஆரரிரோ ஆராரோ
ஆராரோ ஆரரிரோ ஆரரிரோ ஆராரோ

காராரும் வானத்தில் காணும் முழுநிலவே !
நீராரும் தண்கடலில் கண்டெடுத்த நித்திலமே !

ஆசை தவிர்க்கவந்த ஆணழகே சித்திரமே !
ஓசை யளித்துமலர் உண்ணுகின்ற தேன்வண்டே !

உள்ளம் எதிர்பார்த்த ஓவியமே என்மடியில்
பிள்ளையாய் வந்து பிறந்த பெரும்பேறே !

சின்ன மலர்வாய் சிரித்தபடி பால்குடித்தாய்
கன்னலின் சாறே கனிரசமே கண்ணுறங்கு !

நீதிதெரியும் என்பார் நீள்கரத்தில் வாளேந்திச்
சாதியென்று போராடும் தக்கைகளின் நெஞ்சில்

கனலேற்ற வந்த களிறே, எனது
மனமேறுகின்ற மகிழ்ச்சிப் பெருங்கடலே !

தேக்குமரம் கடைந்து செய்ததொரு தொட்டிலிலே
ஈக்கள் நுழையாமல் இட்ட திரைநடுவில்,

பொன் முகத்தி லேயிழைத்த புத்தம் புதுநீலச்
சின்னமணிக் கண்ணை இமைக்கதவால் மூடிவைப்பாய்!

அள்ளும் வறுமை அகற்றாமல் அம்புவிக்குக்
கொள்ளைநோய் போல்மதத்தைக் கூட்டியழும்
வைதீகத்தைப்

9. LULLABY FOR A MALE CHILD

Hush my dear! Hush-a bye!
O the full moon in the sky darkness reigning!
The pearl fished out of the cool ocean!
O the embodiment of male born our longing for one realizing!
O the buzzing honey-bee!
O my beloved child which my heart had yearned for!
O the boon priceless come unto my lap!
You had the milk drunk through your tiny bud like mouth;
O the sweet sugarcane juice, the juice of a ripe fruit, sleep!
O my male elephant that's come to burn the casteists' hearts
Who wage wars in the name of (divisive) ethics!
O the ocean-like source of our ecstasy, hush!
You that lie in the teak-wood cradle
With flies kept off by the curtain therein,
Keep your little blue gem-like eyes closed
The eyes fresh chiselled in your golden forehead;
O my young valiant hero
Who's born to fight vedic orthodoxy pestilence like
That swears by religion leaving the oppressive poverty untouched
To fight it undaunted and uproot it before it blooms and bears fruit!
Sleep O the matchless, youthful shouldered
That have come to subdue the bulls and yoke them to the cart,

போராடிப் போராடிப் பூக்காமல் காய்க்காமல்
வேரோடு பேர்க்கவந்த வீரா, இளவீரா !

வாடப்பல புரிந்து வாழ்வை விழலாக்கும்
மூடப்பழக்கத்தைத் தீதென்றால் முட்டவரும்

மாடுகளைச் சீர்திருத்தி வண்டியிலே பூட்டவந்த
ஈடற்ற தோளா, இளந்தோளா, கண்ணுறங்கு !

'எல்லாம் அவன் செயலே' என்று பிறர்பொருளை
வெல்லம்போல் அள்ளி விழுங்கும் மனிதருக்கும்,

காப்பார் கடவுள்உமைக் கட்டையில்நீர் போகுமட்டும்
வேர்ப்பீர், உழைப்பீர் எனஉரைக்கும் வீணருக்கும்,

மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்டவந்த
தேனின் பெருக்கே, என் செந்தமிழே கண்ணுறங்கு !

The bulls which attempt to butt,
When the superstitions
Which wrought acts of affliction plenty
And rendered life unworthy,
Are called an evil!

Sleep O my Tamil pure and refined and honey overflowing
That have come to show the might and prowess of human shoulders
To those that covet others' possession with ease
Saying 'It is all the will of Heaven',
And to the slothful and the indolent
Who trick others into sweat and toil,
Saying 'God will be by you till you die'.

10 பெண் குழந்தை தாலாட்டு

ஆராரோ ஆரரிரோ ஆரரிரோ ஆராரோ
ஆராரோ ஆரரிரோ ஆரரிரோ ஆராரோ

சோலை மலரே ! சுவர்ணத்தின் வார்ப்படமே !
காலைஇளஞ் சூரியனைக் காட்டும் பளிங்குருவே !

வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால் உண்டென்று பேசவந்த பெண்ணழகே !

நாய்என்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவிக்குத்
தாய்என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவளே !

வெண்முகத்தில் நீலம் விளையாடிக் கொண்டிருக்கும்
கண்கள் உறங்கு ! கனியே உறங்கிடுவாய் !

அன்னத்தின் தூவி அனிச்ச மலரெடுத்துச்
சின்ன உடலாகச் சித்திரித்த மெல்லியலே !

மின்னல் ஒளியே, விலைமதியா ரத்தினமே !
கன்னல் பிழிந்து கலந்த கனிச்சாறே !

10. LULLABY FOR A FEMALE CHILD

Hush my dear! Hush a-bye!
O my darling
The blossom fresh from the grove!
The image cast in gold!
The crystal form which mirrors the morning sun!
O the loveliness of womanhood embodied
That has come to proclaim
'Woman is the very source of
Strength, progress and fortunes of human kind!'

O the gift of this Tamil land
That has come to bring home the strength of motherhood
Even to those that despise and slight womanhood as dogs!

O my sweet lovely dear!
Sleep, close your eyes
The eyes that gleam sapphire like
In your lustrous face!

O the little woman tender-bodied
Made from the feathers of swan
And the *anịccam** flower!
O the gleam of lightning!
A gem priceless!
And the juice of a fruit
Mixed with sugar.

---

* A species of a sensitive tree whose flower droops when exposed or even smelled.

மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடு, மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே !

வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்
தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி !

புண்ணிற் சரம்விடுக்கும் பொய்ம்மதத்தின் கூட்டத்தைக்
கண்ணிற் கனல்சிந்திக் கட்டழிக்க வந்தவளே !

தெய்விகத்தை நம்பும் திருந்தாத பெண்குலத்தை
உய்விக்க வந்த உவப்பே ! பகுத்தறிவே !

எல்லாம் கடவுள்செயல் என்று துடைநடுங்கும்
பொல்லாங்கு தீர்த்துப் புதுமைசெய வந்தவளே !

வாயில் இட்டுத் தொப்பை வளர்க்கும் சதிக்கிடங்கைக்
கோயிலென்று காசுதரும் கொள்கை தவிர்ப்பவளே !

சாணிக்குப் பொட்டிட்டுச் சாமிஎன்பார் செய்கைக்கு
நாணி உறங்கு ; நகைத்துநீ கண்ணுறங்கு !

O the box of camphor
That comes to spread fragrance
Where it stinks of superstitions!

O the noble woman
That has come as a self-sustaining lamp
To drive away the darkness of caste abominable!

O the one
That has come with fiery eyes
To root out sham religious sects
Which probe the wound with arrows!

O joy, O rationality
That has come to save the unthinking women
Who go about believing in the Heaven!

O the one
That has come to herald a new Age
When the evil of finding in awe God's hand in
everything is gone!

O the one
That keeps off the halls of guile called temples
Where gluttons are fed on the money we pay!

O sleep with a smile dear
Feeling repugnant at the acts of those
Who daub the image of dung with saffron spots
And call it God!

11 உலக ஒற்றுமை

தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்யம் இவையுண்டு தானுண் டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன் !
கன்னலடா என்சிற்றூர் என்போனுள்ளம்
கடுகுக்கு நேர்மூத்த துவரையுள்ளம் !
தென்னையுள்ளம் ஒன்றுண்டு தனதுநாட்டுச்
சுதந்தரத்தால் பிறநாட்டைத் துன்புறுத்தல் !

ஆயுதங்கள் பரிகரிப்பார், அமைதி காப்பார்,
அவரவர் தம் வீடுநகர் நாடுகாக்க
வாயடியும் கையடியும் வளரச்செய்வார் !
மாம்பிஞ்சி யுள்ளத்தின் பயனும் கண்டோம் !
தூயஉள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெலாம் 'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம் ! ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்ததாலே.

11. UNITY OF THE WORLD

He who says,
"My wife, my children, my food, my home,
My earning - I have them all,
And I am concerned with them alone",
Is one with a heart
As small as the mustard seed,
A runty wastrel
Unhelpful to the street-mates even!
He who says,
"Sugary is my little native village",
Is one with a heart
Lentil seed sized
That is elder right to the mustard.

There's another -
The coconut-sized heart
That brings distress to other lands
Standing on his own soil of freedom.

Others there are
That have the green unripe mango-sized hearts
Who do away with weapons and work for peace
And yet foster violence of hand and tongue.

The motherly heart -
Pure, loving and large
That treats the ancient humanity as one,
Is the real source of bliss,
Where
There are no feuds no conflicts
With the self-centredness unseated.

12 பேரிகை

துன்பம் பிறர்க்கு ! நல் இன்பம் தமக் கெனும்
துட்ட மனோபாவம்,
அன்பினை மாய்க்கும் ; அறங்குலைக்கும் ; புவி
ஆக்கந் தனைக் கெடுக்கும் !
வன்புக் கெலாம் அதுவேதுணை யாய்விடும்
வறுமை யெலாம் சேர்க்கும் !
'இன்பம் எல்லார்க்கும்' என்றே சொல்லிப் பேரிகை
எங்கும் முழங்கிடுவாய் !

தாமும் தமர்களும் வாழ்வதற்கே இந்தத்
தாரணி என்ற வண்ணம்,
தீமைக் கெல்லாம் துணையாகும்; இயற்கையின்
செல்வத்தையும் ஒழிக்கும் !
தேமலர்ச் சோலையும் பைம்புனல் ஓடையும்
சித்தத்திலே சேர்ப்போம் !
'ஷேமம் எல்லார்க்கும்' என்றே சொல்லிப் பேரிகை
செகம் முழங்கிடுவாய் !
நல்லவர் நாட்டினை வல்லவர் தாழ்த்திடும்
நச்சு மனப் பான்மை,
தொல்புவி மேல்விழும் பேரிடியாம்; அது
தூய்மைதனைப் போக்கும் !
சொல்லிடும் நெஞ்சில் எரிமலை பூகம்பம்
சூழத் தகாது கண்டாய் !
'செல்வங்கள் யார்க்கும்' என்றே சொல்லிப் பேரிகை
திக்கில் முழக்கிடுவாய் !

12. THE (KETTLE) DRUM

The mentality abject and wicked
'Pleasures to me and pain unto others'
Will kill love, dissolve virtue and dissipate
mankind's progress,
An aid to hard-heartedness it'll prove
And reduce one to penury too.
Beat the drum everywhere
Proclaiming, 'Happiness to everyone'.

'That this world does exist
For me and for my kin to live'
Is a mentality
Leading one to all ills
And bringing ruin to the wealth Nature endowed.
Let' learn a lesson
From the groves of fragrant and honey-bearing
flowers
And the streams of water flowing gently along.
Beat the drum the world around
Proclaiming 'Prosperity to everyone'.

The state of mind vicious and foul
That seeks the triumph of the mighty over the good
Is a blow thunder-bolt like on this ancient world,
Which brings virtue to nought!
No volcano or earthquake
Erupts to distress the mind
That brings this truth home.
Beat the drum everywhere
Proclaiming 'The wealth of the world to all'.

13 கூடித் தொழில் செய்க

கூடித் தொழில்செய்தோர் கொள்ளைலா பம்பெற்றார்
வாடிடும் பேதத்தால் வாய்ப்பதுண்டோ தோழர்களே !

நாடிய ஓர் தொழில் நாட்டார் பலர் சேர்ந்தால்
கேடில்லை நன்மை கிடைக்குமன்றோ தோழர்களே !

சிறுமுதலால் லாபம் சிறிதாகும்; ஆயிரம்பேர்
உறுமுதலால் லாபம் உயருமன்றோ தோழர்களே !

அறுபதுபேர் ஆக்கும் அதனை ஒருவன்
பெறுவதுதான் சாத்தியமோ பேசிடுவீர் தோழர்களே!

பற்பலபேர் சேர்க்கை பலம்சேர்க்கும்; செய்தொழிலில்
முற்போக்கும் உண்டாகும் முன்னிடுவீர் தோழர்களே !

ஒற்றைக் கைதட்டினால் ஓசை பெருகிடுமோ
மற்றும் பலரால் வளம்பெருமோ தோழர்களே !

ஒருவன் அறிதொழிலை ஊரார் தொழிலாக்கிப்
பெரும்பே றடைவதுதான் பெற்றி என்க தோழர்களே !

இருவர் ஒருதொழிலில் இரண்டுநாள் ஒத்திருந்த
சரிதம் அரிதுநம் தாய்நாட்டில் தோழர்களே !

நாடெங்கும் வாழ்குவதிற் கேடொன்று மில்லைஎனும்
பாடம் அதைஉணர்ந்தாற் பயன்பெறலாம் தோழர்களே !

பீடுற்றார் மேற்கில் பிறநாட்டார் என்பதெலாம்
கூடித் தொழில்செய்யும் கொள்கையினால் தோழர்களே !

13. BAND TOGETHER IN WORK

Rich profit collectivity in work yields
And what do you get by discord unproductive
O comrades!

Doesn't prosperity and not impoverishment result in
When people set about a chosen task together
O comrades!

A principal small yields a meagre gain,
Will not that by a thousand hands raise the profit
high O comrades!

Should the fruits of the toil of sixty hands
Go to an individual, tell me O comrades!

Several hands together add might and strength
It'd be a deed pace-setting, venture it O comrades!

Will the clapping by a single hand produce sound
Or do we need many in togetherness to
see prosperity O comrades?

Success is to raise the skill of one
To be the skill known to all and increase the public
weal O comrades!

It's rare to see in our mother land O comrades
Two men work together in harmony for days two!

No harm we'd come into when there's fulfilment in all
This lesson known, benefit accrues sure O comrades!

That the Western world has seen progress and
prosperity
Is what their collectivity of labour brought
O comrades!

ஐந்துரூபாய்ச் சரக்கை ஐந்துபணத்தால் முடித்தல்
சிந்தை ஒருமித்தால் செய்திடலாம் தோழர்களே !

சந்தைக் கடையோநம் தாய்நாடு? லக்ஷ்ம்பேர்
சிந்தை வைத்தால்நம் தொழிலும் சிறப்படையும்
தோழர்களே !

வாடித் தொழிலின்றி வறுமையாற் சாவதெல்லாம்
கூடித் தொழில்செய்யாக் குற்றத்தால் தோழர்களே !

கூடித் தொழில்செய்யாக் குற்றத்தால் இன்றுவரை
மூடிய தொழிற்சாலை முக்கோடி ! தோழர்களே !

கூடைமுறம் கட்டுநரும் கூடித் தொழில்செய்யின்
தேடிவரும் லாபம் சிறப்புவரும் தோழர்களே !

A thing that needs rupees five to make could be
made with coins five even
When there is harmony of minds undistracted
O comrades!

Is our mother land a noisy bazaar, O comrades
A collective will of hands a lakh would take our
industries to heights too!

Ailing without a job and starvation deaths
Are all due to the crime of separateness of toil
O comrades!

That industries innumerable in number got closed
Is due to the crime of the absence of collectivity
O comrades!

Collectivity in work brings profit and eminence
Be it even the basket and winnowing fan making
O comrades!

14 ஆய்ந்துபார் !

சாந்தியால் உலகம் தழைப்பது நன்றா?
சமயபே தம்வளர்த்தே தளர்வது நன்றா?
மாந்தரிற் சாதி வகுப்பது சரியா?
மக்கள் ஒரே குலமாய் வாழ்வது சரியா?

வாய்ந்தபோர்க் குறிபோல் மதக்குறி இனிதா?
மனமொழி மெய்ஒன்றி மகிழுதல் இனிதா?
ஆய்ந்துபார் நெஞ்சமே அமைதிதான் சிறப்பா?
அண்டை வீட்டைப்பறிக்கும் சண்டைதான்சிறப்பா?

காணுமானிடரைக் கனம் செயல் முறையா?
கடவுள் எனும் மயக்கில் கவிழ்ப்பது முறையா?
மாணுறும் தன்னம்பிக்கை வளர்ப்பது நலமா?
வயப்படும் பக்தியினால் பயப்படல் நலமா?

வீணரைப் பணிவது மக்களின் கடனா?
மேவும் உழைப்பினிலே ஏவுதல் கடனா?
நாணு மூடவழக்கம் நாடுதல் பெரிதா?
நல்லறி வென்னும்வழிச் செல்லுதல் பெரிதா?

14. PONDER OVER...!

Which is good

– Should the world prosper thro' peace
Or should we go degenerate thro' religious discords?

Which is right

– Should there be distinctions of caste
Or should we live as one race one people?

Which is wholesome

– Should we be marked by religious stamp like that
belligerency imperious
Or should we rejoice with body and mind united?

Which is commendable, ponder over

– Is it peace and tranquility
Or discord and malice towards the neighbours?

Which is proper

– Is it to honour the humans here and now
Or to go subversive in the illusion of god?

Which is beneficial

– Is it to foster self-confidence honour-giving
Or to live in fear through submissive faith in god?

Which is the duty of men

– Is it to be subservient to men slothful
Or to command thro' toil and industry coveted?

Which is great

– Is it to acquiesce in superstitions shameful
Or to seek the path of wisdom?

கோயிலுக் கொன்று கொடுத்திடல் அறமா?
கோடிகொடுக்கும் கல்வி தேடிடல் அறமா?
வாயிலில் வறியரை வளர்த்திடல் அன்போ?
மடத்தில் வீணிற்பொருளைக் கொடுத்திடல் அன்போ?

நாயிலுங் கடையாய் நலிவது மேலா?
நல்ல கூட்டுத்தொழில்கள் நாட்டிடல் மேலா?
ஒய்வறியார் உறங்க இடந்தரல் உயர்வா?
ஊரை வளைக்கும்குரு மார்செயல் உயர்வா?

மாதர்தம் உரிமை மறுப்பது மாண்பா?
மாதர் முன்னேற்றத்தால் மகிழ்வது மாண்பா?
மேதினி துயர்பட விரும்புதல் இதமா?
விதவைக்கு மறுமணம் உதவுதல் இதமா?

கோதையர் காதல்மணம் கொள்வது சீரோ?
குழந்தைக்கு மணஞ்செய்து கொல்வது சீரோ?
போதனையாற் பெண்கள் பொதுவெனல் கனமோ?
பொட்டுக்கட்டும் வழக்கம் போக்குதல் கனமோ?

பாழ்படும் பழமை சூழ்வது திறமா?
பகுத்தறிவால் நலம் வகுப்பது திறமா?
தாழ்பவர் தம்மைத் தாழ்த்துதல் சால்போ?
தனம் காப்பவர் தங்கள் இனம் காத்தல் சால்போ?

Which is virtuous

– Is it to provide for a temple
Or to seek learning even if it means spending a fortune?

Which is love and kindness

– Is it to help the poor and the needy at our doorstep
Or to pour in a fortune in vain for a mutt?

Which is worthy

– Is it to go impoverished worse than a dog even
Or to establish a unit of work with many hands joined?

Which is the right deed

– Is it to provide for the toiling and sweating to retire
Or the one the greedy priests pursue?

Which is just

– Is it to deny the rights of women
Or to rejoice over their advancement?

Which is virtuous

– Is it to desire the adversity of this world
Or to lend a hand with widow remarriage?

Which is in order

– Is it for women to go in for love marriage
Or to perpetrate child marriages?

Which is honourable

– Is it to make women public property by vicious counsel
Or to abolish dedication of dancing girls to temples
tying marriage badges round their necks?

Which is sound

– Is it to cling to things uncreative of the old
Or to chart the rightful course thro' a rational mind?

Which is nobility

– Is it to disgrace the weak and the lowly
Or is it the affluent sheltering their clan?

ஆழ்வுறும் ஆத்திகம் வைதிகம் சுகமா?
அகிலமேற் சமதர்மம் அமைப்பது சுகமா?
சூழும் நற்பேதம் தொடர்வது வாழ்வோ?
சுயமரியாதையால் உயர்வது வாழ்வோ?

Which is fulfilling

– Is it the sinking faith in divinity and vedic conformity
  Or to found a socialist order on this earth?

Which is worth-living

– Is it the continuance of discrimination prevalent
  Or to rise in stature thro' self-respect?

15 முன்னேறு !

சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்
தாங்கி நடைபெற்றுவரும் சண்டை யுலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலக்கழிப்போம்; பின்னர்
ஒழித்திடுவோம் ; புதியதோர் உலகம் செய்வோம் !
பேதமிலா அறிவுடைய அவ்வுலகத்திற்குப்
பேசு சுயமரியாதை உலகு எனப் பேர்வைப்போம் !
ஈதேகாண் ! சமூகமே, யாம் சொன்னவழியில்
ஏறுநீ ! ஏறுநீ !! ஏறுநீ !!! ஏறே.

அண்டுபவர் அண்டாத வகை செய்கின்ற
அநியாயம் செய்வதெது? மதங்கள் அன்றோ?
கொண்டு விட்டோம் பேரறிவு, பெருஞ்செயல்கள்
கொழித்து விட்டோம் என்றிங்கே கூறுவார்கள்,
பண்டொழிந்த புத்தன் ராமாநுஜன், மு
கம்மது, கிறிஸ்து – எனும் பலபேர் சொல்லிச்
சண்டையிடும் அறியாமை அறிந்தாரில்லை !
சமூகமே ஏறுநீ, எம் கொள்கைக்கே !

15. ADVANCE

Let's harrass this world
In the manner of a sliver in the wind
The world that marks feuds and conflicts
Born of differences of religion, caste and superstitions;
Such a world we will destroy then,
And make a brave new world!
We shall name this enlightened world of harmony
'The world of self-respect gloried'
Lo, you Society
Follow this order I've commended
Go forward and go up!

What are those unjust things
That bring discord among the affable and the kindly?
Aren't they the religions?
They'd make tall claims, proclaiming
"We've brought enlightenment,
We've accomplished things extraordinary!"
But they know not the crazy feuds by people
Who swear by the names of the dead past –
The Buddha, Ramanujan, Mohamed, Christ and a lot others –
O Society!
Go forward, and go up
Along the path I've shown.

16 உலகப்பன் பாட்டு

பகுத்தறிவு மன்றத்தில் உலகம் என்ற
பழயமுத லாளியினை நிற்கவைத்து
மிகுத்திருந்த உன்நன்செய், புன்செய் யாவும்
வெகுகாலத் தின்முன்னே, மக்கள்யாரும்
சுகித்திருக்கக் குத்தகைக்கு விட்டதுண்டோ?
சொல்! என்றேன்; உலகப்பன் ஆம்ஆம் என்றான்.
வகுத்தஅந்தக் குத்தகைக்குச் சீட்டுமுண்டோ
வாய்ச்சொல்லோ என்றுரைத்தேன். வாய்ச்சொல் என்றான்

குத்தகைக்கா ரர்தமக்குக் குறித்த எல்லை
குறித்தபடி உள்ளதுவா என்று கேட்டேன்.
கைத்திறனும் வாய்த்திறனும் கொண்டபேர்கள்
கண்மூடி மக்களது நிலத்தையெல்லாம்
கொத்திக்கொண் டேப்பமிட்டு வந்த தாலே
கூலிமக்கள் அதிகரித்தார், என்னசெய்வேன்!
பொத்தல் இலைக் கலமானார் ஏழைமக்கள்.
புனல்நிறைந்த தொட்டியைப்போல் ஆனார்செல்வர்;

அதிகரித்த தொகைதொகையாய்ச் செல்வமெல்லாம்
அடுக்கடுக்காய்ச் சிலரிடம்போய் ஏறிக்கொண்டு
சதிராடு தேவடியாள் போல் ஆடிற்றுத்!
தரித்திரரோ புழுப்போலே துடிக்கின்றார்கள்;
இதுஇந்நாள் நிலை என்றான் உலகப்பன் தான்!
இந்நிலையி லிருப்பதனால் உலகப்பா நீ!
புதுக்கணக்குப் போட்டுவிடு, பொருளைஎல்லாம்
பொதுவாக எல்லார்க்கும் குத்தகைசெய்.

16. THE SONG OF THE COMMON MAN

Summoning the old capitalist called 'the world'
To the bar of the Rationalist Assembly
I asked,
"In the days of yore
Had you let on lease
Your surplus lands wet and dry
For others to enjoy?"

Came the affirmation of the Common man instant:
"Yes, O yes".
"Do you have the bond of lease thereof
Or was it by word of mouth?" I asked.

"Word of mouth" pat came the reply.
"Does the boundary line of the land given to
the lessee
Remain intact?" I went on.
Replied the Common man thereon:
"Persons of physical and verbal might
Grabbing and devouring all along
The lands of the hapless unlettered lot,
The number of landless wage-earners increased,
And helpless I am!
The poor went emaciating like a leaf-plate
holes-ridden
With the affluent plumping up like a tub of
water full up.
But the have-nots there remain wriggling like worms;

ஏழைமுத லாளியென்ப தில்லாமற்செய்,
என்றுரைத்தேன். உலகப்பன் எழுந்து துள்ளி,
ஆழமப்பா உன் வார்த்தை ! உண்மையப்பா,
அதற்கென்ன தடையப்பா, இல்லையப்பா ;
ஆழமப்பா உன்கருத்து, மெய்தானப்பா,
அழகாயும் இருக்குதப்பா, நல்லதப்பா,
தாழ்வுயர்வு நீங்குமப்பா, என்று சொல்லித்
தகதகென ஆடினான். நான்சிரித்து,

ஆடுகின்றாய் உலகப்பா ! யோசித்துப்பார் !
ஆர்ப்பாட்டக் காரர்இதை ஒப்பாரப்பா !
தேடப்பா ஒருவழியை என்று சொன்னேன்.
செகத்தப்பன் யோசித்துச் சித்தம்சோர்ந்தான்.
ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால், ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பாநீ !

This is the state we're in now!"
Said the Common man.
"Since this is the state prevailing, O my man!
Reorder the scheme of things in tune thereto
And redistribute things one and all
Leasing them out in equal measure to everyone!
And undo the distinction of the lordly and the poor".
Thereupon the Common man sprang up and said:
"Profound are your words, true they are too O man!
There're no hinderances whatsoever, nothing to obstruct that!
Profound, splendid, healthy and practicable are your ideas,
The distinctions of the high and the low would go sure!"
Danced he in joy unbounded.
Said I laughing:
"You're dancing in joy, O my Common man!
But ponder over it and see,
The clamouring, vociferous will never assent to it,
Strive and find a course right".
The Common man went on thinking over it
And came disspirited and despondent.
"When the poor, who are on the run now,
Get awakened and begin to hit
There would be obliteration instantaneous
Of the oppressed-oppressor distinctions,
There would remain no protest or dissent
Do understand this, O my man!"

17. உலகம் உன்னுடையது !

பள்ளம் பறிப்பாய், பாதாளத்தின்
அடிப்புறம் நோக்கி அழுந்துக ! அழுந்துக !
பள்ளந்தனில்விழும் பிள்ளைப் பூச்சியே,
தலையைத்தாழ்த்து ! முகத்தைத்தாழ்த்து !
தோளையும் உதட்டையும் தொங்கவை ! ஈன
உளத்தை, உடலை, உயிரைச் சுருக்கு !
நக்கிக்குடி ! அதை நல்லதென்றுசொல் !
தாழ்ந்துதாழ்ந்து தாழ்ந்த நாயினும்
தாழ்ந்துபோ ! குனிந்து தரையைக்கௌவி
ஆமையைப் போலே அடுங்கி ஒடுங்கு !
பொட்டுப் பூச்சியே, புன்மைத் தேரையே,
அழு ! இளி ! அஞ்சு ! குனி ! பிதற்றுக் !
கன்னங்கருத்த இருட்டின் கறையே,
தொங்கும் நரம்பின் தூளே ! இதைக்கேள் :
மனிதரில் நீயுமோர் மனிதன் ; மண்ணன்று !
இமைதிற ! எழுந்து நன்றாய் எண்ணுவாய் !
தோளைஉயர்த்துச், சுடர்முகம் தூக்கு !
மீசையை முறுக்கி மேலே ஏற்று !
விழித்தவிழியில் மேதினிக் கொளிசெய் !
நகைப்பை முழக்கு ! நடத்து லோகத்தை !

21

17. THE WORLD IS YOURS

Make a pit
Go into it deep
Go further and further deep
Toward the lowest of the nether worlds!
O gryllus that falls into the hole!
Lower your head! Lower your face!
Have your shoulders and lips come drooping!
Shrink your ignoble heart, body and soul!
Go about sneaking in quest of food, as if an honour!
Grow abject,
More abject than a mean dog,
Bend down so as to hold the earth with the mouth
And be shrunk and withdrawn like a tortoise!
O venomous spider, O mean toad!
Cry! laugh foolishly! cringe! crouch! prate!
O the dark spot on the darkness intense!
O the dust of the loosened nerve!
Listen to this:
You're one of the human kind, not the dust of the earth!
Open your eyes! Rise up and reason!
Lift your shoulders! Raise your glowing face!
Twist your moustache and make it erect upward!.
With your eyes lustrous radiate light to the world!
Let your laughter reverberate!
Steer the world!
Raze the wall that separates you from your neighbour!

உன்வீடு — உனது பக்கத்தின் வீட்டின்
இடையில் வைத்த சுவரை இடித்து
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டொடு நாட்டை இணைத்து மேலே
ஏறு ! வானை இடிக்கும் மலைமேல்
ஏறு விடாமல் ! ஏறு மேன்மேல் !
ஏறிநின்று பாரடா எங்கும் ;
எங்கும் பாரடா இப்புவி மக்களைப்
பாரடா உனது மானிடப் பரப்பைப் !
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம் !
'என்குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட்பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள் !
அறிவை விரிவுசெய் ! அகண்டமாக்கு !
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை !
அணைந்துகொள் ! உன்னைச் சங்கமமாக்கு.
மானிட சமுத்திரம் நானென்று கூவு !
பிரிவிலை எங்கும் பேதமில்லை
உலகம் உண்ணஉண் ! உடுத்த உடுப்பாய் !
புகல்வேன் ; 'உடைமை மக்களுக்குப் பொது'
புவியை நடத்துப் பொதுவில் நடத்து !
வானைப் போல மக்களைத் தாவும்
வெள்ள அன்பால் இதனைக்
குள்ள மனிதர்க்கும் கூறடா தோழனே !

Let one street lead to the other with no curtains of
separateness?
Undo the lines of boundary across the nations!
And march ahead!
Ascend the mountain that touches the sky
Ascend it with spirits unyielding!
Climb higher and higher
And direct your gaze around standing there!
Look around and see the inhabitants peopling
this world!
See the extent of this human habitation!
See O my man the multitude of your fellow beings!
See the ocean of humanity and rejoice at it!
The humanity that binds you to it as a member of
its race!
Extend the limits of your knowledge!
And let it grow wholesome and complete!
Let your breadth of vision reach out to all!
Stretch your hands to embrace one and all!
Make yourself one with the humanity
And proclaim this oneness loud and clear!
No divisions there're ! No distinctions either!
Eat as the world eats and dress as the world does!
Take it from me:
'The wealth of the world is common to one and all!
Govern this world,
And do it for the common good!
Take this word across
– Even to the dwarfish lot
Through your love flood-like
As does the firmament above!'

18 வியர்வைக் கடல்

அதிகாலை

கிழக்கு வெளுக்குமுன் வெளியிற் கிளம்பினேன்
ஒளிசெய்யும் மணியிருள், குளிர்ச்சி, நிசப்தம்,
இவற்றிடை என்னுளம் துள்ளும் மான்குட்டி !
உத்ஸாகம் எனைத் தூக்கி ஒடினது !

இயற்கை

குன்றம் இருக்கும் அக்குன்றத்தின் பால்
குளமும், அழகிய குளிர்பூஞ் சோலையும்
அழகு செய்யும் ! அவ்விடத் தில்தான்
என்றன் சொந்த நன்செய் உள்ளது.

பகல்

கடல்மிசை உதித்த பரிதியின் நெடுங்கதிர்
வானெலாம் பாய்ந்தது ! பறந்தது வல்லிருள் !
புவியின் சித்திரம் ஒளியிற் பொலிந்தது.
இயற்கை தந்த எழிலிடை நடந்தேன்.

வயல்

வளம்பெற நிறைந்த இளம்பயிர்ப் பசுமை
மரகதம் குவிந்த வண்ணம் ஆயிற்று;
மரகதக் குவியல்மேல் வாய்ந்த பனித்துளி
காணக்கண் கூசும் வயிரக் களஞ்சியம் !
பரந்தஎன் வயலைப் பார்த்துக்கொண் டிருந்தேன்
மகிழ்ச்சி தவிர மற்றொன்று காணேன் !

18. THE SEA OF SWEAT

Dawn

I set out before it dawned
My heart leaped in joy like the young of the deer
In the thick of the lovely morning twilight, coolness and quietude,
I walked in transports of joy and zest.

Nature

A hill there was and a tank nearby
A lovely cool flower-grove around
A scene of beauty and grace it truly looked
Wherein was located the wet land my own it was.

The day

Rose the sun over the ocean
Whose rays interminable stretched out
And the intense darkness vanished in haste
Earth's beauty there shone in this effulgent light.
And I walked on in beauty Nature endowed.

The fields

The greenness teeming, fecund and tender
Looked like emerald piled up conically;
The dew drops on this emerald pile
Looked indeed like the store-house of glittering diamonds;
A gaze extended at my fields vast
Gave me nothing but ecstasy.

உழைப்பு

களையினைக் களைவது கருதி, எனது
பண்ணை ஆட்கள், பலபேர் வந்தனர்.
என்னை வணங்கினர்; வயலில் இறங்கினர்.
வில்லாய் வளைந்தது மேனி; அவர்தோள்
விசையாய்க் களைந்தது களையின் விளைவை !
முகவிழி கவிழ்ந்து வயலில் மொய்த்தது.

நடுப்பகல்

காலைப் போதினைக் கனலாற் பொசுக்கிச்
சூரியன் ஏறி உச்சியிற் சூழ்ந்தான்.
சுடுவெயில் உழவர் தோலை உரித்தது;
புதுமலர்ச் சோலையில் போய்விட்டேன் நான்.

வெயில்

குளிர்புனல் தெளிந்து நிறைந்த மணிக்குளம் !
நிழல்சேர் கரையில் நின்றுகொண் டிருந்தேன்.
புழுக்கமும் வியர்வையும் எழுப்பி என்னை
நலிவு செய்த நச்சு வெய்யில்,
வானி லிருந்து மண்ணிற் குதித்துத்
தேன்மலர்ச் சோலைச் செழுமை கடந்தென்
உளத்தையும் உயிரையும் பிளப்பது விந்தை !
குளத்தில் விழுந்து குளிக்கத் தொடங்கினேன்.
வெள்ளப் புனலும் கொள்ளிபோல் சுட்டது.

Toil

There came my farmhands many to weed the fields.
Reverence to me paid, they set about their work
in the fields,
They set about with their bodies bending down in zest;
Their shoulders shed the sweat fast and hard,
Their faces bowed to the ground attending to the work.

Noon

The sun ascended to the zenith
Scorching and incinerating the morningtide,
It did scorch the skin of the workers too,
And I went into the fresh flower grove.

The Heat of the Sun

There's the lovely pond brimming with water cool,
fresh and clear.
And I was standing under the cool shades on the shore.
But a wonder it must be;
The killing heat of the sun
Which descended from the skies
Penetrating the cool honeyed fragrance of the grove,
Drew out sultriness and sweat from me;
And rent my body and being as well;
I jumped into the pond and started taking a bathe
Even the water scorched me a torch like.

உழைப்புத் துன்பம்

காலைப் போதினைக் கனலால் பொசுக்கிச்
சோலையும் கடந்து சுடவந்த வெய்யில்
விரிபுனற் குளத்தையும் வெதுப்பிய தெண்ணினேன்.
எண்ணு போதென் கண்ணின் எதிரில்
வியர்வையும் அயர்வுமாய்ப் பண்ணை யாட்கள்
வந்து நின்று வணக்கம் செய்தனர்.
ஐயகோ நெஞ்சமே, இந்த ஆட்கள்
தாங்கொணாக் கனலை எவ்வாறு தாங்கினர்?

வியர்வைக் கடலின் காட்சி

களைபோக்கு சிறுபயன் விளைக்க இவர்கள்
உடலைக் கசக்கி உதிர்த்த வியர்வையின்
ஒவ்வொரு துளியிலும் கண்டேன்
இவ்வுல குழைப்பவர்க்குரிய தென்பதையே!

The Pain of Toil

I reflected on the heat of the sun
That came incinerating the morningtide
And warmed the waters of the pond too.
As I went reflecting thus,
There appeared before my mind's eye
The farmhands sweating and exhausted
Bowing their heads in reverence
Alas, O my heart!
How did these men bear this unbearable heat?

The Sight of the Sea of Sweat

To bring about a gain
Small though it is
By weeding the fields
They squeeze their bodies with sweating profuse;
I could only see
In every drop of their sweat
That this earth belongs to the toiling lot.

19 · நீங்களே சொல்லுங்கள் !

சித்திரச் சோலைகளே ! உமை நன்கு
திருத்த இப் பாரினிலே — முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ ! உங்கள் வேரினிலே.

நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே ! — உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே.

தாமரை பூத்த தடாகங்களே ! உமைத்
தந்தஅக் காலத்திலே — எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே.

மாமிகு பாதைகளே ! உமை இப்பெரு
வையமெ லாம் வகுத்தார் — அவர்
ஆமை எனப்புலன் ஐந்தும் ஒடுங்கிட
அந்தியெலாம் உழைத்தார்.

ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே ! — உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ ? — நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்லவோ ?

கீர்த்திகொள் போகப் பொருட்புவியே ! உன்றன்
கீழிருக்கும் கடைக்கால் — எங்கள்
சீர்த்தொழி லாளர் உழைத்த உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல் !

நீர்கனல் நல்ல நிலம்வெளி காற்றென
நின்ற இயற்கைகளே ! — உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை ? தொழி
லாளர் தடக்கைகளே !

19. TELL ME YOURSELVES

O the lovely flower gardens!
How many of our comrades
Should have shed their blood
At your roots
To see you to this state blooming?

O the fertile land paddy copiously growing
Brought to this state by toiling hands honest and unfailing;
Our eyes haven't seen the number of men
That perspired in drops profuse from their foreheads
To bring you to this fecundity.

O tanks filled with lotus flowers!
Shall we tell the world

How our brothers virtuous perished
When you were brought into existence?

O the highways long and broad!
You were laid the wide world across,
They toiled thereto beyond the day even
With their five senses drawn in tortoise like.

O the machinery in tumultous motion!
Shall I recount your being and origin?
Didn't the sweat and toil of the common workmen
See you into existence?

தாரணியே ! தொழிலாளர் உழைப்புக்குச்
சாட்சியும் நீயன்றோ? — பசி
தீரும் என்றால் உயிர்போகும் எனச்சொல்லும்
செல்வர்கள் நீதி நன்றோ ?

எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ ? — இனிப்
புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும்
புதரினில் தூங்கிடுமோ ?

கிலியை விடுத்துக் கிளர்ந்தெழுவார் இனிக்
கெஞ்சும்உத் தேசமில்லை — சொந்த
வலிவுடையார் இன்ப வாழ்வுடையார் இந்த
வார்த்தைக்கு மோசமில்லை.

O the gloried earth of things pleasurable!
The base on which you stand
Comprises the shattered nerves and skin
Of our toiling workmen accomplished!

O the world of Nature
Earth, wind, fire, water and sky comprising!
What are they that this world you sustain gifted?
They are the large, stout hands of our workmen!

Aren't you witness to our workmen's toil, O world?
Is the order of the moneyed just,
Who say 'starve unto death'
When the labourers seek appeasement of their hunger?

Would the lions go grieving
Giving all to the rats to eat?
Would the tigers go slumbering in bushes
Leaving their food to the foxes henceforth?

They shedding fear awaken and arise
No longer would they beg and cringe!
'Those of strength self-earned prosper sure'
Tested and true are these words.

20. புதிய உலகு செய்வோம்

புதியதோர் உலகம் செய்வோம் — கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம் *(புதிய)*

பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம். *(புதிய)*

இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்
'இதுஎனதெ' ன்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம். *(புதிய)*

உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்
'ஒருபொருள்தனி' எனும் மனிதரைச் சிரிப்போம் ! *(புதிய)*

இயல் பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம். *(புதிய)*

20. LET US MAKE A NEW WORLD

Let us make a new world
And unmake the evil, warring one!
Let us take the message of socialism through the directions eight
And cherish it as one sacred, and dear to life
Let our hearts all be wet in the river of love
And let us eschew the tyranny of 'this is mine'.
Let us burn our supineness in the flames of promptitude
And mock at men who swear by individual property.
Let us starve when denied of Nature's bounty
And share it amongst all when it comes.

21 • சுதந்திரம்

தித்திக்கும் பழம் தின்னக் கொடுப்பார்;
மதுரப் பருப்பு வழங்குவார் உனக்குப்;
பொன்னே, மணியே, என்றுனைப் புகழ்வார்;
ஆயினும் பச்சைக் கிளியே அதோபார்!
உன்னுடன் பிறந்த சின்ன அக்கா,
வான வீதியில் வந்து திரிந்து
தென்னங் கீற்றுப் பொன்னூசல் ஆடிச்
சோலை பயின்று சாலையில் மேய்ந்து
வானும் மண்ணுந்தன் வசத்திற் கொண்டாள்!
தச்சன் கூடுதான் உனக்குச் சதமோ?
அக்கா அக்கா என்றுநீ அழைத்தாய்.
அக்கா வந்து கொடுக்கச்
சுக்கா மிளகா சுதந்தரம் கிளியே?

21. FREEDOM

Luscious fruits they'd offer you
And nuts honeyed too!
Flattering terms 'O gold-like and gem-like one!'
Would mark their praise of you;
But look there O green parrot
Your younger sister
Flying through the sky with abandon,
Swimming over the fronds of the coconut tree,
Roaming about the groves
And moving across the lanes and streets
As if the earth and the sky were her own!
But are you fated to captivity in this wooden cage?
You called her
'O sister, sister!'
But
Is freedom ginger or pepper
Which one's sister could fetch one?
Tell me O parrot!

22. நம் மாதர் நிலை

பழங்கல அறைக்குளே பதினைந்து திருடர்கள்
பதுங்கிடவும் வசதியுண்டு.
பதார்த்தவகை மீதிலே ஒட்டடையும் ஈக்களும்
பதிந்திடவும் வசதியுண்டு.
முழங்கள் பதினெட்டிலே மாற்றமில்லா விடினும்
முன்றானை மாற்றமுண்டு.
முடுகிவரும் நோய்க்கெலாம் கடவுளினை வேண்டியே
முடிவடைய மார்க்கமுண்டு.

தொழுங்கணவன் ஆடையிற் சிறுபொத்தல் தைக்கவும்
தொகைகேட்கும் ஆட்கள் வேண்டும்.
தோசைக் கணக்கென்று கரிக்கோடு போடவோ
சுவருண்டு வீட்டில், இந்த
ஒழுங்கெலாம் நம்மாதர் வாரத்தின் ஏழுநாள்
உயர் விரதம் அநுஷ்டிப்பதால்
உற்றபலன் அல்லவோ அறிவியக்கங் கண்
டுணர்ந்த பாரத தேசமே !

22. THE STATUS OF OUR WOMEN

There is room for thieves fifteen to hide
In the storeroom for disused old vessels;
There is the common sight
Of flies swarming
And dust and cobweb setting over the eatables;
No change though there's in cubit measures
eighteen.
There are changes in borders of women's clothes,
There is the seeking of Divine help
To cure diseases one and all,
There is need for men-in-attendance
Even to mend holes in the clothes of husband
worshipful;
Are the walls of a house
Meant to make charcoal marks
In the manner of the count of pan-cakes?
Isn't an order of this kind
The result of our women austerities rigorous observing
On all the seven days of the week?
Tell me O the Bharat land
The land of intellect and reason rooted deep!

23. ஏசுநாதர் ஏன் வரவில்லை ?

தலை, காது, மூக்குக், கழுத்துக், கை, மார்பு, விரல்,
தாள், என்ற எட்டுறுப்பும்
தங்கநகை, வெள்ளிநகை, ரத்தினமிழைத்தநகை,
தையலர்கள் அணியாமலும்,
விலைகுறையும் ஆடைகள் அணிந்துமே கோயில்வர
வேண்டுமென்றே பாதிரி
விடுத்தஒரு சேதியால் விஷமென்று கோயிலை
வெறுத்தார்கள் பெண்கள், புருஷர் !

நிலைகண்டபாதிரி பின் எட்டுறுப்பேயன்றி
நீள் இமைகள், உதடு, நாக்கு
நிறையநகை போடலாம், கோயிலில் முகம்பார்க்க
நிலைக்கண்ணா டியும்உண்டென
இலைபோட்ட டழைத்தும், நகைபோட்ட பக்தர்கள்
எல்லாரும் வந்துசேர்ந்தார் ;
ஏசுநாதர்மட்டும் அங்கு வரவில்லையே,
இனிய பாரததேசமே !

23. WHY HASN'T JESUS CHRIST COME?

There is a message from the priest:
'Let not women come decked with
Ornaments of gold and silver and the gem-studded
On the organs eight known –
Head, ear, nose, neck, arm, chest, finger and shoulders –
Come to the Lord's House they must
With dress less expensive.'
The women, and the men too
Did come to hate the church poison like!
Having seen the attitude of people
The priest stooped to supplications to them,
Granting permission to wear ornaments on
The large eyebrows, lips and tongue,
Not just the eight parts of the body listed.
He announced provision of mirror inside the church too
And there thronged the devotees ornaments bedecked;
But Christ chose not to mark his presence there.
O my virtuous Bharat land!

24 எங்கெங்கு காணினும் சக்தியடா !

மகாகவி பாரதியாரின் விருப்பப்படி நம் புரட்சிக்கவிஞர் அவர்கள் முதன் முதலில் பாடிய பாட்டு இதன் கீழ்க் காணப்படுவது. இந்தப் பாடல் பல பத்திரிகைகளில் பல மொழிகளில் வெளிவந்துள்ளது ! இந்தப் பாட்டின் மூலம் நம் கவிஞர் தமிழ் நாட்டிற்கு அறிமுகமானார்.

எங்கெங்குக் காணினும் சக்தியடா ! — தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா ! — அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம் — அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா — ஒரு
கங்குகளில் ஏழு முகிலினமும் — வந்து
கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ ? — எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம் — அவள்
மந்த நகையங்கு மின்னுதடா !

காளை ஒருவன் கவிச்சுவையைக் — கரை
காண நினைத்த முழுநினைப்பில் — அன்னை
தோளசைத்தங்கு நடம்புரிவாள் — அவன்
தொல்லறிவாளர் திறம் பெறுவான் — ஒரு
வாளைச் சுழற்றும் விசையினிலே — இந்த
வையமுழுவதும் துண்டு செய்வேன் — என
நீள இடையினின்றி நீ நினைத்தால் — அம்மை
நேர்படுவாள் உன்றன் தோளினிலே !

24. SAKTHI MANIFESTS EVERYWHERE

There's Sakthi wherever you see, O brother!
All the seven seas carry her complexion!
The celestial bodies in multitude you could see
Moving about as if play-balls in Her hands!
Have you seen at night
The roar of clouds classed seven?
It's the laughter of that Lady sure,
And Her gentle smile in the lightning reveals!

In the mind of a youth
Who desires to drink poetry to the lees,
There's the Mother's dance-like presence!
And he'd acquire the might of the ancient bards!
In your intent burning day and night
To cut the whole world into pieces
At the force of your sword's swing,
The Mother there is in on your shoulders!

25 எங்கள் தமிழ்

இனிமைத் தமிழ்மொழி எமது — எமக்
கின்பந் தரும்படி வாய்த்த நல் அமுது !
கனியைப் பிழிந்திட்ட சாறு — எங்கள்
கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு !
தனிமைச் சுவையுள்ள சொல்லை — எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்டதில்லை !
நனியுண்டு நனியுண்டு காதல் — தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில் (இனிமைத்)

தமிழ் எங்கள் உயிர் என்ப தாலே — வெல்லுந்
தாமுண்டு தமிழருக் கிப்புவி மேலே
தமிழ் என்னில் எம்முயிர்ப் பொருளாம் — இன்பத்
தமிழ்குன்றுமேல் தமிழ்நாடெங்கும் இருளாம்
தமிழுண்டு தமிழ் மக்களுண்டு — இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு
தமிழ் என்று தோள் தட்டி ஆடு ! — நல்ல
தமிழ் வெல்க வெல்க என்றே தினம் பாடு ! (இனிமைத்)

25. OUR TAMIL LANGUAGE

Ours is the sweet Tamil language,
It's our ambrosial tongue our source of ecstasy !
It's the juice extracted from fruits
It's a boon elevating us to heights of being!
Words of unmixed native feel
We've found in no tongue but Tamil!
Abundant and exceeding is the love of this tongue
That marks one and all of the Tamil land.
Because our very breath is Tamil
Prowess invincible on the earth there's in us,
Tamil is verily our life force,
A decline of this honeyed tongue
Darkness to the Tamil land does spell.
Alive is this tongue, so are its speakers;
Let us be ever at its service.
Sing the praise of Tamil all the time
Clapping the shoulders and dancing;
Let the strain of the song be 'victory to Tamil'.

26 கைம்மைக் கொடுமை

கண்கள் நமக்கும் உண்டு — நமக்குக்
கருதும் வன்மை யுண்டு
மண்ணிடைத் தேசமெல்லாம் — தினமும்
வாழ்ந்திடும் வாழ்க்கையிலே
எண்ண இயலாத — புதுமை
எதிரிற் காணுகின்றோம்
கண்ணிருந் தென்ன பயன் ? நமக்குக்
காதிருந் தென்ன பயன் ?

வானிடை ஏறுகின்றார் — கடலை
வசப்படுத்துகின்றார்
ஈனப் பொருள்களிலே — உள்ளுறை
இனிமை காணுகின்றார்
மேனிலை கொள்ளுகின்றார் — நாமதை
வேடிக்கை பார்ப்பதல்லால்
ஊன்பதைத்தே அவைபோல் — இயற்ற
உணர்ச்சி கொள்வதில்லை.

புழுதி, குப்பை, உமி — இவற்றின்
புன்மைதனைக் களைந்தே
பழரசம் போலே — அவற்றைப்
பயன் படுத்து கின்றார் !
எழுதவும் வேண்டா — நம்நிலை
இயம்பவும் வேண்டா !
அழகிய பெண்கள் — நமக்கோ
அழுகிய பழத்தோல் !

26. THE TYRANNY OF WIDOWHOOD

We too are gifted with eyes,
The faculty of reasoning we have;
(But), we do encounter a thing of oddity
One too queer for us to imagine,
Here, there and everywhere on the earth
In our life livéd here and now.
Of what avail are our eyes?
And what function do our ears perform?

They scale the skies,
And the oceans they subdue,
They go into the heart of things lowly
Unearthing inner glory and lustre,
They move into lofty heights -
We remain spectators passive and removed,
And awakened we are not with the body throbing
To make comparable things of our own.

In their hands
Dust, rubbish, and chaff
Come fruit juice like, their dross removed.
And our state -
Let us not speak or write of it!
For us
The lovely women are the rotten fruit skins!
Into the heart of our womanhood

செம்மை எனக்கூறி — அப்பெரும்
கையினிற் கூர்வேலால்
நம்மினப் பெண்குலத்தின் — இதய
நடுவிற் பாய்ச்சுகின்றோம்.
செம்மை நிலையறியோம் — பெண்களின்
சிந்தையை வாட்டுகின்றோம்;
இம்மை இன்பம் வேண்டல் — உயிரின்
இயற்கை என்றறியோம்.

கூண்டிற் கிளிவளர்ப்பார் — இல்லத்தில்
குக்கல் வளர்த்திடுவார்,
வேண்டியது தருவார்; — அவற்றின்
விருப்பத்தை யறிந்தே !
மாண்டவன் மாண்டபின்னர் — அவனின்
மனைவியின் உளத்தை
ஆண்டையார் காண்பதில்லை — ஐயகோ,
அடிமைப் பெண்கதியே !

We stab in the name of widowhood
With sharp spears in our unkind hands;
Devoid of justness and fairplay
We inflict on them agony and distress;
Ignorant we are of the nature of the being –
To seek the pleasures of life here and now.

Our people
Bring up parrots in cages,
And they have dogs at home
Attending to their needs one and all;
(But),
The men care not for once
To read the mind of the woman
After her husband's dead –
Alas, the servile womanhood!

27 குழந்தை மணத்தின் கொடுமை

ஏழு வயதே எழிற்கருங் கண் மலர் !
ஒருதா மரைமுகம் ! ஒருசிறு மணியிடை !!
சுவைத் தரியாத சுவைதருங் கனிவாய் !
இவற்றை யுடைய இளம்பெண் — அவள்தான்,
கூவத் தெரியாக் குயிலின் குஞ்சு,
தாவாச் சிறுமான், மோவா அரும்பு !
தாலி யறுத்துத் தந்தையின் வீட்டில்
இந்தச் சிறுமி யிருந்திடு கின்றாள் ;
இவளது தந்தையும் மனைவியை யிழந்து
மறுதார மாய் ஓர் மங்கையை மணந்தான்.
புதுப்பெண் தானும் புதுமாப் பிளையும்
இரவையே விரும்பி ஏறுவர் கட்டிலில் !
பகலைப் போக்கப் பந்தா டிடுவார் !
இளந்தலைக் கைம்பெண் இவைகளைக் காண்பாள் !
தனியாய் ஒருநாள் தன்பாட் டியிடம்
தேம்பித் தேம்பி அழுத வண்ணம்
ஏழு வயதின் இளம்பெண் சொல்லுவாள் :
'என்னை விலக்கி என்சிறு தாயிடம்
தந்தை கொஞ்சுதல் தகுமோ ?' தந்தை
'அவளை விரும்பி, அவள் தலை மீது
பூச்சூடு கின்றார் ; புறக்கணித்தார் எனைத் !'
'தாமும் அவளும் தனியறை செல்வார் ;
நான் ஏன் வெளியில் நாய்போற் கிடப்பது ?'
'அவருக்கு நான் மகள் ! அவர் எதிர் சென்றால்,
நீ போ ! என்று புருவம் நெறிப்பதோ ?'

27. THE CRUELTY OF CHILD MARRIAGE

Just seven years old, eyes lovely dark and flower-like!
Face resembling a lotus, slender graceful waist!
Unstained honeyed lips!
It's she the tender lass.
She's like the young of a cuckoo yet to learn singing,
A deer she is too young to take to native leaps,
A bud whose fragrance yet to unfold;
Widowed, she's now in her father's house.
The father with his wife dead
Is now married to another woman.
Newly wed
They go seeking the night's passionate hold,
Driving away the day by playing at ball!
All these the young widow sees!
And one day this hapless seven-year-old
Sobs her heart out to grandmother alone:
"Is it proper for father to dally with stepmother
To do so with me forshaken?
He goes to her in love,
Decks her head with flowers
Ignoring me all along!
He takes the bedroom with her,
Should I wait outside like a dog?
I am his daughter,
Is it right that he frowns my presence?"
Cried the tender girl bitterly weltering

பாட்டி மடியிற் படுத்துப் புரண்டே
இவ்வாறு அழுதாள் இளம்பூங் கொடியாள்.
இந்நிலைக்கு இவ்வாறு அழுதாள் — இவளது
பின்நிலை எண்ணிப் பாட்டி பெரிதும்
அழுத கண்ணீர் வெள்ளம், அந்தக்
குழந்தை வாழ்நாட் கொடுமையிற் பெரிதே.

As she lay on the grandmother's lap.
Sobbing as she was over her present plight,
The grandmother reflecting on the girl's future
Wept bitterly tears rolling down,
The flood of which looked grave,
Graver than the girl's tyranny of existence.

28. கைம்மை நீக்கம்

நீ எனக்கும், உனக்கு நானும் — இனி
நேருக்கு நேர் தித்திக்கும் பாலும், தேனும்

தூய வாழ்வில் இதுமுதல் நமதுளம்
நேய மாக அமைவுற உறுதி சொல் ! அடி !

கைம்பெண் என் றெண்ணங் கொண்டே
கலங்கினா யோ கற் கண்டே ?

காடு வேகு வதை ஒரு மொழியினில்
மூடு போட முடியுமோ உரையடி ? ததி

பைந்தமி ழைச்சீ ராக்கக்
கைம்மைஎன் னும்சொல் நீக்கப்

பறந்து வாடி அழகிய மயிலே !
இறந்த கால நடைமுறை தொலையவே,

பகுத்தறிவான மன்று
பாவை நீஏறி நின்று

பாரடீ உன் எதிரினிற் பழஞ் செயல்
கோரமாக அழிந்தொழிகுவதையே

கருத்தொருமித்த போது
கட்டுக்கள் என்ப தேது ?

கைம்மை கூறும் அதிசய மனிதர்கள்
செம்மை யாகும் படிசெய மனதுவை ! அடி !

28. ERADICATION OF WIDOWHOOD

You're for me and I'm for you
We are on terms of mutuality,
Delicious as milk and honey together are!

Do swear O my love!
That our hearts
Shall go in harmony henceforth
In this life of togetherness unblemished.

Did you go anguished O my sugar-candy
The thought of your widowhood weighing you down?
Can one put out the forest fire
Covering it with a verbal lid?
Tell me O woman!

Come flying O woman of peacock's loveliness!
To see the word 'widow' removed from its corpus
Bringing glory to this living tongue.
And undo a custom of the dead past!
Standing on the rationalist platform,
O woman!
See that
Things stale and unprofitable of the past
Meet their doom
In your very presence.
Are there fetters any
When minds in their oneness meet?
O woman!
Direct your mind
And see that those bizarre men
Who swear by widowhood
Come reformed and fair.

29 · தொழிலாளர் விண்ணப்பம்

காடு களைந்தோம் — நல்ல
கழனிதிருத்தியும் உழவுபுரிந்தும்
நாடுகள் செய்தோம் — அங்கு
வேண்டிய பண்டங்கள் ஈண்டிடச் செய்தோம்.
பாடுகள் பட்டோம் — புவி
பதமுறவே நாங்கள் நிதமும் உழைத்தோம்,

மலையைப் பிளந்தோம் — புவி
வாழவென்றேகடல் ஆழமும் தூர்த்தோம்
அலைகடல்மீதில் — பல்
லாயிரங்கப்பல்கள் போய்வரச்செய்தோம்
பல தொல்லையுற்றோம் — யாம்
பாதாளம் சென்று பசும்பொன் எடுத்தோம்
உலையில் இரும்பை — யாம்
உருக்கிப்பல் யந்திரம் பெருக்கியுந்தந்தோம்.

ஆடைகள் நெய்தோம் — பெரும்
ஆற்றைவளைத்து நெல்நாற்றுக்கள் நட்டோம்;
கூடைகலங்கள் — முதல்
கோபுரம் நற்சுதை வேலைகள் செய்தோம்
கோடையைக் காக்க — யாம்
குடையளித்தோம் நல்ல நடையன்கள் செய்தோம்
தேடிய பண்டம் — இந்தச்
செகத்தில் நிறைந்திட முகத்தெதிர் வைத்தோம்
வாழ்வுக்கொவ்வாத — இந்த
வையத்தில் இந்நிலை எய்தப்புரிந்தோம்
ஆழ்கடல், காடு, — மலை
அத்தனையிற்பல சத்தை யெடுத்தோம்.
ஈழை, அசுத்தம் — குப்பை
இலை என்னவே எங்கள் தலையிற் சுமந்தோம்
சூழக்கிடந்தோம் — புவித்
தொழிலாளராம் எங்கள் நிலைமையைக் கேளீர்!

29. APPEAL BY WORKMEN

Wilderness we weeded out
And brought them to fertile lands;
We ploughed and cultivated
And made of them tracts profitable.
Towns and cities came of our hands
With streets in order in the directions four;
Houses we built
And saw provisions needed stored therein;
We sweated and toiled every day
To see this earth to avail.

We blasted the hills,
We filled up the oceans deep,
All for the weal of this world;
We're behind ships in thousands
Sailing on the turbulent seas;
Many a hardship we suffered,
We dug to the very depth
And gold pure we mined from the ground;
We burnt and melted iron in the forge
And shaped many a machine thereof.

Garments we made
And paddy we cultivated diverting river water;
From baskets and utensils
To plastering the temple towers
Our hands stretched on to works varied;
Umbrellas we contrived
That sheltered one from summer's heat,
We gifted footwear thereto,
Provision in plenty this world needs

கந்தையணிந்தோம் — இரு
கையை விரித்தெங்கள் மெய்யினைப் போர்த்தோம்.
மொந்தையிற் கூழைப் — பலர்
மொய்த்துக் குடித்து பசித்துக் கிடந்தோம்
சந்தையில் மாடாய் — யாம்
சந்ததம் தங்கிட வீடுமில்லாமல்
சிந்தை மெலிந்தோம் — எங்கள்
சேவைக்கெலாம் இது செய நன்றிதானோ?

மதத்தவன் தலைவீர்! — இந்த
மண்ணை வளைத்துள்ள அண்ணாத்தைமாரே!
குதர்க்கம் விளைத்தே — பெருங்
கொள்ளையடித்திட்ட கோடிசுரர்காள்!
வதக்கிப் பிழிந்தே — சொத்தை
வடிகட்டி எம்மைத் துடிக்க விட்டீரே!
நிதியின் பெருக்கம் — விளை
நிலமுற்றும் உங்கள் வசம் பண்ணிவிட்டீர்.

செப்புதல் கேட்பீர்! — இந்தச்
செகத்தொழிலாளர்கள் மிகப் பலர் ஆதலின்,
கப்பல்களாக — இனித்
தொழும்பர்களாக மதித்திட வேண்டாம்!
இப்பொழுதே நீர் — பொது
இன்பம் விளைந்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே — எங்கள்
உடலில் இரத்தம் கொதிப்பேறுமுன்பே (ஒப்படைப்பீரே!)

We placed before men in earnest;
All this we accomplished right
For a world worthless and unfriendly;
Oceans deep, forests and hills
All we did exploit
Bringing the fruits to men;
Filth, dirt, garbage and used leaves
All we carried on our heads,
And in their midst we lived;
We are the workmen of this world
And do listen to our plight!
Clothed in rags we were,
Arms spread were our attire to cover the body,
Many we're swarming for a cup of gruel
Which we drank from an earthen pot
And unsatiated we all went.

Our hearts went down,
Unsheltered as we remained
Like cattle in a fair –
Is it all that our services merited?

O heads of religions!
O my lordly brethren the grabbers of this earth!
O millionaires the crooked massive swindlers!
Who despoiled us of our possessions
Emasculating and squeezing us,
And driving us to anguish and agitation.
Wealth amassed and all cultivable land brought
into your possession,
Do take our words!
Exceedingly great in number
As the workmen of the world are
Let them not be treated as sapless twigs,
Nor as menials and servile men!
Hand your possessions one and all here and now
For the common weal to realize
Do it before our blood goes boiling!

30. மானிட சக்தி

மானிடத் தன்மையைக்கொண்டு — பலர்
வையத்தை ஆள்வது நாம்கண்ட துண்டு
மானிடத் தன்மையை நம்பி — அதன்
வன்மையினாற்புவி வாழ்வுகொள் தம்பி !
'மானிடம்' என்றொரு வாளும் — அதை
வசத்தில் அடைந்திட்ட உன்இரு தோளும்
வானும் வசப்பட வைக்கும் — இதில்
வைத்திடும் நம்பிக்கை, வாழ்வைப் பெருக்கும் *(மானிட)*

மானிடன் வாழ்ந்த வரைக்கும் — இந்த
வையத்திலே அவன் செய்தவரைக்கும்
மானிடத் தன்மைக்கு வேறாய் — ஒரு
வல்லமை கேட்டிருந்தால் அதைக் கூறாய் !
மானிடம் மென்பது புல்லோ ? — அன்றி
மரக்கட்டையைக் குறித் திடவந்த சொல்லோ !
கானிடை வாழ்ந்ததும் உண்டு — பின்பு
கடலை வசப்படச் செய்ததும் அதுதான் ! *(மானிட)*

மானிடம் போற்ற மறுக்கும் — ஒரு
மானிடன் தன்னைத்தன் உயிரும் வெறுக்கும் ;
மானிடம் என்பது குன்று — தனில்
வாய்ந்த சமத்துவ உச்சியில் நின்று
மானிடருக் கினி தாக — இங்கு
வாய்த்த பகுத்தறிவாம் விழி யாலே
வான்திசை எங்கணும் நீபார் ! — வாழ்வின்
வல்லமை 'மானிடத் தன்மை' என்றதேர். *(மானிட)*

30. THE POWER OF BEING HUMANE

O brother!
We've seen that
Armed with humanity
Many a man reigned this world.
Belief in humanity guiding
The strength thereof being its root –
Build your life on this earth.

The sword called humanity
And your two shoulders that won this sword
Could bring even the heaven under your reign;
Trust in humanity will see life's fecundity.

Does the span of humankind
Or the record of one's accomplishments
Reveal a thing alternative
To the might of humanity O brother?
Is humanity just a blade of grass?
Or is it a word meant to denote a wooden log?
Mankind did live in the woods true
(But)it's humanity then that conquered the oceans.
Even his own soul will despise him
That fails to adore humanity.

Humanity a hill it is!
Standing on its summit called equality,
And a pleasant sight to mankind wearing,
Extend your rational gaze far and wide!
It's the strain of humanity
That is the might of one's life.
Let it be clear O brother!

31 புத்தகசாலை

தனித்தமைந்த வீட்டிற் புத்தகமும் நானும்
சையோகம் புரிந்ததொரு வேளை தன்னில்,
இனித்தபுவி இயற்கையெழில் எல்லாம் கண்டேன்;
இசைகேட்டேன்! மணம்மோந்தேன்! சுவைகள் உண்டேன்!
மனித்தரிலே மிக்குயர்ந்த கவிஞர் நெஞ்சின்
மகாசோதியிற் கலந்த தெனது நெஞ்சும்!
சனித்ததங்கே புத்துணர்வு! புத்தகங்கள்
தருமுதவி பெரிது! மிகப்பெரிது கண்டீர்!

மனிதரெலாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்,
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை;
புனிதமுற்று மக்கள்புது வாழ்வுவேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்.

தமிழர்க்குத் தமிழ்மொழியிற் சுவடிச்சாலை
சர்வகலா சாலையைப்போல் எங்கும் வேண்டும்.
தமிழிலிலாப் பிறமொழி நூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்.
அமுதம்போல் செந்தமிழிற் கவிதை நூற்கள்,
அழகியவாம் உரைநடையில் அமைந்த நூற்கள்,
சுமை சுமையாய்ச் சேகரித்துப் பல்கலைசேர்
துறை துறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல்வேண்டும்.

31. LIBRARY

The book and I were in communion
In a house solitary and removed,
When this sweet earth's grace and loveliness
Were all revealed to my sight in full;
The melodies, scents and tastes all I enjoyed;
A communion high my heart had
With the supreme glow of the hearts of poets
That stood head and shoulders above all the others!
And born there's a new consciousness and discernment!
Great are the benefits books do extend!
They are surpassingly great!

For men to perceive the path of love,
For hearts to widen their vision sky-like,
To dispel the darkness of individualism
And lead to a sense of oneness of all men –
All such aids and thoughts nourishing and lofty
There reign in libraries of books of learned minds;
Libraries everywhere are verily a condition
For piety and a renewed living mode.

Libraries of books written in Tamil
Books embracing arts and sciences all
Established they must be everywhere
For the Tamils to benefit from.
Books all in foreign tongues
Books the Tamil language possesses not
Rendered they must be in Tamil
And brought into the hands of Tamils one and all.

நாலைந்து வீதிகளுக் கொன்று வீதம்
நல்லதுவாய் வசதியாய் இல்லம் வேண்டும்.
நூலெல்லாம் முறையாக ஆங்கமைத்து
நொடிக்குநொடி ஆசிரியர் உதவுகின்ற
கோலமுறும் செய்தித்தாள் அனைத்தும் ஆங்கே
குவிந்திருக்க வகைசெய்து தருதல் வேண்டும்.
மூலையிலோர் சிறுநூலும் புதுநூலாயின்
முடிதனிலே சுமந்துவந்து தருதல்வேண்டும்.

வாசிக்க வருபவரின் வருகை ஏற்றும்
மரியாதை காட்டி அவர்க் கிருக்கை தந்தும்,
ஆசித்தநூல் தந்தும் புதிய நூல்கள்
அழைத்திருந்தால் அதையுரைத்தும், நாளும்நூலை
நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம்
நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும்
மாசற்றதொண் டிழைப்பீர் !சமுதாயச்சீர்
மறுமலர்ச்சி கண்டதென முழக்கஞ் செய்வீர் !

Books of poetry in Tamil ambrosia-like,
Books of prose elegant and flowing
Collected they must be in numbers large
Classified in their order sciences and arts
And displayed disciplinewise and subjectwise.

Choice buildings commodious and fitting,
One there must be for streets four or five,
Wherein books all be collected and kept in order;
Newspapers all instructive and gainful
That take us to events current and fresh
Must be there collected in plenty.
A book freshly sprouted must be made accessible to all
However small and removed to our eyes it be.

A warm and heartful welcome
Besides regard and courtesy meet
The reader must be extended,
Along with a seat to sit on;
Books he desires be given to him ready
Informing him of books new added thereto.
The men that visit this house of books
In loving desire must go on multiplying –
Such must be the kind of service extended
By thought word and deed selfless and pure.
Proclaim the renaissance,
The order remade of this Society.

32 • பத்திரிகை

காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீ தான் ! இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான் !
ஊரினை நாட்ட இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறிவாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே

அறிஞர்தம் இதயஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய் !
நறுமண இதழ்ப் பெண்ணேஉன்
நலம்காணார் ஞாலம் காணார்.

கடும்புதர் விலக்கிச் சென்று
களாப் பழம் சேர்ப்பார்போலே
நெடும்புவி மக்கட்கான
நினைப்பினிற் சென்று நெஞ்சிற்,
படும்பல நுணுக்கம் சேர்ப்பார்
படித்தவர். அவற்றையெல்லாம்
'கொடும்' என அள்ளி உன்தாள்
கொண்டார்க்குக் கொண்டுபோவாய் !

வானிடை நிகழும் கோடி
மாயங்கள், மாநிலத்தில்
ஊனிடை உயிரில் வாழ்வின்
உட்புறம் வெளிப்புறத்தே,
ஆன நற்கொள்கை, அன்பின்
அற்புதம் இயற்கைக் கூத்துத்,
தேனிதழ் தன்னிற் சேர்த்துத்
தித்திக்கத் தருவாய் நித்தம் !

32. NEWSPAPERS

O the woman called newspaper!
You are the lustrous sun's ray
Into minds darkness intense reigning,
You are the light of awakening
In the vision of those in slumber deep,
You are the offspring of the erudite minds
Born to see our societies well made
Born to see the unity of the world.

Drawing the water from the stream
Of the scholarly minds profound,
Watering the thoughts of men on and on
For the fulness of mind to accomplish
And ending acts narrow-minded and mean,
Do take this globe to lofty heights.
O newspaper, the woman fragrant!
Those that do not see for what you are,
Go shut off from the happenings of the world.
The learned read the minds of men far and near
And fathom their thoughts subtle and deep
Like those that gather the *kaḻā** fruit
Clearing the wild bushes around;
The thoughts thus collected you extract
And carry them to your readers.

The seeming illusions countless across the sky,
The events on the earth,
Those around and of the life within,
Things wondrous wrought by love
And the play of nature
Honeyed all they go into you
And honeyed you bring them to us every day.

* A thorny shrub bearing an edible black fruit.

சிறுகதை ஒன்று சொல்லிப்
பெருமதி யூட்டும் தாளே !
அறைதனில் நடந்தவற்றை
அம்பலத்திழுத்துப் போட்டுக்
கறையுளம் தூய்மை செய்வாய் !
களைப்பிலே ஊக்கம் பெய்வாய் !
நிறைபொருள் ஆவாய் ஏழை
நீட்டிய வெறுங்கரத்தே.

ஓவியம் தருவாய் ! சிற்பம்
உணர்விப்பாய் ! கவிதையூட்டக்
காவியம் தருவாய் ! மக்கள்
கலகல வெனச்சிரிப்பு
மேவிடும் விகடம் சொல்வாய் !
மின்னிடும் காதல் தந்து
கூவுவாய் ! வீரப்பேச்சுக்
கொட்டுவாய்க் கோலத்தாளே !

தெருப்பெருக் கிடுவோருக்கும்
செகம்காக்கும் பெரியோர்க்கும், கை
இருப்பிற் பத்திரிகை நாளும்
இருந்திடல் வேண்டும் ! மண்ணிற்
கருப்பெற் றுருப்பெற் றிளநடை
பெற்றுப் பின்னர் ஐந்தே ஆண்டு
வரப்பெற்றார், பத்திரிகை நாளும்
உண்டென்றால் வாழ்க்கை பெற்றார் !

By an anecdote you carry
You offer us instruction rich;
Things within walls concealed
You bring to the open
Purifying the hearts impure;
You shower spirit into us when we go fatigued,
You're the riches in the empty hands

An impoverished man stretches.
Pictures you furnish us,
And the feel of sculpture too;
Classics rich in poetry live in you,
Fun and frolic you bring to people
Sending them to artless and hearty laugh,
You carry tales of love loud and clear
And tales of valour too, O lovely newspaper!
For the one who sweeps the streets
And for the exalted one reigning over the world
A must it is to go daily with newspaper
Endowed with hands if they are.
For one that's just five (years) old
Who's just come into this world
After taking shape in the womb
And who's just learnt the movement on foot
A newspaper in hand is a condition unto itself
A condition for life realized.

33. அழகு

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன் !
கடற்பரப்பில், ஒளிப்புனலில் கண்டேன் ! அந்தச்
சோலையிலே, மலர்களிலே, தளிர்கள் தம்மில்
தொட்டஇடம் எலாம்கண்ணில் தட்டுப்பட்டாள் !
மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள் ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனில் அந்த 'அழகெ' ன்பாள் கவிதை தந்தாள்.

சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள் ;
திருவிளக்கிற் சிரிக்கின்றாள் ; நாரெடுத்து
நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வ ளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள் ; அடடே செந்தோட்
புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்
புதுநடையில் பூரித்தாள் ; விளைந்த நன்செய்
நிறத்தினிலே என் விழியை நிறுத்தினாள் ; என்
நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்.

திசை கண்டேன், வான் கண்டேன், உட்புறத்துச்
செறிந்தனவாம் பலப்பலவும் கண்டேன், யாண்டும்
அசைவனவும் நின்றனவும் கண்டேன், மற்றும்
அழகுதனைக் கண்டேன் நல் லின்பங் கண்டேன்
பசையுள்ள பொருளிலெலாம் பசையவள் காண் !
பழமையினால் சாகாத இளையவள் காண்
நசையோடு நோக்கடா எங்கும் உள்ளாள் !
நல்லழகு வசப்பட்டால் துன்பமில்லை.

33. LOVELINESS

In the early rays of the sun I saw her!
I saw her in the broad expanse of the ocean,
And in the flood of light too!
In the flower-garden, flowers and sprouts
I sighted her here, there and everywhere!
She was there in the ruby-like evening rays of the sun;
She, the Beauty, provided the exuberance of poetry
In the flock of parrots on banyan trees by the roads.

She's there as the vision of the child's eye,
She smiles in the temple's lighted lamp,
She dances in the finger movements
Of the maid that fastens flowers scented with a cord,
She rejoiced in the spirited walk of the peasant
Who went with a plough on his sturdy shoulders,
She held my eyes in the wet lands with ripened corns
She filled my heart with ecstasy inhabiting it.
I saw the directions
I saw the sky and the things myriad embodied within,
I saw things moving and those still too,
Where I saw beauty delightful and rapturous;
See, she's the sap of all things alive!
She is the youthful one unwithered by time;
Extend your gaze with passion, she's there everywhere
One in the hold of Beauty faces no straits.

எழுந்த ஞாயிறு !

ஒளிப்பொருள் நீ ! நீ ஞாலத்
தொருபொருள், வாராய் ! நெஞ்சக்
களிப்பினில் கூத்தைச் சேர்க்கும்
கனற்பொரு ளே, ஆழ்நீரில்
வெளிப்பட எழுந்தாய் ; ஒகோ
விண்ணெலாம் பொன்னை அள்ளித்
தெளிக்கின்றாய் ; கடலிற் பொங்கும்
திரையெலாம் ஒளியாய்ச் செய்தாய்.

வையத்தின் உணர்ச்சி

எழுந்தன உயிரின் கூட்டம் !
இருள் இல்லை அயர்வும் இல்லை !
எழுந்தனை ஒளியே, எங்கும் !
எங்கணும் உணர்ச்சி வெள்ளம் !
பொழிந்தநின் கதிர் ஒவ் வொன்றும்
பொலிந் தேறி, மேற்றி சைமேல்
கொழுந்தோடக் கோடி வண்ணம்
கொழித்தது சுடர்க்கோ மானே !

காட்சி ஞாயிறு

பொங்கியும் பொலிந்தும் நீண்ட
புதுப்பிடர் மயிர்சி லிர்க்கும்
சிங்கமே ! வானவீதி
திரு திரு என எரிக்கும்
மங்காத தணற்பி ழம்பே !
மாணிக்கக் குன்றே ! தீர்ந்த
தங்கத்தின் தட்டே ! வானத்
தகளியிற் பெருவிளக்கே !

34. THE SUN

The Rising Sun

An effulgent thing you are!
You're unique!
Welcome to you!
O the fiery thing
That adds the joy of dancing
To the heart's ecstasy!
You emerged from the deep;
O you sprinkle the sky with gold;
You lent light to the raging waves of the sea.

The Reaction of the World

Woke up the living things of the earth'.
Darkness there wasn't nor fatigue!
You spread the brilliance everywhere!
And everywhere there's the flowing ecstasy;
O the lord of light!
Your lustrous rays everyone of them,
Rising up in the sky glowing,
Descending across to the west,
And branching into shoots of light,
Showered there a million hues in harmony.

The Spectacle of the Sun

O the lion
Raging in flames and showering gentle light
And horipilating thus your longish fresh mane!
O the burning flame unfading
That scorches the course of the sky!
O the pile of ruby!
O the plate of refined gold!
O the massive lamp with the sky as bowl!

ஒளிசெய்யும் பரிதி

கடலிலே கோடி கோடிக்
கதிர்க்கைகள் ஊன்றுகின்றாய் !
நெடுவானில் கோடி கோடி
நிறைசுடர்க் கைகள் நீட்டி
இடைப்படு மலையோ காடோ
இல்லமோ பொய்கை ஆறோ
அடங்கநின் ஒளிஅு ளாவ
அமைந்தனை ! பரிதி வாழி !

கதிரும் இருளும்

என்ன காண் புதுமை ! தங்க
இழையுடன் நூலை வைத்துப்
பின்னிய ஆடை காற்றில்
பெயர்ந்தாடி அசைவ தைப்போல்
நன்னீரில் கதிர் கலந்து
நளிர் கடல் நெளிதல் கண்டேன் ;
உன்கதிர், இருட்ப லாவை
உரித் தொளிச் சுளையூட்டிற்றே

கறைபோக்கி எழில்செய்தாய்

இலகிய பனியின் முத்தை
இளங்கதிர்க் கையால் உண்பாய்
அலை அலையாய் உமிழ்வாய்
அழகினை, ஒளியை யெல்லாம்
இலை தொறும் ஈரம் காத்த
கறை போக்கி இயல்பு காப்பாய் !
மலையெலாம் சோலை எல்லாம்
நனைக்கின்றாய் சுடர்ப்பொன் நீரால் !

The Light-emitting Sun

You pour light into the ocean
In shreds countless in number;
Your hands of consummate rays
Running into millions and millions
Stretching across the sky's expanse
You see your radiance
Permeating and pervading one and all on the way –
Be it a hill or woods
A dwelling or a tank or a river.
May you prosper O sun!

Light and Darkness

How wondrous it looks!
I find the huge ocean wriggling
With your rays going into its waters
Like a garment
Woven with thread and cord of gold mixed
Waving gently in the wind.
The light from your rays
Comes as the pulp of the jackfruit
Stripping off the cover of darkness.

You Added Beauty Removing the Stain

You eat the pearl of the dew
With your hand the early morning rays,
Waves of beauty – your light – you spit;
You remove the stain of moisture in leaves
And preserve their nature intact;
You drench the hills and the groves
With the waters of your glittering golden light.

எங்கும் அது

தாமரை அரும்பி லெல்லாம்
சரித்தனை இதழ்கள் தம்மை !
மாமரத் தளிர்அ சைவில்
மணிப்பச்சை குலுங்கச் செய்தாய்
ஆமாமாம் சேவற் கொண்டை
அதிலும் உன் அழகே காண்பேன் !
நீமன்னன் ; ஒளியின் செல்வன் ;
நிறை மக்கள் வாழ்த்தும் வெய்யோன்.

பரிதியும், செயலும்

இறகினில் உயிரை வைத்தாய்
எழுந்தன புட்கள் ! மாதர்
அறஞ்செய்யும் திறஞ்செய் திட்டாய் !
ஆடவர் குன்றத் தோளில்
உறைகின்றாய் ! கன்று காலி
உயிர் பெறச் செய்கின் றாய்நீ !
மறத் தமிழ் மக்கள் வாழ்வில்
இன்பத்தை வைத்தாய் நீயே.

பரிதி இன்றேல் நிலாவுக்கு ஒளியில்லை

வாழும் நின் ஒளிதான் இன்றேல்
வானிலே உடுக்கள் எல்லாம்
தாழங்காய், கடுக்காய் கள்போல்
தழைவின்றி அழகி ழக்கும் !
பாழ்என்ற நிலையில் வாழ்வைப்
பயிரிட்ட உழவன் நீ ; பைங்
கூழுக்கு வேரு நீயே
குளிருக்குப் போர்வை நீயே !

It is There Everywhere

You made up the lotus buds
With petals within!
There's the dance of the gem-green
In the waving of the mango shoots;
I could see your beauty true
In the crest of the cock too
You're the reigning lord and darling of light,
The burning one, the object of praise of the men of ripeness.

The Sun and the Activities

You put life into their feathers
And there were birds set to fly;
Acts virtuous by women are your gift
And you dwell in the mighty shoulders of men;
You're the vital principle of the calf;
That the Tamils valorous live in felicity
Is the boon you conferred on them.

The Moon Reflects the Light of the Sun only

Without your light quick and alive
The heavenly bodies would go unflourishing,
Their grace and loveliness deserting
Verily like the green fruits of wild pine or gall-nut;
You are the peasant
That cultivated the soil of life
Barren and unliving that would have gone;
You are the root of the living crops
And you are the cloak
Guarding us against nature's cold.

ஞாயிறு வாழி

விழிப் பார்வை தடுத்து வீழ
விரிகின்ற ஒளியே, சோர்வை
ஒழிக்கின்ற உணர்வே, வையத்
திருளினை ஒதுக்கித் தள்ளித்
தழற்பெரு வெள்ளந் தன்னைச்
சாய்ப்போயே வெயிலில் ஆடித்
தழைக்கின்றோம் புதுஞா யிற்றுத்
தனிச்சொத்தோ வாழி நன்றே.

May the Sun Prosper

O the Light unfolding
On which the vision of the eye feeds,
O the Spirit that undoes fatigue,
O that which brings in the flood of glow
Pulling aside the darkness of the earth;
We flourish in joy under your tender rays
A blessing unique, may you prosper!

35. குன்றம்

மாலை வானும் குன்றமும்

தங்கத்தை உருக்கிவிட்ட
வானோடை தன்னி லேஓர்
செங்கதிர் மாணிக்கத்துச்
செழும்பழம் முழுகும் மாலை,
செங்குத்தாய் உயர்ந்த குன்றின்
மரகதத் திருமே னிக்கு
மங்காத பவழம் போர்த்து
வைத்தது வையம் காண !

ஒளியும் குன்றும்

அருவிகள், வயிரத் தொங்கல் !
அடர்கொடி, பச்சைப் பட்டே !
குருவிகள், தங்கக் கட்டி !
குளிர்மலர், மணியின் குப்பை !
எருதின் மேற்பாயும் வேங்கை,
நிலவுமேல் எழுந்த மின்னல்,
சருகெலாம் ஒளிசேர் தங்கத்
தகடுகள் பார டாநீ !

கிளி எறிதல்

தலைக்கொன்றாய்க் கதிரைக் கொத்தித்
தழைபசுஞ்சிறக டித்து
மலைப்புன்னை மரத்தின் பக்கம்
வந்திடும் கிளிக்கூட் டத்தில்,
சிலைப்பெண் ணாள்கவண் எறிந்து,
வீழ்த்தினேன் சிறகை என்றாள்
குலுக்கென்று சிரித்தொ ருத்தி
"கொழும்புன்னை இலைகள்" என்றாள் !

35. THE HILL

The Evening Sky and the Hill

It's an evening
When the fiery rays of gem-like luxuriance
Go down into the heavenly stream
Wherein flows the gold melted;
The world endowed unfading coral cover
Over the emerald-like face of the lofty erect hill.

The Light and the Hill

The brooks are the pendants of diamond,
The bushes are the silken cover green-hued,
The small birds are the lumps of gold,
The cool flowers are the heaps of gems
The lightning cutting across the moon
Is like the tiger leaping at the bull,
The dried leaves radiating
Are the plates of gold thereof;
Behold them all O man!

Slinging at the Parrot

The flock of parrots pecking at ears of corns one each
Flapping their wings of shoot-green hue.
And coming as they were by the wild *punnai*" tree
An image-like lass said, slinging:
"I did bring down the feathers".
Another one replied, with a derisive laugh:
"They're the leaves of the rich *punnai**

A flowering tree (Alexandrian laurel)

குறவன் மயக்கம்

பதட்டமாய்க் கிளிஎன் றெண்ணி
ஆதொண்டைப் பழம்பார்த் தானை
உதட்டினைப் பிதுக்கிக் "கோவை"
உன்குறி பிழைஎன் றோதும் !
குதித்தடி மான்மான் என்று
குறுந்தடி தூக்கு வானைக்,
கொதிக்காதே நான் அம்மானே
எனஓர் பெண் கூறி நிற்பாள் !

குன்றச் சாரல், பிற

குன்றத்தின் "சாரல்" குன்றின்
அருவிகள் குதிக்கும் "பொய்கை"
பன்றிகள் மணற்கி ழங்கு
பறித்திடும் "ஊக்கம்" நல்ல
குன்றியின் மணியால், வெண்மைக்
கொம்பினால் அணிகள் பூண்டு
நின்றிடும் குறத்தி யர்கள்
"நிலாமுகம்" பாரடா நீ !

குறத்தியர்

"நிறைதினைக் கதிர்" முதிர்ந்து
நெடுந்நாளும் பழுத்த கொல்லைப்
புறத்தினில் தேர்போல் நீண்ட
புதுப்பரண் அமைத்து, மேலே
குறத்தியர் கவண்எ டுத்துக்
குறிபார்க்கும் விழி, நீ லப்பூ !
எறியும்கை, செங்காந் தட்பூ !
உடுக்கைதான் எழில்இ டுப்பே !

The Confusion of the Kurava**

As the one flurried
Mistook the fruit of the *ātontai* creeper
For a parrot,
The *kōvai* creeper
Pressing the lips in mockery would say,
"Incorrect is your observation!"
As another raised his short stick saying
"O it's deer, here comes jumping!"
There'd come the reply from a lass
"Be not excited O uncle!
It's me, not the deer".

Foot of the Hill, and Others

The foot of the hill –
It's the tank into which the streams fall,
See there the hogs in spirited action
Digging up the sands for roots;
See the faces moon-reflected of *Kuṟava* tribal women
Bedecked as they are
With the lovely *kuṉṟi* seeds and the white tusks.

The Kuṟava Women

In the field ever rich and teeming,
There is the millet corn fully ripened,
Built amid is the large raised platform car-like
On which were the *Kuṟava* women slings in
hand ready
Whose eyes aiming at are the blue lotus,
The hands whirling the slings are red *kāntal**
flowers
And their winning hips are *uṭukkai*** drums.

* Gloriosa superba
** A small drum tapering in the middle
** One of a tribal community.

மங்கிய வானில் குன்றின் காட்சி

மறைகின்றான் பரிதி; குன்ற
மங்கையோ ஒளியிழந்து
நிறைமூங்கில் இளங்கை நீட்டி
வாராயோ எனஅ ழைப்பாள்
சிறுபுட்கள் அலறும் ! யானை
இருப்பிடம் சேரும் ! அங்கோர்
குறுநரி ஊளைச் சங்கால்
இருள் இருள் என்று கூவும் !

நிலவும் குன்றும்

இருந்தஓர் கருந்தி ரைக்குள்
இட்டபொற் குவியல் போலே,
கருந்தமிழ்ச்சொல்லுக் குள்ளே
கருத்துக்கள் இருத்தல் போலே,
இருள்மூடிற் றுக்குன் றத்தை !
நாழிகை இரண்டு செல்லத்
திரும்பிற்று நிலவு ; குன்றம்
திகழ்ந்தது முத்துப் போலே !

எழில் பெற்ற குன்றம்

நீலமுக் காட்டுக் காரி
நிலாப்பெண்ணாள், வற்றக் காய்ந்த
பாலிலே உறைமோர் ஊற்றிப்
பருமத்தால் கடைந்து, பானை
மேலுற்ற வெண்ணெய் அள்ளிக்
குன்றின்மேல் வீசி விட்டாள் !
ஏலுமட்டுந்தோ ழாநீ
எடுத்துண்பாய் எழிலை எல்லாம் !

The Sight of the Hill at Dusk

The sun goes down in the west,
Dame hill go lustreless as she does
Stretches her tender hands - the wholesome bamboo stems
Calling the sun to see his light linger!
There are the chirps of small birds around,
The elephant returns to his dwelling,
And there is the jackal's howl the chank sound
Proclaiming darkness aloud.

The Moon and the Hill

Like a pile of gold in a dark chest,
Like thoughts pregnant going into a word in Tamil fecund,
Darkness enveloped the face of the hill;
And the moon emerged two *nālikai**** later,
The hill shone bright like pearls.

The Hill Rendered Lovely

Dame moon,
The one whose head is covered by the blue hued veil,
Poured the sour milk into the milk boiled to driness
Churned it with a mighty staff
That saw butter flowing to the brim
Which she splashed over the hill!
O my dear Comrade!
Take the loveliness all thereof
And enjoy it as much as you could!

*** An Indian hour of 24 minutes

முகில் மொய்த்த குன்றம்

ஆனைகள், முதலைக் கூட்டம்,
ஆயிரம் கருங்கு ரங்கு,
வானிலே காட்டி வந்த
வண் முகில் ஒன்று கூடிப்
பானையில் ஊற்றுகின்ற
பதநீர்போல் குன்றில் மொய்க்கப்
போனது ; அடிமை நெஞ்சம்
புகைதல்போல் தோன்றும் குன்றம் !

The Cloud-covered Hill

The mass of clouds –
That feigned in the sky
Shapes of elephants and crocodile flocks
And black monkeys a thousand, –
Collected together
And went to swarm the hill
Like sweet lime-lined toddy drawn in a pot;
And the hill resembled a servile heart fuming.

36 செந்தாமரை

நீர், இலை, நீர்த்துளிகள்

கண்ணாடித் தரையின் மீது
கண் கவர் பச்சைத் தட்டில்
எண்ணாத ஒளிமுத் துக்கள்
இறைந்தது போல்கு ளத்துத்
தண்ணீரி லேப டர்ந்த
தாமரை இலையும் மேலே
தெண்ணீரின் துளியும் கண்டேன்
உவப்போடு வீடு சேர்ந்தேன்.

தாமரையின் சிற்றரும்பு

சிலநாட்கள் சென்ற பின்னர்க்
குளக்கரை சென்றேன் ! பச்சை
இலைத்தட்டில் சிந்தும் பால்போல்
எழில்நீரும் கரியபாம்பின்
தலைகள்போல் நிமிர்ந் திருந்த
தாமரைச் சிற்ற ரும்பும்
இலகுதல் காணப் பெற்றேன் ;
காட்சியின் இன்பம் பெற்றேன்.

முதிர் அரும்பு

மணிஇருள் அடர்ந்த வீட்டில்
மங்கைமார், செங்கை ஏந்தி,
அணிசெய்த நல்வி ளக்கின்
அழகிய பிழம்பு போலத்
தணிஇலைப் பரப்பி னிற்செந்
தாமரைச் செவ்வ ரும்பு
பிணிபோக்கி என்விழிக்குப்
படைத்தது பெருவி ருந்தே !

36. THE RED LOTUS

Water, Leaf and Water-drops

Like radiant pearls countless in number
Scattered in an enchanting green plate
On the floor glassed in,
Lotus leaves spread on water in the tank
And the drops of clear water on the leaves
I found,
And went home enraptured.

The Tiny Buds of the Lotus

A few days after
I visited the banks of the tank.
I saw lovely water drops on the plate like
green leaves,
Like milk split,
I saw the erect tiny buds of the lotus
Like the hoods of the black snakes,
I saw them all emitting lustre
Which sent me into realms of ecstasy.

The Buds about to Blossom

Like the graceful flame of a sacred lamp decorated
Held up in the hands red-complexioned of women
In a house intense darkness reigning,
In the spread vast of the cool leaves,
Emerged the red lotus the pain of petals
clouding gone,
It was a feast gorgeous and fine to my eyes.

அவிழ் அரும்பு

விரிக்கின்ற பச்சைப் பட்டை
மேனி போர்த்துக், கிடந்து
வரிக்கின்ற பெண்கள் வான
வீதியைப் பார்த்துப் பார்த்துச்
சிரிக்கின்ற இதழ்க்கூட்டத்தால்
மாணிக்கம் சிதறு தல்போல்
இருக்கும் அப் பச்சி லைமேல்
அரும்புகள் இதழ்வி ரிக்கும் !

மலர்களின் தோற்றம்

விண்போன்ற வெள்ளக் காடு,
மேலெலாம் ஒளிசெய் கின்ற
வெண் முத்தங் கள்கொழிக்கும்
பச்சிலைக் காடு, மேலே
மண்ணுளார் மகிழும் செந்தா
மரைமலர்க் காடு, நெஞ்சைக்
கண்ணுளே வைக்கச் சொல்லிக்
கவிதையைக் காணச் சொல்லும்.

ஒப்பு

வாய்போலச் சிலம லர்கள் !
'வா' என்றே அழைக்கும் கைபோல்
தூயவை சிலம லர்கள் !
தோய்ந்துநீ ராடி மேலே
பாயும்நன் முகம்போல் நெஞ்சைப்
பறிப்பன சிலம லர்கள் !
ஆயிரம் பெண்கள் நீரில்
ஆர்ப்பாட்டம் போலும் பூக்கள் !

The Buds Opening

The buds opening above the green leaves
Resembled the ruby gems scattering
Due to the movements of lips while smiling
Of women with green silken garment on
When they, drawing ornamental lines,
Mocked at the make of the firmament.

The Appearance of the Flowers

The expanse of waters the firmament like,
The thick spread of green leaves above
Marked on which are the white pearls of water
drops dazzling
And the dense growth of red lotus flowers –
A source of joy to the human eyes:
A spectacle it is opening the mind's eye
And taking one on the wings of poesy.

Analogies

Some flowers look like the human mouth!
The hand in inviting posture
Goes in comparison to some flowers unstained!
Of winning loveliness are some others
Which resemble the fresh graceful faces
Emerging from water after bathing in!
Yet others could be likened to
A thousand women deep in bathing revelry!

செவ்விதழ்

ஓரிதழ் குழந்தை கன்னம் !
ஓரிதழ் விழியை ஒக்கும்
ஓரிதழ் தன்ம ணாளன்
உருவினைக் கண்டு கண்டு
பூரிக்கும் உதடு ! மற்றும்
ஓரிதழ் பொல்லார் நெஞ்சம் !
வாரித் தரச்சி வந்த
உள்ளங் கையாம் மற்றொன்று !

தேன்

மூடிய வாய்தி றந்து
உளமார முன்னா ளெல்லாம்
தேடிய தமிழு ணர்வைத்
தின்னவே பலர்க்கும் தந்தும்
வாடாத புலவர் போலே
அரும்பிப் பின் மலர்ந்த பூக்கள்
வாடாது தேன்கொ டுக்கும்
வண்டுகள் அதைக் குடிக்கும் !

வண்டுகள்

தேனுண்ண, வண்டு பாடும் !
தேனுண்ட பின்ஓர் கூட்டம் .
தானோர்பால் தாவும் ! வேறோர்
தனிக்கூட்டம் களியாட்டத்தை
வானிடை நடத்தும் ! ஒன்று
மலர்என்னும் கட்டி லுண்டு
நானுண்டென் றுறக்கம் கொள்ளும்
நறும்பொடி இறைக்கும் ஒன்று.

The Red-hued Petals

One petal is the cheek of an infant!
Another invites comparison to the eye
A third resembles the lips (of a woman) in ecstasy
At the sight uncloyed of her man's form!
Another looks like the heart of the wicked!
Yet another like the palm of the hand closing!

Honey

Like the bards of ages past
Who came ready and willing
To feed up one and all
That for a feel of Tamil longed for,
And who went unwearied yet,
The buds that to full blossom came
Give the honey unexhausted
Which the bees do extract.

The Bees

The bees go buzzing for honey!
The nectar taken in
A colony of them move to another spot!
Another swarm about in revelry in the sky!
A third rest in slumber on the flowery beds!
Yet another drop the pollen down!

பாட்டு மணம்

என்னை நான் இழந்தேன்; இன்ப
உலகத்தில் வாழ லுற்றேன்;
பொன்துகள், தென்றற் காற்றுப்
புதுமணம், வண்டின் பாட்டுப்,
பன்னூறு செழுமாணிக்கப்
பறவைபோல் கூட்டப் பூக்கள்
இன்றெலாம் பார்த்திட்டாலும்
தெவிட்டாத எழிலின் கூத்தே !

The Fragrance of the Music

Lost was my conscious self;
And the world of ecstasy I was in;
The golden pollen,
The fresh fragrance of the breeze,
The buzz of the bees,
The mass of flowers
Like birds of rich ruby gems in hundreds
– It's the dance of beauty
Uncloyed and unwearing!

37. இருள்

வாடிய உயிர்களை அணைப்பாய்

ஆடிஓ டிப்போர் இட்டும்,
அருந்துதல் அருந்தியும், பின்
வாடியே இருக்கும் வைய
மக்களை உயிர்க் கூட்டத்தை
ஓடியே அணைப்பாய் ! உன்றன்
மணிநீலச் சிறக ளாவ
மூடுவாய் இருளே, அன்பின்
முழக்கமே, உனக்கு நன்றி !

இருளின் பகலாடை, இரவாடை

விண்முதல் மண்வரைக்கும்
வியக்கும்உன் மேனி தன்னைக்
கண்ணிலே காண்பேன் ; நீயோ
அடிக்கடி உடையில் மாற்றம்
பண்ணுவாய் இருளே, உன்றன்
பகல்உடை தங்கச் சேலை !
வெண்பட்டில் இராச் சேலைமேல்
வேலைப்பா டென்ன சொல்வேன் !

இருள், நீர்நிலை, கதிர், சுழல்வண்டு

'எங்குசெல் கின்றாய்' என்று
பரிதியை ஒருநாள் கேட்டேன் ;
'கங்குலை ஒழிக்க' என்றான்.
கடிதுசெல் தம்பி என்றேன்.
அங்குன்னைத் தொடர்ந்தான் ; நீயோ
அகல்வதாய் நினைத்தான் ; என்னே !
எங்கணும் நிறைந்த நீர்நீ ;
அதில், "கதிர்" சுழல்வண் டன்றோ !

37. DARKNESS

Embrace the Drooping Spirits

O Darkness!
The voice resonant of love!
Do extend your loving embrace
To the people of this earth,
That come pale and fatigued
After the din and bustle of endeavour,
And drinking life to the lees!
Bring them to the shelter of your wings
That wear the complexion of the blue gem.
We're beholden to you!

The Veils of Day and Night that Darkness Wears

I could see your wondrous form
That extends from the sky to the earth;
But O Darkness!
You go about changing your attire often
A saree of gold is your day-time dress
And how could I describe
The workmanship on your saree of white silk
That you wear for the night!

Darkness, Water Sources, the Sun and the Whirling Beetle

'Where are you going?'
I queried the sun one day;
'It's to see the night extinct'
Came the reply.
I said, 'Go fast O brother!'
He pursued you right thereon;
And thought you're cleared off;
But lo!
You are pervasive, present everywhere like water
In which the sun is but a whirling beetle!

நீ முத்துடை போர்த்து நின்றாய்

கள்ளரை வெளிப்படுத்தும்
இருட்பெண்ணே, கதைஒன்றைக் கேள்;
பிள்ளைகள் தூங்கினார்கள் ;
பெண்டாட்டி அருகில் நின்றாள்
உள்ளமோ எதிலும் ஒட்டா
திருக்கையில், நிமிர்ந்தேன், நீயோ
வெள்ளைமுத் துக்கள் தைத்த
போர்வையை மேனி போர்த்தே,

கொண்டையில் நிலாக் கொண்டைப்பூ !

மண்முதல் விண் வரைக்கும்
வளர்ந்தஉன் உடல் திருப்பிக்
கண்மலர் திருப்பி நின்றாய் !
பின்புறம் கரிய கூந்தற்
கொண்டையில் ஒளியைக் காட்டும்
குளிர்நிலா வயிர வில்லை
கண்டேன் ; என் கலங்கும் நெஞ்சம்
மனைவியின் திருமுன் செல்லும் !

பிறப்பும் இறப்பும்

வானோடு நீபி றந்தாய் !
மறுபடி, கடலில் தோன்றும்
மீன்என உயிர் உடல்கள்
விளைந்தன ! எவ்விடத்தும்
நீநிறை வுற்றாய் ! எங்கும்,
பொருளுண்டேல் நிழலுண் டன்றோ !
பானையில் இருப்பாய் ; பாலின்
அணுத்தோறும் பரந்தி ருப்பாய் !

You Stood with the Cloak of Pearls on

O Dame Darkness
That bring thieves into the open!
Listen to a tale;
The children are in slumber
And wife stood close by,
With the mind unsteady I raised my head!
And you were there
With your body covered with a garment
Decked out in white pearls!

The Flower of Moonlight Adorning the Hair-knot

Turning your body stretching from the earth to the heaven!
You keep your eyes flower-like turned to the earth!
I could see the cool moon, the round diamond plate gleaming
At the back on your dark hair-knot;
My heart restless turned to my wife's lovely form!

Birth and Death

Born you were along with the sky!
Thereon came forms of life on the earth
In the manner fishes in the ocean did!
And pervasive you did remain!
Isn't there a shadow for every object seen!
You are there filling an earthen pot,
You do mark every particle in milk!

உருப்படியின் அடையாளத்தை இருள் அறிவிக்கும்

உயர்ந்துள்ள அழகு மூக்கின்
இருபுறம் உறைவாய்; மங்கை
கயல்விழிக் கடையில் உள்ளாய்;
காதினில் நடுப்பு றத்தும்.
அயலிலும், சூழ்வாய்; பெண்ணின்
முகத்தினில் அடையா ளத்தை
இயக்குவாய் இருளே, உன்சீர்,
ஓவியர் அறிந்தி ருப்பார்!

இருளே அழகின் வேர்

அடுக்கிதழ்த் தாமரைப் பூ
இதழ்தோறும் அடிப்பு றத்தில்
படுத்திருப் பாய்நீ! பூவின்
பசைஇதழ் ஒவ்வொன் றுக்கும்
தப்புக் காட்டு கின்றாய் !இன்றேல்,
தாமரை அழகு சாகும்!
அடுத்திடும் இருளே, எங்கும்,
அனைத்துள்ளும் அழகு நீயே!

Darkness Reveals the Identities of Organs

You dwell in the nostrils both of the comely
nose raised;
You are there in the extremity of women's fish-like eyes;
You envelop the middle of the ears and sides as well;
You do instruct on the identity of a woman's face;
O Darkness!
Artists are versed in your grace and charm.

Darkness Lies at the Root of Loveliness

You lay under every petal in rows of the lotus!
You disapprove of the contrast of greenness therein!
Lest the lotus will go its loveliness unliving!
O Darkness the cover fitting and protective!
You are loveliness rooted in things all.

Darkness is Ignorance, but it is that which Leads to Enlightenment

Enlightenment is the light,
Verily true it is!
And ignorance is darkness
True it is too!
Ignorance leads one to enlightenment;
(But) does enlightenment drive one to ignorance?
A boy was stung by a scorpion
It's pitch dark and a lamp was needed
They searched for a match stick to light
It was in vain.

38 ஆலைத் தொழிலாளி

ஆலையின் சங்கே நீ ஊதாயோ ? மணி
ஐந்தான பின்னும் பஞ்சாலையின் ..

காலைமுதல் அவர் நெஞ்சம் கொதிக்கவே,
வேலை செய்தாரே என்வீட்டை மிதிக்கவே

ஆலையின் சங்கே..

மேலைத் திசைதனில் வெய்யிலும் சாய்ந்ததே
வீதி பார்த்திருந்து என் கண்ணும் ஒய்ந்ததே
மேலும் அவர்சொல் ஒவ்வொன்றும் இன்பம் வாய்ந்ததே
விண்ணைப் பிளக்கும் உன் தொண்டையேன் காய்ந்ததே

ஆலையின் சங்கே.

குளிக்க ஒரு நாழிகை யாகிலும் கழியும்
குந்திப்பேச இரு நாழிகை ஒழியும்
விளைத்த உணவிற்கொஞ்ச நேரமும் அழியும்
வெள்ளி முளைக்குமட்டும் காதல் தேன் பொழியும்

ஆலையின் சங்கே.

38. THE MILL-HAND

O the whistle of the cotton mill!
It's past 5 o'clock, won't you sound?

He did toil in agony from morn,
O the whistle, won't you sound
To see him return home to me?

The sun has gone down into the west,
My eyes have grown wearied looking up at the street,
Honeyed are his words everyone of them!
How come your throat sky-rending has gone
parched?

O the whistle of the mill.......
(On his return home),
Bathing would take a *nāli**
Two more would pass in exchange of words,
Taking food would eat into our time too,
And till the rise of Venus in the sky
There would be the shower honeyed of love
O the whistle of the mill ....!

---

* An Indian hour consisting of 24 minutes

39 அன்பு

அன்பை வளர்த்திடுவாய் மெய்
யன்பை வளர்த்திடுவாய்

கூடப் பிறந்த குழந்தை யிடத்தினில்
கொஞ்சுதல் அன்பாலே ! உற

வாடி அம்மாவை மகிழ்ந்த மகிழ்ச்சியும்
அன்பின் திறத்தாலே !

தேடிய அப்பத்தில் கொஞ்சத்தை இன்னொரு
சின்னவனுக்குத் தர நீ

ஓடுவ துண்டெனில் கண்டிருப்பாய் உன்
உள்ளத் திருந்த அன்பை !

கன்றையும் ஆவையும் ஒன்றாய் இணைத்தது
கருதில் அன்பன்றோ ?

உன்னையும் உன்னரும் தோழர்கள் தம்மையும்
ஒட்டிய தன்பன்றோ ?

சென்னையி னின்றொரு பேர்வழி வந்ததும்
சிட்டுப் பறந்ததுபோல் நீ,

முன்னுற ஓட உன்உள்ளம் பறந்ததும்
முற்றிலும் அன்பன்றோ ?

39. LOVE

Cultivate love and cherish it,
Cultivate love true and sincere.
One fondling a child of the same parents is love!
That one gladdens mother by affection is love's might!
That you go willing to share with one younger to you
The rice cake you earned
Is the revelation of love rooted in your heart!
Consider that which brings the cow and the calf together,
Isn't it love?

Isn't it love
That unites your companions dear and you?
Finding one coming from Madras,
You hurry the swift tiny *ciṭṭu* bird like;
As you go running your heart flies ahead
Isn't it all love absolute?

40 பொறுமை

பொறுமைதான் உன்றன் உடைமை ! அதைப்
போற்றலே கடமை

பொறுமையாற் கழியும் நாளிலே
புதுவன்மை சேருமுன் தோளிலே !

பொறுமைதான் உன்றன் உடைமை !

பொறுமையுடைய ஏழையே கொடையன் !
பொறுமையிலாதவன் கடையன் !
இறைவனே எனினும் பிழை செய்தோன்,
ஏதுமற்றவனாகி நைவான் !

பொறுமைதான் உன்றன் உடைமை !

பலமுறை பொறுப்பாய் வேறு !
பழுதும் நேருமெனில் சீறு !
நிலைமை மிஞ்சுகையில் பகைவனை
நீறாக்கலே பொறுமையின் பயன்

பொறுமைதான் உன்றன் உடைமை !

40. FORBEARANCE

Forbearance alone is your asset!
To cherish and adore it is your duty.
The days spent in poise and fortitude
Do add prowess new on to your shoulders!
Forbearance alone is your asset!

Be one impoverished,
Equanimity renders one large-hearted!
The lack of it mean and abject!
The one given to disquietude is blameworthy
Be one of divine birth,
That goes penurous and dispirited.

Forbearance alone is your asset!
One thing it's to practise fortitude long!
A misreading therein should see you in rage!
When things move out of hand
See that the foe is extinct
Such should be the meaning and fruit of fortitude
Forbearance alone is your wealth!

41 நிலா

முழுமை நிலா ! அழகு நிலா !
முளைத்ததுவிண் மேலே — அது
பழமையிலே புதுநினைவு
பாய்ந்தெழுந்தாற் போலே !
அழுதமுகம் சிரித்ததுபோல்
அல்லி விரித்தாற்போல், — மேல்
சுழற்றி எறிந்த வெள்ளித் தட்டுத்
தொத்திக்கிடந் தாற்போல்
முழுமை நிலா ! அழகு நிலா !

குருட்டு விழியும் திறந்தது போல்
இருட்டில் வான விளக்கு ! — நம்
பொருட்டு வந்ததுபாடி ஆடிப்
பொழுது போக்கத் துவக்கு !
மரத்தின் அடியில் நிலவுவெளிச்சம்
மயிலின் தோகை விழிகள் ! — பிற
தெருக்கள் எல்லாம் குளிரும் ஒளியும்
சேர்த்து மெழுகும் வழிகள் !

முழுமை நிலா ! அழகு நிலா !

41. THE MOON

The full moon lovely and graceful
Appeared over the sky
It looked like -
New thoughts gushing from the old!
A sorrowing face coming bright with smile,
Lily putting forth blossoms,
A silver plate whirled and cast up
Remaining suspended in the air -
It's the full moon lovely and graceful!

It's a lamp amid darkness in the sky
Resembling blind eyes with vision restored
It's there for us,
Do go and spend the time in play,
Do go singing and dancing!
The moon light under the tree
Seems like the eyes of the peacock feathers!
The streets about look daubed with light and coolness!
It's the full moon lovely and graceful!

42. தமிழ்

வெண்ணிலாவும் வானும் போலே
வீரனும்கூர் வாளும் போலே
வெண்ணிலாவும் வானும் போலே !

வண்ணப் பூவும் மணமும் போலே
மகர யாழும் இசையும் போலே
கண்ணும் ஒளியும், போலே எனது
கன்னல் தமிழும் நானும் அல்லவோ
வெண்ணிலாவும் வானும் போலே !

வையகமே உய்யு மாறு
வாய்த்த தமிழ் என் அரும்பேறு !
துய்யதான சங்க மென்னும்
தொட்டிலில் வளர்ந்த பிள்ளை
(தும்) கையிலே வேலேந்தி இந்தக்
கடல் உலகாள்மூ வேந்தர்
கருத் தேந்திக் காத்தார் அந்தக்
கன்னல் தமிழும் நானும் நல்ல
வெண்ணிலாவும் வானும் போலே !

42. TAMIL

Like –
The moon and the sky,
The valiant hero and his sword sharp-edged,

Like –
The lovely flower and its fragrance,
The lute *makara yāḻ* and its music,
The eye and its vision,
Are the delicious Tamil and I to each other!

The Tamil language
Is a boon rare and precious granted to me!
It's there for the world to flourish and prosper!
It's the child cradled in the *Caṅkam* unstained!
It's one that saw patronage and protective guard
From the three Tamil kings valiant who ruled this sea-girt earth.

That sweet Tamil and I
Are like the moon and the sky.

43. பெற்றோர் ஆவல்

துன்பம் நேர்கையில் யாழ்எடுத்து நீ
இன்பம் சேர்க்கமாட்டாயா ? — எமக்
கின்பம் சேர்க்கமாட்டாயா ? — நல்
லன்பிலா நெஞ்சில் தமிழில் பாடிநீ
அல்லல் நீக்கமாட்டாயா ? — கண்ணே
அல்லல் நீக்கமாட்டாயா ? (துன்)

வன்பும் எளிமையும் சூழும் நாட்டிலே
வாழ்வில் உணர்வு சேர்க்க — எம்
வாழ்வில் உணர்வு சேர்க்க — நீ
அன்றை நற்றமிழ்க் கூத்தின் முறையினால்
ஆடிக் காட்டமாட்டாயா ? — கண்ணே
ஆடிக் காட்டமாட்டாயா ? (துன்)

அறமி தென்றும் யாம் மறமி தென்றுமே
அறிகி லாத போது—யாம்
அறிகி லாத போது—தமிழ்
இறைவனாரின் திருக் குறளிலே ஒரு சொல்
இயம்பிக் காட்டமாட்டாயா ? — நீ
இயம்பிக் காட்டமாட்டாயா ? (துன்)

புறம்இ தென்றும்நல் லகம்இ தென்றுமே
புலவர் கண்ட நூலின் — தமிழ்ப்
புலவர் கண்ட நூலின் — நல்
திறமை காட்டிஉனை ஈன்ற எம்உயிர்ச்
செல்வம் ஆகமாட்டாயா ? — தமிழ்ச்
செல்வம் ஆகமாட்டாயா ? (துன்)

43. THE YEARNING OF THE PARENTS

When we go sorrowing and despondent
Will you not play on the lute to see us sprightly?
Will you not sing a tune in Tamil, O darling!
And undo the ailments of the minds unloving?

Will you not dance after the dance of the old Tamil
To add spirit and passion to our life in this land
Where malice and meanness rule the day?
Will you not do it O our darling?

The distinction between virtue and vice
Eluding our minds as it is,
Will you not quote for us a verse from **Tirukkuṟaḷ**.
Of the Poet Supreme in Tamil?

Will you not take us into the worth of the texts,
The fruits of Tamil poetic faculty
That saw life classed into *Akam* and *Puṟam?*
Will you not gladden our hearts thereby
And endear yourself to us and to Tamil as well?

44 . பெண் கல்வி

பெண்களால் முன்னேறக் கூடும் — நம்
வண் தமிழ் நாடும் எந்நாடும் !
கண்களால் வழிகாண முடிவதைப் போலே
கால்களால் முன்னேற முடிவதைப் போலே !
பெண்களால் முன்னேறக் கூடும் !

படியாத பெண்ணினால் தீமை ! — என்ன
பயன்விளைப் பாளந்த ஊமை ?
நெடுந்தமிழ் நாடெனும் செல்வி, — நல்ல
நிலைகாண வைத்திடும், பெண்களின் கல்வி !
பெண்களால் முன்னேறக் கூடும் !

பெற்றநல் தந்தைதாய் மாரே, — நும்
பெண்களைக் கற்கவைப் பீரே !
இற்றைநாள் பெண்கல்வி யாலே, — முன்
னேறவேண் டும்வைய மேலே !
பெண்களால் முன்னேறக் கூடும் !

44. EDUCATION FOR WOMEN

This gloried Tamil land, and every country
Could accomplish progress and prosperity thro' women
Possible it is!
As one's vision guiding one on is possible!

The unlettered woman is unprofitable
Of what avail is that dumb woman?
Education for women
Could lead this Dame Tamil land wide
Into a state fecund and flourishing,
Progress is possible through women!

O fathers and mothers virtuous!
Do educate your daughters!
Education of today's women
Should see this world's onward march!
Progress is possible through women!

45 தந்தை பெண்ணுக்கு !

தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாட
சாலைக்குப் போஎன்று சொன்னாள் உன் அன்னை !
சிலைபோல ஏனங்கு நின்றாய் ? — நீ
சிந்தாத கண்ணீரை ஏன் சிந்து கின்றாய் ?
விலைபோட்டு வாங்கவா முடியும் ? — கல்வி
வேளைதோ றும்கற்று வருவதால் படியும் !
மலைவாழை அல்லவோ கல்வி ? — நீ
வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி!

படியாத பெண்ணா யிருந்தால், — கேலி
பண்ணுவார் என்னை இவ்வூரார் தெரிந்தால் !
கடிகாரம் ஓடுமுன் ஓடு ! — என்
கண்ணல்ல ? அண்டைவீட்டுப் பெண்களோடு !
கடிதாய் இருக்குமிப் போது ! — கல்வி
கற்றிடக் கற்றிடத் தெரியுமப் போது !
கடல்சூழ்ந்த இத்தமிழ் நாடு, — பெண்
கல்விபெண் கல்வி என்கின்றதன் போடு !

45. FATHER TO DAUGHTER

Combing your head and decking it with flowers
Mother told you to go to school!
Why did you keep standing there a statue-like?
Why are you shedding tears which you did never before?
Can we buy learning and knowledge?
Can we buy learning and knowledge?
One does learn by application regular and constant!
Isn't learning hill-plantain like?
You can take it unstraining,
Proceed to school O daughter!

Daughter left unschooled,
I'd be in for mockery and ridicule by folk;
O the apple of my eye!
Go swift before the clock strikes
Go with the girls of our neighbours here!
Toilsome it would seem now!
(The worth of) learning you'd realize
As you go on unminding!
This Tamil land sea-girt
Longs in earnest for education of women!

46 ஆட வந்தாள்

அவன்

ஆடற் கலைக்கழகு தேடப் பிறந்தவள்
ஆடாத பொற்பாவை ஆடவந்தாள்

என்னோ டாட வந்தாள் !
மகிழ்ந் தாட வந்தாள் ! (ஆ)

வாடாத தாமரைக்கை வானில் ஒளி தெறிக்க
மங்காத செங்காந்தள் விரல்கள் பொருள் குறிக்க (ஆ)

ஓடுபிளந்தசெம் மாதுளைபோல் உதட்டில்
உள்ளம் விளைந்தநகை மின்னவும் கா
தோரத்து வண்டுவிழி ஓடைமலர் முகத்தில்
ஓடிஎன் உள்ளங் கவர்ந்து தின்னவும்
காடு சிலிர்க்கும்படி மேலாடு முன்தானை
காற் றோடு காற்றாகப் பின்னவும்
காதற் கரும்பொன்று காலிற் சிலம்பணிந்து
கடிதில் இடைதுவள ஆடியதோ என்னவும் (ஆ)

46. SHE CAME TO DANCE

He

She's been born to add grace to the art of
dancing
The golden portrait unmoving came to dance!

She came to dance with me!
She came in ecstasy to dance with me!
The one born to add grace to dancing.

The unfading lotus hand gleaming in the sky,
The unwithering red November flower* – like fingers
in gesture,
She born to dance came in image-like grace!
The lips like red pomegranate with the shell cleft,
Gleaming with smile born from the heart,
The beetle-like eyes by the ears
Moving about on the face that resembles a flower
in the flowing stream.
Holding my heart in thrall,
The moving ends of the saree
Waving above in the wind in oneness invisible
As if providing ecstasy to the woods
There came my sugar-cane like love wearing anklets
To dance as if the waist drooping fast
The golden image – like one came to dance!

47. தமிழ்த் தொண்டு

தமிழ்என்னும் மணிவிளக் கேற்றடா நாட்டில் !
தமிழரின் நெஞ்சமாம் அழகான வீட்டில் !
அமுதென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியை
அறமென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியை. (த)

தமிழென்ற உணவினைக் குவியடா யார்க்கும்
தமிழருக் கிங்குள்ள குறையெலாம் தீர்க்கும்
சமமாக ஆற்றடா தமிழூழி யத்தை
சகலர்க்கும் ஆற்றடா தமிழூழி யத்தை. (த)

தமிழென்ற வன்மையைக் கூட்டடா தோளில்
தமிழர்க்கு நலமெலாம் வரும்ஒரே நாளில்
அமைவினால் புரியடா செந்தமிழ்த் தொண்டே
அன்பினால் புரியடா செந்தமிழ்த் தொண்டே. (த)

தமிழ்என்னும் உணர்வினைச் சேரடா எங்கும்
தமிழரின் ஆட்சியே உலகெலாம் தங்கும்
இமையேனும் ஓயாது தமிழுக் குழைப்பாய்
இன்பமே அதுவென்று தமிழுக் குழைப்பாய். (த)

47. SERVICE TO TAMIL

Light the lustrous lamp of Tamil in this soil!
Light it in the lovely homes of Tamils' hearts!
Treat as ambrosia the service to this classical tongue,
Treat this service as an act virtuous.

Feed everyone up on the feast called Tamil
And the wants and grievances of Tamils would cease!
Render your services to Tamil fair and just,
Render it to people one and all.

Add the prowess called Tamil on to your shoulders
And goodness would flow into Tamils' lives within a day;
Render services institutional to this hoary tongue
Render your services as a labour of love.

See that the feel of Tamil permeates thro' every corner
And the reign of Tamils would mark the world around;
Serve this tongue retiring not a wink
And treat this toil as a thing of joy for ever.

48 வாய்மை முரசு

மனிதன் உண்போன் ? மற்றவும் உண்பன !
மற்றவை உறங்கும் ; மனிதனும் உறங்குவான் !
இன்புறும் பிறஉயிர் ; இவனும் ஆங்ஙனே !
துன்புறுவான் இவன், துன்புறும் பிறவும் !
மனிதன் அறிபவன் ; மற்றவும் அறிவன !
மனித னுக்கு ; மற்ற உயிர்கட்குக்
குறிகள் உண்டு ; நெறிகள் உண்டு !

மனிதன் ஏன் நிலத்தில் வாய்த்த உயிர்களில்
"இனியோன்" "சிறந்தோன்" எனப்படு கின்றான் ?
முளைத்த விலங்குமுதற், சுள் ளான்வரை
உள்ள உயிர்கட் கில்லாத தென்ன ?
மனிதனிடத்தில் வாய்த்த சிறப்பெது ?
கேளீர், அதனைக் கேளீர், கேளீரே !

"உள்ளம் கண்டதை உள்ளவர்க் குரைத்தல்"
என்பது, மனித னிடத்தில் தானுண்டு !
பிற உயிர்களி'-ம் பிரசாரம் செய்யும்
தனிஒரு மேன்மை சற்றும் இல்லை ;
இம்மி கூடஇல்லை என்ற றிக !
உள்ளங் கண்டதை உலகுக் குரைத்தல்
மற்றவற் றினின்று மனிதனைப் பிரிப்பது :
மனித னுக்கு மாண்பு தருவது!

அஞ்சியோ பிறர்பால் ஆவது கருதியோ,
வயிறு தன்னை வளர்க்க எண்ணியோ
பெற்றதன் கொள்கையைப் பிறர்கை மாற்றுவோன்,
உற்ற துரைக்கும் ஒழுக்கம் தீர்ந்தவன்,
தாழ்ந்த சுள்ளானில் தாழ்ந்தவ னாவான்.

மனித ருள்ளும் மனிதத் தன்மை
"கொள்கை" என்று கூறுவர் அறிஞர்
கொள்கையை விலைக்குக் கொடுக்கும் மனிதன்
மனிதருள் வாய்த்த விலங்கு !
நெஞ்சை ஒளித்துப் பேசுதல்
வஞ்ச மன்றோ மாநிலத் தீரே !

48. PROCLAMATION OF TRUTH

Does man live by bread? So do others!
Others go in for repose; man avails himself of it too!
Non-humans seek pleasure; man does it too!
Adversity is not unknown to man; nor is it to others!
Man is a creature of consciousness; so are others!
Traits and codes unique mark man and the
others both.

Why are appellations 'kindly' and 'eminent' to man
alone on this earth?
What is that missing in all
From the animals to the tiny red ant?
What is that that renders man superior?
See what it is, do lend your ears!

To communicate by words what the heart feels
Is a trait unique to the humans!
To take one's message home to others
Is a faculty not given to the non-humans sure,
Not given in the least be it known clear!
To communicate by words what the heart feels
Is what keeps man apart and distinct,
What endows him with honour and eminence!
He that sets on compromises of codes set
By fear and timidity,
Looking for favours from others,
Or by compulsions of earning bread,
Is one drained of probity and fairness –
He is more despicable than the despicable red ant.
Sages find humanity 'the code' of humankind,
And he that makes the codes of life saleable
Is a beast among men!
Are not dissembling and hypocrisy
Marks of guile and deceit, O Countrymen!

49 நிலாப் பாட்டு

நில்வே, நிலவே, எங்கெங்குப் போனாய்?
உலக முற்றும் உலவப் போனேன்.

உலாவல் எதற்கு விலாசத் தீபமே?
காடும், மலையும், மனிதரும் காணவே.

காண்ப தெதற்குக் களிக்கும் பூவே?
சூரிய வெப்பம் நீங்கிக் குளிர.

குளிர்ச்சி எதற்கு வெளிச்சப் பொருளே?
செய்யுந் தொழிலிற் சித்தங் களிக்க.

சித்தங் களிக்கச் செய்வ தெதற்கு?
நித்தமும் நாட்டை நிலையில் உயர்த்த.

நாட்டை உயர்த்தும் நாட்டம் எதற்கு ?
வீட்டைச் சுரண்டும் அடிமை விலக்க.

அடிமை விலக்கும் அதுதான் எதற்கு?
கொடுமை தவிர்த்துக் குலத்தைக் காக்க.

குலத்தைக் காக்கும் குறிதான் எதற்கு ?
நிலத்துச் சண்டையை சாந்தியில் நிறுத்த.

சாந்தி ஆக்கும் அதுதான் எதற்கோ?
ஏய்ந்திடும் உயிரெலாம் இன்பமாய் இருக்கவே.

பதந்தனில் இன்ப வாழ்வுதான் எதற்கோ?
சுதந்திர முடியின் சுகநிலை காணவே !

49. THE SONG OF THE MOON

Tell me the places you visited O moon!
It was a stroll around the world.

Tell me the purpose thereof O the lamp of loveliness!
It was just to see the hills and woods and men.

Tell me the intent that prompted O the flower of ecstasy!
To be away in coolness from the sun's blaze.

Tell me the need for coolness O the luminary!
To go into one's work resolute and undispirited.

Tell me what calls for resolution and spirit!
To work for country's uplift day and night.

Tell me what lies behind this longing!
To remove the fetters of servility cozening us at home.

Tell me what warrants removal of this servility!
To guard the race, preventing the onslaught of the evil.

Tell me why the race needs protection!
To bring the land's feuds to a peaceful end.

Tell me of what avail bringing peace is!
To find the kindred beings live in joy.
Tell me why one needs happy living in days to come!
To get at the bliss of liberty supreme.

50 பிள்ளைக்கு நீதி

சோம்பிக் கிடப்பது தீமை — நல்ல
தொண்டுசெயாது கிடப்பவன் ஆமை !
தேம்பி அழும் பிள்ளைபோல — பிறர்
தீமையை அஞ்சி நடப்பவன் ஊமை !

புதுமையிலே விரைந்தோடு — ஒன்று
போனவழிச் செல்லும் மந்தையில் ஆடு !
எதிலும் நிசத்தினைத் தேடு — ஒன்று
எவர்சொன்ன போதிலும் நீ தள்ளிப் போடு.

தேகத்திலே வலி வேற்று — உன்
சித்தத்திலே வரும் அச்சத்தை மாற்று ! — நல்
ஊக்கத்திலே செயல் ஆற்று ! — நாளும்
உன்னருமைத் தமிழ் அன்னையைப் போற்று.

பசிவந்த போதுண வுண்ணு — நீ
பாடிடும் பாட்டினி லேசுவை நண்ணு !
வசித்திடும் நாட்டினை எண்ணு — மிக
வறியவர்க்காம் உபகாரங்கள் பண்ணு.

பொய்யுரைப் போன் பயங்காளி — பிறர்
பூமி சுரண்டிடு வோன் பெருச்சாளி
வையக மக்கள் எல்லோரும் — நலம்
வாய்ந்திட எண்ணிடுவோன் அறிவாளி.

50. COUNSEL TO CHILDREN

Harmful it's to be indolent.
He is a tortoise that shuns service!
He is a dumb one that fears the evil
Like a child that goes about sobbing!

Set your foot swift into newness
A sheep in a flock keeps the trodden path!
Seek out the truth in everything
And brush aside all else whoever the teller be.

Inject vigour and might into your body,
Cast the fear that creeps into your heart!
Go about your deeds in vigour and spirit,
Adore and foster your worshipful Mother every day!

Go in for food when you need it
And cherish the taste of the song you sing!
Keep in mind the land you live in,
Extend your helping hand to the poor and the needy!

He is a coward that tells lies
He is a bandycoote that drains away others' lands!
He is the wise man
That seeks the weal of all on this earth!

51 மாணவர்க்கு எழுச்சி !

நிற்கையில் நிமிர்ந்து நில் ! நீ
டப்பதில் மகிழ்ச்சி கொள் !
சற்றே தினந்தோறும் விளையாடு
பற்பல பாட்டும் பாடிடப் பழகு ? — நீ
பணிவாகப் பேசுதல் உனக் கழகு ! (நிற்)

கற்பதில் முதன்மை கொள்
காண்பதைத் தெரிந்து கொள்
எப்பொழுதும் மெய்யுரைக்க அஞ்சாதே
சுற்றித் திரிந்திடும் துட்டர் சிநேகம்
தொல்லை என்பதி லென்ன சந்தேகம்? நீ (நிற்)

சித்திரம் பயின்று வா
தேன் போன்று கதை சொல்
முத்தைப்போல் துவைத்த உடையணிவாய்
புத்தகம் உனக்குப் புத்துயிர் அல்லவோ?
போக்கடிக் காதே இதை நான் சொல்லவோ — நீ (நிற்)

பத்திரி கைபடி
பலவும் அறிந்து கொள்
ஒத்துப் பிறர்க்கு நலம் உண்டாக்கு !
நித்தமும் திரவிடநாடு தன்னை
நினைத்துப் பொதுப்பணிசெய் அவளுனக் கன்னை. (நிற்)

51. A CALL OF AWAKENING TO STUDENTS

Hold the head erect as you stand!
Be sprightly as you walk!
Play ever so little you can everyday!
Learn to sing songs of varied strains!
Humility in words makes for grace in your stature!

Have the lead in learning,
Take in things all you see,
Fear not ever to tell the truth!
Is it doubtful that
The company of the slothful evil men is
vexing and unprofitable?
Go about learning painting,
Tell the tales honeyed,
Wear the clothes washed pearl like;
Are not books things invigorating?
Need I to tell you that they must not be lost?

Read newspapers,
And get to know of things diverse and varied;
Do good to others by discernment and amity.
Extend your hand of service all the time,
The Dravidian land in mind inspiriting.
She is your Mother.

52. தாயகமே வாழி

தாயகமே வாழி
தமிழ் — கேரளந் தெலுகு துளுகன் னடமு
தாயகமே வாழி !

அலைமிகு காவிரி வெள்ளம் போலே
அறிவொளி சேர்க்கும் கல்வியி னாலே
நிலையினி லோங்கி வன்பகை வாட்டி
நீணிலம் வாயார வாழ்த்தவே எங்கள்
தாயகமே வாழி !

வானமேலே தாய் மணிக்கொடி !
வளர்க வீடலாம் செங்குட்டு வன்கள்ற !
வளமே ஓங்குக ! நல்லற மாதர்
மகிழ்வே பொங்குக உலகினில் எங்கள்
தாயகமே வாழி !

52. MAY THE MOTHERLAND PROSPER!

May our Motherland prosper!
May the Motherland
Encompassing Tamil, Malayalam, Telugu, Tulu
and Kannada
Prosper!
May she grow in stature
With education bringing enlightenment
Like the flood of the Cauvery marked by high tides,
May she get her mighty foes mortified
And thereby receive benediction heartful from
the whole world.

May our Motherland prosper!
The flag of the Motherland flying atop in the sky.
Let the likes of Ceṅkuṭṭuvaṉ* flourish in every home;
Let there be prosperity abounding
Let virtuous women flourish in joy
May our Motherland prosper on this earth!

---

* A renowned and valorous Chera king of the ancient Tamil country said to have hoisted the flag of victory on the Himalayas.

53. ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது !

எடுப்பு

பேறெல்லாம் பெற்றேன் மகனே — உன்னைப்
பெற்றதால் பெறாத பேறெல்லாம் பெற்றேன்

தொகுப்பு

சீரெல்லாம் பெற்றேன் மகளே — உன்னைப்
பெற்றதால் செந்தமிழ்ச் சீரெல்லாம் பெற்றேன்

அடிகள்

ஒருமகன், ஒருமகள் என்னிரு கண்கள்
உறவன்புக் காதலில் பிறந்தசீர்ப் பண்கள்
அருந்தமிழ் நாட்டுக்கு அளித்த நன்கொடை
அனைத்துல கொன்றாக்கும் தொண்டுக் கின்படை!

வள்ளுவர் இரண்டடி எம்இரு பிள்ளை
வாழ்வார்க்கு இலக்கணம் கற்பிக்கும் கிள்ளை!
அள்ளூறிப் போகின்றேன் மக்களால் யானே
அன்பின் வழியினர் அமிழ்திவர் தேனே !

53. A MOTHER'S HEART REJOICES

By having begotten you, O son,
All bliss rare and precious has come to me!
By having begotten you O daughter,
Prosperity all as becoming of this ancient Tamil
has come to me!

A son and a daughter
They are my two eyes,
They are the tuneful strains
Born of our conjugal bliss!
They are our gift to this worthy Tamil land!
They are an army of service to see the world into one!
Valluvar's verses go into two lines each;
My two children are parrots
Instructing men on the grammar of life.
They are the ones path of love treading
O children, my mouth waters at your ambrosial saliva!

54. படி ! படி ! படி !

எடுப்பு

நூலைப்படி — சங்கத்தமிழ்
நூலைப்படி — முறைப்படி
நூலைப்படி

உடனெடுப்பு

காலையிற் படி கடும்பகல் படி
மாலை, இரவு பொருள்படும்படி நூலைப்படி !

அடிகள்

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர்கள் வாழ்வ தெப்படி ? நூலைப்படி !

அறம்படி பொருளைப் படி
அப்படியே இன்பம் படி
இறந்த தமிழ் நான்மறை
பிறந்த தென்று சொல்லும்படி நூலைப்படி !

அகப்பொருள் படி அதன்படி
புறப்பொருள் படி நல்லபடி,
புகப்புகப் படிப்படியாய்ப்
புலமை வரும் என் சொற்படி நூலைப்படி !

சாதி என்னும் தாழ்ந்த படி
நமக் கெல்லாம் தள்ளுபடி,
சேதி அப்படி தெரிந்து படி
தீமை வந்திடுமே மறுபடி நூலைப்படி !

54. STUDY ! STUDY ! STUDY !

Study the books,
Study the *Cankam* classics,
Study them in the manner right.

Study them in the morning
Study them at noon,
Study them in the evening,
Study them for their meaning right
And study the books.

Study you must,
Study them so as to discern their intent,
Study them in the manner Valluvar set;
If not, how could one live in this world?
Study the books!

Study the works on Virtue,
Study the works on Wealth
And study the works on Love too.
Study them
As if resurrecting the four vedas extinct of Tamil
Study the books!
Study the *Akam** works,
Study the *Puram*** works right;

---

* That which deals with the intrinsic modes of human life
** That which deals with the worldly, material life

பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூற்களை ஒப்புவதெப்படி? நூலைப்படி!

தொடங்கையில் வருந்தும்படி
இருப்பினும் ஊன்றிப்படி
அடங்கா இன்பம் மறுபடி
ஆகும் என்ற ஆன்றோர் சொற்படி நூலைப்படி!

As you go into them deep step by step
Scholarship you acquire sure
Study the books.
Caste is a lowly step
Which we dismiss outright.
It's the message thereof, discern it well,
Lest evil will befall us sure.
Study the books!

How could we take in those books
That are deceitful and crafty,
That comprise
Falsehood in three quarters
And guile and deceit in one quarter?
Study the books.

'Exert yourself you must as you begin,
Still go into it plunging deep,
Joy unbounded results therein'.
Take these sage words of the ancestors
And study the books.

55 திருடாதே

குருடன் இடத்திலும் திருடாதே ஒன்று !
கொல்லுமே உன்னை உன் நெஞ்சே நின்று (குருடன்)

திருடன் ஒருதரம் தப்பி விட்டாலும்
திருடித் திருடித் திருடி மேன் மேலும்
பெரிய திருடனாய்ப் பல ஆண்டின் காலம்
பெறுவான் தண்டனை! சிரிக்குமே ஞாலம் ! (குருடன்)

பசித்த போதிலும் பொறுப்பது பாங்கு !
பருக்கை ஒன்றைத் திருடலும் தீங்கு
பிசைந்த கூழுக்கும் பிறர் உப்பு வேண்டாம்
பிழை செய்யும் நண்பனையும் விட்டு நீங்கு ! (குருடன்)

நீ படி ! நீ உழை ! நீ பிழை நன்றாய்
நீ பிறர்க்குதவி செய் நற்குணக் குன்றாய் !
நீ படி செந்தமிழ் நூலெலாம் ஒன்றாய்
நீ தமிழ்க்குள்ள பகை எல்லாம் வென்றாய் ! (குருடன்)

55. TAKE NOT TO STEALING

Don't steal a thing even from the blind!
And your conscience will eat into your life

A thief may escape once,
Yet he would grow into a bigger one,
Resorting to stealing once and again
And land into punishment for years long
The world would laugh in his face.

To suffer the pangs of hunger is right!
To steal even a morsel of food is wrong,
Go not for others' salt even for gruel doughed,
Leave the one that goes wrong be it even a friend.

Study, work hard and prosper
As a mountain of virtue beneficent to others!
Study the works in this ancient Tamil as one
And you will come vanquishing the foes all of this tongue.

56 விண்மீன்

வானத்து நீலப் பட்டாடை — அதில்
வாரி இறைத்த முத்துக்கள் !
மேனி சிலிர்த்திடும் கண்டால் — அவை
விண் மீன்கள் என்று சொல்லுவார்கள் !

மீன் என்று சொல்லுவதேனோ ? — அவை
மின்னிடும் காரணம் தானோ !
நீர்நிலை மீன்கள் நம் மீன்கள் — அவை
நீலவானக் கடல் மீன்கள் !

56. THE STAR

The blue-hued silken spread in the sky
And the pearls strewn all over!
A spectacle thrilling it is
And they go by the name 'stars'!

Why are they called stars?
Is it because they sparkle and shine?
They are 'fishes' of the blue-hued ocean of the sky.

57. புரட்சி செய்

புரட்சிசெய் புரட்சிசெய் தம்பி
புதிய நல்வாழ்வினை நம்பி !
புரட்சியினாலன்றி நாடு
பொதுமை கொள்ளாதுயர் பீடு !

பழமைகள் யாவுமே சாவும்,
பண்பாட்டுப் புதுமையே மேவும் !
கிழமான சாதி மதங்கள்
கிளர்ச்சிக் குதவாத பதங்கள் !

சீர்திருத்தம் என்னும் பரிதி — ஒளிச்
சிந்தனை யாலே உன் குருதி
சேர்ந்தது வேமாற்றம் கருதி — நீ
செயல்படுவாய் வெற்றி உறுதி !

அறிவியல் புகுந்ததே எங்கும் — அட
அறியாமையின் இருள் நடுங்கும் ;
முறிந்தது முடியார சாட்சி — நீ
முழங்குக குடியரசு மாட்சி !

57. RISE IN REBELLION

Do rise in rebellion, O brother
Wherein lies prospects of life new and healthy!
Socialism and the eminence attendant
The country accomplishes not without revolt!

Things of dead past extinct,
Freshness in culture there comes taking in!
Dated are castes and religions
They're just words detrimental to rebellion!
There's come fused into your blood stream
The lustrous rays of the sun
Called thoughts of reform toward an order new;
Plunge into action, and success is certain!

There's science penetrating things one and all
O! the darkness of ignorance will go shivering;
Unsettled is the order of monarchy,
And do proclaim the glory of democracy!

58 இயற்கையில் இல்லை மனிதருக்கு ஏன் ?

மலர்கள் பற்பல, மணமும் பற்பல
மதங்கள் கிடையாது ;
விலங்குகள் பற்பல வண்ணம் பற்பல
வேற்றுமை கிடையாது.

தண்ணீர் பற்பல, நிலங்கள் பற்பல
சாதிகள் கிடையாது ;
பண்கள் பற்பல பாடல்கள் பற்பல
பகைத்தீ கிடையாது.

மலைகள் பற்பல மடுவுகள் பற்பல
மடமைகள் கிடையாது ;
அலைகள் பற்பல ஆழ்கடல் பற்பல
சமயம் ஆங்கில்லை.

மாந்தர் பற்பலர், மொழிகள் பற்பல
மதிக்கும் அறிவிருந்தும்
ஏந்தும் சாதி சமயம் மதத்தின்
இழிவால் கெட்டனரே !

58. THEY DON'T EXIST IN NATURE, WHY SHOULD MEN HAVE THEM?

Diverse are the flowers, so are their fragrances
And no religions do they know;
Diverse are the beasts, so are their hues
And no distinctions do they know.

Water goes into several kinds, so do the lands
And they know no distinctions of caste;
Melody branches into many, so do the strains
And do discord does mark them.

Hills are varied, so are the pools down
And no trait of stupidity there exists;
Waves are many, so are the deep seas
And no system of religion they swear by.

Numerous are the humans, so are their languages
Endowed they are with prudence and discernment;
Yet they come degraded and vile
Swearing by caste, class and religion.

59. பார் ! பார் !

பொன்னிளங் காலையில்
பூத்த சுடர்க் கதிர்பார் !
இன் இள வேனிலில்
இன்ப மலர்ச்சியைப் பார் !

மின்னலின் கொத்தாக
முல்லை மலர்ந்தது பார் !
கன்னலின் தோகையாய்க்
களித்தசைந் தாடலைப் பார் !

வண்ணம் மிகுந்தொழில்
வடிக்கும் பறவைகள் பார் !
கண்ணில் கருத்திலே
கற்பனை கூட்டலைப் பார் !

இன்சுவை காய்கனி
எங்கும் செழித்தலைப் பார் !
செந்நெல் அறுவடை
செய்யும் உழவரைப் பார் !

இயற்கைத்தாய் பற்பல
இன்பம் அளித்தலைப் பார் !
முயற்சி இன்றேல் வாழ்வு
முழுமை பெறாததைப் பார் !

59. DO LOOK AT (THEM)

'Look at the tender rays of the sun glittering
That mark the early morn's golden hue!
Look at the spectacle of joyous bloom around
That mark the lovely pre-summer days!*

Look at the bunches of lily
That've blossomed lightning like!
Look at them waving about in rapture
Resembling the feathers of the *kannal* bird!**

Look at the birds beauty incarnate
That mark the harmony of many a hue!
See how they go adding
To the faculties rich of the eyes and the heart!

Look at the delicious fruits ripe and unripe
That have grown luxuriant everywhere!
Look at the peasants at work
Harvesting the paddy kind bearing yellow hued rice!

Look at the joy of diverse kinds
That Mother Nature bestows on us!
See that effort and toil unattending
Life remains unfinished and unwholesome!

---

* Milder, hot season - April & May

** Tukkanankuruvi

60. அகர முதலி

அகர முதலி ஒன்றை
நாளும் பார்த்து வருவாய்
நிகரிலாத சொற்கள்
நினைவில் நன்கு பெறுவாய் !

பொற் சுரங்கம் போல
புதிய புதிய சொற்கள்
முற்படும் வான்வில்லாய்
முழுதும் வைரக் கற்கள்.

சொல் லுலகக் குதிரை
தூய அகர முதலி,
வெல்லுவாய் நீ ஏறி
வீர நூலுக் குதவி !

சொற்களஞ் சியத்தைச்
சொந்த மாக்கிக் கொண்டால்
கற்ப தெல்லாம் புரியும்
கற்ப னைகள் விரியும்

நிகண்டு செய்யுட் கூண்டில்
அடைந்த சொற்குயில்கள்
அகர முதலிக் காவில்
அமர்ந்து கூவக் கேட்பாய் !

ஒரு பொருளைக் குறிக்க
ஒரு நூறு சொற்கள்
அருமை யாக ஆடும்
அழகு மலர்களைப் போல்

அணியணியாய் வீரர்
ஆர்த்து நிற்பதைப் போல்
மணிமணியாய்ச் சொற்கள்
மனத்தில் ஏற்றிக் கொள்வாய் !

60. LEXICON

Keep looking up a lexicon every day
And keep the words unique to the tongue
Deep in memory unerased!
Words that newer and newer shades mark
Are like a mine of gold,
A rainbow revealed to the eyes
And everyone of them a diamond gem!

A lexicon well-made
Is a horse in the realm of words,
A conquest of which
Is an aid through works daunting!

The corpus of words acquiring
One grasps all that one learns
And one's faculties extend to territories large!

You can hear the music of the cuckoo called words
Sitting in the flower grove called a lexicon,
Which were then languishing in cages called
metrical glosses.

A hundred terms denoting an idea!
Looking like winsome blossoms
Waving about with grace and loveliness!

Words there are set jewel like
Resembling rows of soldiers in complements full,
Take them all to your mind's store.

61 குறள் படித்தேன்

குறள் படித்தேன் குறள்படித்தேன்
குணமடைந்தேன் நான் — தூய
குருதி கொண்டேன் நான் — உயிர்
உறுதி கொண்டேன் நான் !

குறள் படித்தேன் குறள்படித்தேன்
குறைக ளைந்தேன் நான் — மனக்
கொழுமை கொண்டேன் நான் — உயிர்ச்
செழுமை பெற்றேன் நான் !

அறம் படித்தேன் பொருள்படித்தேன்
இன்பம் படித்தேன் — அறி
வின்பம் குடித்தேன் — உலகத்
துன்பம் துடைத்தேன் !

திறம் படைத்தேன் உரம் படைத்தேன்
திருக்குற ளாலே — முப்பால்
தருங் குற ளாலே — உலகு
ஒழுங்குற ளாலே !

61. I STUDIED TIRUKKURAL

Tirukkuṟaḷ I studied
And I came to the right state,
Tirukkuṟaḷ I studied
I got my blood renewed,
And I came infused with hope and assurance!
I studied **Tirukkuṟaḷ**
I came purged of my failings and taints,
I accomplished richness of mind
And fulness and fecundity there ensured too!

I studied the section on Virtue therein,
I studied those on Wealth and Love too.
I drank the blissful drink of wisdom
And I came relieved of my worldly cares!

Resoluteness and strength I gained
I gained them thro' **Tirukkuṟaḷ**
Thro' this work of Virtue, Wealth and Love
Thro' this work fit to edify the world!

62 என்நாடு

அன்னை பிறந்த நாடு — எங்கள்
அப்பன் பிறந்த நாடு
முன்னையோர் பல்கோடி — வாழ்ந்த
முத்தமிழ் சேர் தென்னாடு !

சான்றோர்களின் பாடு — தனை
சமைத் துயர்ந்த நாடு
ஆன்றோர்களின் அறிவால் — புகழ்
அணிமிகுந்த திந்நாடு !

முத்துக் கடல்சூழ் நாடு — வாழும்
முச்சங் கப்பொன் ஏடு
எத்தி சையும் மணக்கும் — அறிவு
இசைத்திடும் தேன் கூடு !

அருவி மலைகொள் நாடு — வற்றா
ஆறுகள் பாய் காடு !
கருவிருக்கும் வயல்கள் — விளைவு
கணக்கின்றித் தரும் பீடு !

தொழில் மலிந்த நாடு — உழைப்பு
தோள்களின் மேம் பாடு
விழிப்புணர்வி னோடு — எம்மை
வீர ராக்கும் நாடு !

62. MY MOTHERLAND

This is the land where my mother was born,
This is the land where my father was born,
This is the Southern Country of the Threefold Tamil*
Where lived my forefathers numbering millions.

It's the land grown to heights
Feeding on the toil of the learned!
It's the land of glory and laurels
That the sage of the ancestors had earned!

It's the land encircled by pearl-rich seas
Wherein live the works abiding of the three *Caṅkams*
Spreading their fragrance in directions all
It's the beehive of learning harmonized!

It's the land brooks and hills abounding
It's one where flows perennial rivers!
It's the land eminence marked
With fecund fields drawing copious yield!

It's the land with pursuits large
Where toil adds vitality to the shoulders.
It's the land
That infuses vivacity and prowess into her men!

---

* Tamil as constituted by
(i) Natural Tamil (common or poetic)
(ii) Tamil added to music, and
(iii) Dramatic Tamil

63. சிறுவனின் கனவுகள்

வண்ணச் சிறகுகள்
வாய்த்த மீன்கொத்தியாய்
விண்ணில் பறந்திடுவேன் நீரில்
வித்தைகள் காட்டிடுவேன்

எண்ணில் மலர்களின்
இன்ப நிறம் கொண்டு
மண்ணில் மலர்ந்திடுவேன் — மக்கள்
மனத்தில் நிறைந்திடுவேன்

நன்செயில் புன்செயில்
நாநிலம் காத்திடும்
அன்பின் விளைவாகுவேன் — உழைப்
பாளர் துணையாகுவேன்

தென்புறு ஞாயிற்றின்
தேன்ஒளிக் கதிர்களாய்
என்றும்நான் காய்ந்திடுவேன் — இருள்
இல்லாமல் பாய்ந்திடுவேன்

பழமைக் கழனியில்
புதுமை விளைத்திடும்
எழுத்தின் மலையருவி — மனம்
இசைக்கும் கலைக்கருவி !

முழுமை வடிவினை
முற்றுகை இட்டிடும்
எழுதும் இலக்கியம் நான் — கால
எதிரொலிக் கிலக்கணம் நான் !

63. THE DREAMS OF A YOUNG BOY

I would fly into the sky,
I would do things wondrous in water
Like the kingfisher of coloured feathers!

The graceful hues of the flowers myriad
I would assume and blossom on this earth
And fill the hearts of the people!

I would become the crop of love
Growing in lands wet and dry
And sustaining this four-fold earth,
And I would become the companion of the
toiling masses!

I would be the nourishing rays of the splendrous sun
Emitting the glow for ever
And forcing the darkness into dissolving!

I am the mountain stream
Planting things anew in fields stale and flat
I am the bardic instrument tuned up by the mind!
I am the work of art recorded
That knocks at the door of perfection
I do mark the echo of time!

64 . இயற்கைச் செல்வம்

விரிந்த வானே, வெளியே — எங்கும்
விளைந்த பொருளின் முதலே,
திரிந்த காற்றும், புனலும் — மண்ணும்,
செந்தீ யாவும் தந்தோய்,
தெரிந்த கதிரும் நிலவும் — பலவாச்
செறிந்த உலகின் வித்தே,
புரிந்த உன்றன் செயல்கள் — எல்லாம்
புதுமை ! புதுமை ! புதுமை !

அசைவைச் செய்தாய், ஆங்கே — ஒலியாம்
அலையைச் செய்தாய் நீயே !
நசையால் காணும் வண்ணம் — நிலமே
நான்காய் விரியச் செய்தாய் !
பசையாம் பொருள்கள் செய்தாய் — இயலாம்
பைந்தமிழ் பேசச் செய்தாய் !
இசையாம் தமிழைத் தந்தாய் — பறவை,
ஏந்திழை இனிமைக் குரலால் !

எல்லாம் அசையச் செய்தாய் — உயிர்கள்
எதிலும் அசைவைச் சேர்த்தாய்
சொல்லால் இசையால் இன்பம் — எமையே
துய்க்கச் செய்தாய் ! அடடா !
கல்லா மயில், வான்கோழி, — புறவுகள்
காட்டும் சுவைசேர் அசைவால்
அல்லல் விலக்கும் "ஆடற் — கலை"தான்
அமையச் செய்தாய் வாழி !

64. THE WEALTH OF NATURE

O the firmament! O the expanse of space!
O the source and origin of things born!
O the giver of wind, water, earth and fire!
O the seed of the world
With the sun, the moon and all diffused about!
Your deeds, we discern,
Mark newness, freshness, novelty!

You did cause motion of things!
The waves of sound are your making!
You found the earth divided into classes four
Classes desired and fitting!

Things profitable you caused to be made
You got us the common idiom of the lovely Tamil
The Tamil set to music is your gift
Thro' the honeyed tongues of birds and women
decked with jewels.

You did cause motion of things all
Motion you injected into all things living
You brought us the relish of joy
In music as in the common tongue
O wondrous it is!

The art of dance, the reliever of care and tedium,
You did bring into being
After the swings inviting
Of the untutored peacock, turky and dove!
May you prosper!

65. இருசுடரும் என் வாழ்வும்

காலை

ஒளியைக் கண்டேன் கடல்மேல் — நல்
உணர்வைக் கண்டேன் நெஞ்சில் !
நெளியக் கண்டேன் பொன்னின் — கதிர்
நிறையக் கண்டேன் உவகை !

துளியைக் கண்டேன் முத்தாய்க் — களி
துள்ளக் கண்டேன் விழியில் !
தெளியக் கண்டேன் வையம் — என்
செயலிற் கண்டேன் அறமே !

மாலை

மறையக் கண்டேன் கதிர்தான் — போய்
மாயக் கண்டேன் சோர்வே !
நிறையக் கண்டேன் விண்மீன் — என்
நினைவிற் கண்டேன் புதுமை !

குறையக் கண்டேன் வெப்பம் — என்னைக்
கூடக் கண்டேன் அமைதி
உறையக் கண்டேன் குளிர்தான் — மேல்
ஓங்கக் கண்டேன் வாழ்வே !

65. THE TWO LIGHTS AND MY LIFE

Morning

I saw the light over the sea,
Consciousness right filled my heart!
I saw the golden rays crawling in the sky
I found myself brimming with joy!

I saw the pearl like drops
My eyes marked dance of delight!
I saw the pearl like drops
I saw the world coming bright
My actions revealed traits of virtue!

Evening

I saw the sun dipping below the horizon
The languor in me went dissolving!
I saw the stars teeming
I gained freshness in my perception!

I saw the heat decreasing,
I saw serenity coming into me,
I saw the snow melting away
Life vivid came to the fore!

66 . தென்றல்

பொதிகைமலை விட்டெழுந்து சந்தனத்தின்
புதுமணத்தில் தோய்ந்து, பூந் தாது வாரி
நதி தழுவி அருவியின்தோள் உந்தித், தெற்கு
நன்முத்துக் கடல் அலையின் உச்சி தோறும்
சதிராடி, மூங்கிலிலே பண் எழுப்பித்
தாழையெல்லாம் மடற்கத்தி சுழற்ற வைத்து,
முதிர்தெங்கின் இளம்பாளை முகம்சு வைத்து,
முத்துதிர்த்துத் தமிழகத்தின் வீதி நோக்கி,

அந்தியிலே இளமுல்லை சிலிர்க்கச், செந்நெல்
அடிதொடரும் மடைப்புனலும் சிலிர்க்க, என்றன்
சிந்தை உடல் அணுஒவ்வொன் றும்சிலிர்க்கச்,
செல்வம்ஒன்று வரும் ; அதன்பேர் தென்றற் காற்று !
வெந்தயத்துக் கலயத்தைப் பூனை தள்ளி
விட்டதென என் மனைவி அறைக்குப் போனாள்.
அந்தியிலே கொல்லையில்நான் தனித்தி ருந்தேன்.
அங்கிருந்த விசுப்பலகை தனிற்ப டுத்தேன்.

பக்கத்தில் அமர்ந்திருந்து சிரித்துப் பேசிப்
பழந்தமிழின் சாற்றாலே காதல் சேர்த்து
மிக்கஅுவ சரமாகச் சென்ற பெண்ணாள்
விரைவாக என்னிடத்தில் வருதல் வேண்டும்
அக்காலம் அறைக்குவந்த பூனை யின்மேல்
அடங்காத கோபமுற்றேன் பிறநே ரத்தில்
பக்காப்பூ னைநூறு, பொருளை யெல்லாம்
பாழாக்கி னாலும்அதில் கவலை கொள்ளேன்.

66. THE SOUTH WIND

Emerging from Potiya hill,
Getting dipped in fresh sandalwood fragrance,
Collecting the pollen of flowers,
Clasping the streams,
Jumping up the shoulders of the waterfalls,
Dancing over the crest of waves of the pearl-rich Southern sea,
Investing music with the bamboo hallows,
Getting the sword like screwpine petals swing round,
Relishing the face of coconut tree's tender spathe,
Strewing pearls all through,
Traversing the Tamil land,
With the wild jasmine standing erect in the evening,
With the water from sluice that feeds the paddy yellow hued rattling,
With my mind, body and every pore up in horripilation,
There comes the wealth, it's called the South Wind.

Sensing that a cat had upset the pot of penugreek seeds
My wife went to the larder:
It's evening,
I tarried alone in the backyard
And lay down there on the swing.
My wife who had sat by me
Adding to the bliss of love
Thro' the juice of words extracted from the hoary Tamil,
And who had gone in hurrying
Should return to me undelaying;
The cat that intruded then
Was the object of my anger unbounded,
Should a hundred villainous cats play havoc
I wouldn't care a damn were it some other time!

வாழ்க்கைமலர் சொரிகின்ற இன்பத் தேனை
மனிதனது தனிமையினால் அடைதல் இல்லை ;
சூழ்ந்ததுணை பிரிவதெனில் இரண்டு நெஞ்சும்
தொல்லையுறு வகை இருத்தல் வேண்டும் அங்கே
வீழ்ந்துகிடந் திட்டஎனைத் “தனிமை” “அந்தி”
இவை இரண்டும் நச்சுலகில் தூக்கித் தள்ளப்
பாழான அவளுடலின் குளிர்ச்சி, மென்மை,
மணம் இவற்றைப் பருகுவதே நினைவாயிற்று.

தெரியாமல் பின்புறமாய் வந்த பெண்ணாள்,
சிலிர்த்திடவே எனைநெருங்கிப் படுத்தாள் போலும்,
சரியாத சூழல்சரிய லானாள் போலும்,
தடவினாள் போலும், எனைத் தன்க ரத்தால் !
புரியாத இன்பத்தைப் புரிந்தாள் போலும் !
புரியட்டும் என இருந்தேன் எதிரில் ஓர்பெண்
பிரிவுக்கு வருந்தினே னென்றாள் ஓகோ !
பேசுமிவள் மனைவி ; மற்றொருத்தி தென்றல் !

.ıe bountiful gift of the honeyed bliss
That the blooms of life confer
Remains inaccessible to men in solitude;
For one's mate inseparable to part
Grounds of affliction mutual there should be;
As I remained fallen there
The two - 'loneliness' and 'evening'
Flung me into a world of viciousness,
When all my thought went into drinking
The coolness, softness and fragrance of her body gone disused.
The woman that came stealing from behind
Feeling the horripilation
Perhaps lay close by me!
It seemed her hair ever intact came loosening,
It seemed she fondled me
And took me to bliss undiscerned;
Unminding I did remain then.
There is a woman in the front who said, "I regret the parting"
Wondrous it is!
The one that speaks is wife, the other the South Wind.

67. பாரதி உள்ளம்

சாதி ஒழித்திடல் ஒன்று — நல்ல
தமிழ் வளர்த்தல் மற் றொன்று
பாதியை நாடு மறந்தால் — மற்றப்
பாதி துலங்குவ தில்லை
சாதி களைந்திட்ட ஏரி — நல்ல
தண்டமிழ் நீரினை ஏற்கும்
சாதிப் பிணிப்பற்ற தோளே — நல்ல
தண்டமிழ் வாளினைத் தூக்கும் !

என்றுரைப் பார் என்னிடத்தில் — அந்த
இன்ப உரைகளென் காதில்
இன்றும் மறைந்திட வில்லை — நான்
இன்றும் இருப்பதனாலே !
பன்னும் நம் பாரதியாரின் — நல்ல
பச்சை அன்புள்ளத்தி னின்று
நன்று பிறந்தஇப் பேச்சு — நம்
நற்றமிழர்க் கெழில் மூச்சு !

மேலவர் கீழவர் இல்லை — இதை
மேலுக்குச் சொல்லிடவில்லை
நாலு தெருக்களின் கூட்டில் — மக்கள்
நாலா யிரத்தவர் காணத்
தோலினில் தாழ்ந்தவர் என்று — சொல்லும்
தோழர் சமைத்ததை உண்பார்
மேலும் அப்பாரதி சொல்வார் — "சாதி
வேரைப் பொசுக்குங்கள்" என்றே.

செந்தமிழ் நாட்டினிற் பற்றும் — அதன்
சீருக்கு நல்லதோர் தொண்டும்
நிந்தை இல்லாதவை அன்றோ ! — எந்த
நேரமும் பாரதி நெஞ்சம்
கந்தையை எண்ணுவ தில்லை — கையிற்
காசை நினைப்பதும் இல்லை
செந்தமிழ் வாழிய ! வாழி — நல்ல
செந்தமிழ் நாடென்று வாழ்ந்தார்.

67. THE HEART OF PĀRATI

To end distinctions of caste is one thing,
To foster and nourish Tamil fitting is another,
One ignored, the other flourishes not.
A pond cleared of the waters of caste
Will take in those of the pleasant Tamil,
The shoulders cured of the ailment of caste
Will only hold the sword of the lively Tamil!

So would he say to me,
Those honeyed words haven't gone off my ears yet;
For I do remain alive still!
Born were these words right
From the kindly unstained heart ever green
Of Pārati, our kindred lofty spirit.
It's the breath true of our Tamils virtuous!

Nothing there is like the high and the low,
Shallow this averment was not.
He would take the food right
Cooked by the one declared low by one's skin,
He would do this in the junction of four streets,
He would do this for four thousand men to see.

Pārati went on exhorting :
"Get the roots of caste singed".

Loyalty to the land of the Tamils
And service towards her weal and prosperity
- Aren't they unblameworthy?

Clothes to wear
- Never had Pārati's heart been set on,
And money
- Never had it crossed his thoughts
He lived to see this land prosper,
He lived to see this tongue flourish.

68 மகா கவி

பாரதியார் உலககவி ! — அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர் !
ஒருருக் கொருநாட்டுக் குரிய தான
ஒட்டைச்சாண் நினைப்புடையர் அல்லர் மற்றும்
வீரர் அவர் !— மக்களிலே மேல்கீழ் என்று
விள்ளுவதைக் கிள்ளிவிட வேண்டும் என்போர் !
சீருயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க் கின்ற
செம்மைநலம் எல்லாமும் அவர்பாற் கண்டோம்.

அகத்திலுறும் எண்ணங்கள், உலகின் இன்னல்
அறுப்பவைகள்; புதியவைகள்; அவற்றை யெல்லாப்

திகழ்பார்க்குப் பாரதியார் எடுத்துச் சொல்வார்
தெளிவாக, அழகாக, உண்மை யாக !
முகத்தினிலே களையிழந்த மக்கள் தம்மை
முனை முகத்தும் சலியாத வீரராகப்
புகுத்துமொழிப் பேச்செல்லாம் பொன்னி யாற்றுப்
புனல்போலத் தொடர்வதுண்டாம் அன்னார் பாட்டில்.

பழையநடை, பழங்கவிதை, பழந்தமிழ்நூல்,
பார்த்தெழுதிப் பாரதியார் உயர்ந்தா ரில்லை ;
பொழிந்திடுசெவ் வியஉள்ளம் கவிதை யுள்ளம்
பூண்டிருந்த பாரதியா ராலே இந்நாள்
அழுந்தியிருந் திட்டதமிழ் எழுந்த தென்றே
ஆணையிட்டுச் சொல்லிடுவோம் அன்னை மீதில்
அழகொளிசேர் பாரதியார் கவிதை தன்னை
அறிந்திலதே புவிஎன்றால் புவிமேற் குற்றம் !

68. THE POET SUPREME*

Pāratiyār is a world poet!
Love at heart and light of genius he possessed!
Not the one he was
With thoughts shrunk
And confined to one town or one country;
He was the one undaunted too!
He did demand that
Division of men into the high and the low
Be nipped!
We saw in him
Traits of excellence all
As would make a poet supreme.
Thoughts intuited and intrinsic,
Panacea for the ills on the earth,
Things new and untrod -
Pārati would bring home to this world gloried
In a language graceful, lucid and authentic!.
The songs of this poet mark
Words inspiriting and invigorating
Like the waters of the Ponni river
That could turn men languid and lustreless
Into ones of prowess, venturing undaunted to the forefront.

Pārati patterned not his poetry on the style
Of the old, bardic songs and classical compositions
For name and glory to achieve.
We could swear by our mother:
That Tamil that had remained suppressed
Came to the fore now its claim asserting
Had at the back Pārati's poetic vitality and might.
Should the world be ignorant of his graceful songs
The fault lies with the world!

கிராமியம் நன்னாகரிகம் பாடிவைத்தார்
கீர்த்தியுறத் தேசியம் சித்தி ரித்தார்
சராசரம்சேர் லௌகிகத்தை நன்றாய்ச் சொன்னார்.
தங்குதடை யற்றஉள்ளம்; சமத்வ உள்ளம்;
இராததென ஒன்றில்லாப் பெரிய உள்ளம் !
இன்புள்ளம் அன்புள்ளம் அன்னார் உள்ளம்
தராதலத்துப் பாஷைகளில், அண்ணல் தந்த
தமிழ்ப்பாட்டை மொழிபெயர்த்தால் தெரியும் சேதி !

ஞானரதம் போலொருநூல் எழுது தற்கு
நானிலத்தில் ஆளில்லை, கண்ணன் பாட்டுப்
போல்நவிலக் கற்பனைக்குப் போவ தெங்கே ?
புதியநெறிப் பாஞ்சாலி சபதம் போலே
தேனினிப்பில் தருபவர் யார் ? மற்றும் இந்நாள்
ஜெயபேரி கைகொட் டடாளன் றோதிக்

கூனர்களும் குவலயத்தை அவாவும் வண்ணம்
கொட்டிவைத்த கவிதைதிசை எட்டும் காணோம் !

"பார்ப்பானை ஐயரென்ற கால மும்போச்
சே" யென்ற பாரதியார் பெற்ற கீர்த்தி
போய்ப்பாழும் கிணற்றினிலே விழாதா என்று
பொழுதெல்லாம் தவங்கிடக்கும் கூட்டத் தார்கள்
வேர்ப்பார்கள்; பாரதியார் வேம்பென் பார்கள் ;
வீணாக உலககவி அன்றென் பார்கள்.
ஊர்ப்புறத்தில் தமக்கான ஒருவ னைப்போய்
உயர்கவிஞன் என்பார்கள் வஞ்ச கர்கள்.

He sang of the rural civilization,
Nationalism he portrayed in terms gloried,
Materialism came well wrought from his pen,
Free and spontaneous his feelings flowed;
Egalitarian was his spirit;
A heart large negation unknowing!
A heart sweet and·loving he had!
The songs in Tamil of this great soul rendered into world's languages,
The truth will come revealing.
None there is on the earth
To write of the kind of the Chariot of Wisdom,
Where else could one find the genius inventive
To sing of the likes of The Song of Kaṇṇaṉ?
Who else could compose one like The Vow of Pāñcāli
With its vision new and language honeyed?
Songs of exhortation 'Beat the Drum of Victory'
That came inspiriting even the lame to love this earth
Copious they flowed from his pen,
The likes of which are unknown now in the directions eight!
The class of men that would sit in penance all day
To find the glory and name Pārati achieved -
The Pārati who proclaimed "Gone are the days when brahmins were called Aiyars"-
Fall into a well desolate and decayed,
Do sweat in rage
They find him bitter like neem,
'A world poet he is not'
They'd insist in vain,

"சாதிகளே இல்லையடி பாப்பா" என்றார்
"தாழ்ச்சிஉயர்ச் சிகள்சொல்லல் பாவம்" என்றார்
சோதிக்கின் " சூத்திரற்கோர் நீதி தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறோர் நீதி"
ஓதியதைப் பாரதியார் வெறுத்தார், நாட்டில்
ஒடுக்கப்பட் டார்நிலைக்கு வருந்தி நின்றார்
பாதிக்கும் படி " பழமை பழமை என்பீர்
பழமைஇருந் திட்டநிலை அறியீர்" என்றார்.

தேசத்தார் நல்லுணர்வு பெறும்பொ ருட்டுச்
சேரியிலே நாள்முழுதும் தங்கி யுண்டார்
காசுதந்து கடைத்தெருவில் துலுக்கர் விற்கும்
சிற்றுணவு வாங்கி, அதைக் கனிவாய் உண்டார்
பேசிவந்த வசைபொறுத்தார்; நாட்டிற் பல்லோர்
பிறப்பினிலே தாழ்வுயர்வு பேசு கின்ற
மோசத்தை நடக்கையினால், எழுத்தால், பேச்சால்
முரசறைந்தார். இங்கிவற்றால் வறுமை ஏற்றார்.

வையத்து மாகவிஞர் மறைந்து போனார்;
வைதிகர்க்குப் பாரதியார் பகைவ ரேனும்
செய்வதென்ன? மேலுக்குப் புகழ்ந்தே வந்தார்;
சிலநாட்கள் போகட்டும் என இருந்தார்
உய்யும்வழி கெடாதிருக்க மெதுவாய் இந்நாள்
'உலககவி அல்லஅவர்' எனத் தொடங்கி
ஐயர்கவி தைக்கிழுக்கம் கற்பிக் கின்றார்
அழகாக முடிச்சவிழ்த்தால் விடுவார் உண்டோ?

இது அந்நாளில் ஆனந்த விகடனில் "ரா.கி." (கல்கி) யால் 'பாரதி உலக கவியல்ல' என்றும், 'அவர் பாடலில் வெறுக்கத் தக்கன' உள்ளன என்றும் எழுதியதற்கு மறுப்பாக எழுதப்பட்டது.

They would get one unnoticed around
One that plays their tune
And call him a poet excelling,
Hypocrites are these men!

'Castes there be none at all' he averred,
'Sin it is to find the high and the low' he declared,
'One kind of code for the Cūtras
A different one for Brahmins living on others' toil',
Such an order Pārati denounced.
His heart ached at the plight of the oppressed.
'You swear by tradition, the tradition inhibiting,
Know you must of its antecedents' he said.
He stayed in a colony of the unprivileged all day
And their food he shared
Which he did for his countrymen to get the right sense;
He bought the eatables from a street vendor a muslim
And had it with a mind willing and kind,
The slander and abuse thereupon he withstood.
The hypocrisy of many a countryman
That spoke of the high and the low by birth
He exposed by setting himself an example
By his speeches and writings,
Penury attendant thereby he willingly bore.

The world's great poet is no more;
Inimical to men of orthodoxy though he was
What did they do?
They went on paying tributes not born of heart though
Looking for time opportune they lay low.
And now to see their livelihood go unaffected
They set out with comments subtle:
'No world poet he is'
And go on bringing disgrace to his verses too
Will any one tolerate guile and craftiness?

69 . இசைத்தமிழ்

மேசை விளக்கேற்றி — நாற்காலி
மீதில் அமர்ந்தேநான்

ஆசைத் தமிழ்படித்தேன் — என்னருமை
அம்மா அருகில்வந்தார்

மீசைச் தமிழ்மன்னர் — தம்பகையை
வென்ற வரலாற்றை

ஓசை யுடன்படித்தேன் — அன்னைமகிழ்
வுற்றதை என்னசொல்வேன் !

செந்தமிழ் நாட்டினிலே — வாழ்கின்ற
சேயிழை யார் எவரும்

வந்த விருந்தோம்பும் — வழக்கத்தை
வாய்விட்டுச் சொல்லுகையில்

அந்தத் தமிழ்அன்னையின் — முகத்தினில்
அன்பு பெருகியதை

எந்த வகைஉரைப்பேன் ! — கேட்டபின்பும்
இன்னும்சொல் என்றுரைத்தார் !

கிட்ட நெருங்கிளனைப் — பிள்ளாய் என்று
கெஞ்சி நறுந்தேனைச்

சொட்டு வதைப்போலே — வாய்திறந்து
சொல்லொரு பாடல் என்றார்

கட்டிக் கரும்பான — இசைத்தமிழ்
காதினிற் கேட்டவுடன்

எட்டு வகைச்செல்வமும் — தாம்பெற்றார்
என்னைச் சுமந்துபெற்றார் !

69. VERSES IN TAMIL SET TO MUSIC

Seated at the table
With the table-lamp lit,

I started studying Tamil the lovable.
My mother kindly came by my side.

The history of the Tamil monarchs manly
That vanquished their foes

I read aloud,
O how could I describe my mother's joy then!

As I went reading aloud
Of the hospitality

Of the women one and all richly adorned
Of this hoary Tamil land,

Love overwhelming marked my mother's face
The mother born in this Tamil soil –

How could I describe this love!.
And she urged me to go on!

Coming closer
She pleaded with me
"O son! recite a verse aloud for me
As if pouring rich honey by drops"
The verse sweet like sugarcane set to music
Flowing into her ears
She the one that bore me along
Felt endowed with the eight classes of wealth.

70. சங்கங்கள்

சங்கங்களால் — நல்ல
சங்கங்களால் — மக்கள்
சாதித்தல் கூடும் பெரும்பெருங் காரியம்

சிங்கங்கள் போல் — இளஞ்
சிங்கங்கள் போல் — பலம்
சேர்ந்திடும் ஒற்றுமை சார்ந்திட லாலே

பொங்கும் நிலா — ஒளி
பொங்கும் நிலா — எனப்
பூரிக்கும் நெஞ்சிற் புதுப்புதுக் கோரிக்கை

மங்கிடுமோ? — உள்ளம்
மங்கிடுமோ? — என்றும்
மங்காது நல்லறி வும்தெளி வும்வரும்

சங்கங்களை — நல்ல
சங்கங்களை — அந்தச்
சட்டதிட் டங்களை மூச்சென வேகாக்க!

அங்கம் கொள்க! — அதில்
அங்கம் கொள்க! — எனில்
அன்பினை மேற்கொண்டு முன்னின் றுழைத்திட

எங்கும் சொல்க! — கொள்கை
எங்கும் சொல்க! — இதில்
ஏது தடைவந்த போதிலும் அஞ்சற்க!

தங்கத்தைப் போல் — கட்டித்
தங்கத்தைப் போல் — மக்கள்
தங்களை எண்ணுக! சங்கங்க ளிற்சேர்க்க!
தங்கத்தைப் போல்....

70. UNIONS

Through Unions – the healthy ones
People could accomplish things great and lasting.

Unity realized strength is ensured
The strength a lion's like, a young lion's like.

In the hearts gay and cheering
Like the moon with her glow of light
Demands there are, demands newer and newer –

Will they go disspirited?
Will their hearts go lustreless?
Never. Clarity and better awareness would ensure.
Protect the Unions, the healthy ones,
Protect the laws governing them
As if they were your breath.

Do become its member,
Enrolled, be in the forefront
Work for it, extending your labour of love.

Proclaim its policies!
Take its message everywhere
Go not deterred whatever the obstacles be!

Take the people for gold
Take them for a mass of gold
And enroll them as members.
Men unprincipled, uninformed by policies,
Unworthy they are
To be members of human societies!

கொள்கை இல்லார் — ஒரு
கொள்கை இல்லார் — மக்கள்
கூட்டத்தில் இல்லை ! சங் கங்களின் சார்பினைத்

தள்ளுவதோ ? — மக்கள்
தள்ளுவதோ ? — சங்கத்
தாய்வந்து தாவும் தளிர்க்கையைத் தீதென்று

விள்ளுவதோ ? — மக்கள்
விள்ளுவதோ ? — மக்கள்
வெற்றியெல் லாம்சங்க மேன்மையி லேஉண்டு

கொள்ளுகவே — வெறி
கொள்ளுகவே — சங்கம்
கூட்டிட வும்கொள்கை நாட்டிட வும்வெறி
கொள்ளுகவே....

சாதி மதம் — பல
சாதி மதம் — தீய
சச்சர வுக்குள்ளே பேத வுணர்ச்சிகள்

போதத்தையே — மக்கள்
போதத்தையே — அறப்
போக்கிடும் மூடவ ழக்கங்கள் யாவும்இல்

லாத இடம் — தீதி
லாத இடம் — நோக்கி
யேகிடு தேஇந்த வைய இலக்கியம் !

ஆதலினால் — உண்மை
ஆதலினால் — சங்கம்
அத்தனை யும்அதை ஒத்து நடத்துக !

Should one keep off,
Should one reject
Connections with Unions?

Should one sever
The shoot-like hand Union the mother extends
As if it were fire?

The success of people all
Goes with the prosperity of Unions
Their strength and excellence!
Cultivate a passion mad like
To institute Unions
To uphold their policies and programmes.

Religions and castes
Numerous they are
So are their feuds and differences;

Potential rich they have
To see our wisdom unmade
And undone utterly;

The world looks for
And moves towards a place
That's free from superstitions,

It being so,
And true as it is,
Let the Unions be run to this end.

உள்ளத்திலே — நல்ல
உள்ளத்திலே — எழுந்
தூறி வரும்கொள்கை யாகிய பைம்புனல்

வெள்ளத்திலே — இன்ப
வெள்ளத்திலே — இந்த
மேதினி மக்கள் நலம்பெறு வாரென்று

தள்ளத் தகாப் — பல
தள்ளத் தகா — நல்ல
சங்கங்கள் எங்கணும் நிறுவுவர் சான்றவர் .

பள்ளத்திலே — இருட்
பள்ளத்திலே — வீழ்ந்த
பஞ்சை கட்கும்சங்கம் நெஞ்சிற் சுடர்கூட்டும் சங்கங்களால்..

தாய் தந்தையர் — நல்ல
தாய் தந்தையர் — மண்ணில்
தாம் பெற்ற பிள்ளைகள் சங்கத்திற்கே என்ற

நேயத்தினால் — மிக்க
நேயத்தினால் — நித்தம்
நித்தம் வளர்க்க ! நற் புத்தி புகட்டுக !

ஆய பொருள் — உண்
டாய பொருள் — முற்றும்
அங்கங் கிருந்திடும் சங்கங்களுக் கென்றே

தூய எண்ணம் — மிகு
தூய எண்ணம் — இங்குத்
தோன்றிடில் இன்பங்கள் தோன்றிடும் ஞாலத்தில்.

Men eminent and learned
Establish Unions healthy everywhere
Unions that one affords not to reject,

Unions they do establish
So that people on this earth
Bath, in the flood of the good.

In the flood of cool waters called principles
That live in the hearts unspotted
And spring thereof.

Even those penury afflicted
And fallen into pits dark and deep –
Unions could light their hearts.

Let parents worthy and good
Bring up their children committed to Unions
Let them inculcate an awareness thereof.

All income and profit earned.
Should go to the Unions
To the Unions catering to the given locality.

Purity of thought prevailing
Thought unspotted to the core
The world would see the bliss of life.

71. கொட்டு முரசே!

எல்லார்க்கும் நல்லின்பம்
எல்லார்க்கும் செல்வங்கள்
எட்டும் விளைந்த தென்று
கொட்டு முரசே — வாழ்வில்
கட்டுத் தொலைந்த . தென்று
கொட்டு முரசே !

இல்லாமை என்னும் பிணி
இல்லாமல் கல்வி நலம்
எல்லார்க்கும் என்று சொல்லிக்
கொட்டு முரசே — வாழ்வில்
பொல்லாங்கு தீர்ந்ததென்று
கொட்டு முரசே !

சான்றாண்மை இவ்வுலகில்
தோன்றத் துளிர்த்த தமிழ்
மூன்றும் செழித்த தென்று
கொட்டு முரசே — வாழ்வில்
ஊன்றிய புகழ் சொல்லிக்
கொட்டு முரசே !

ஈன்று புறந் தருதல்
தாயின் கடன் ! உழைத்தல்
எல்லார்க்கும் கடனென்று
கொட்டு முரசே ! — வாழ்வில்
தேன்மழை பெய்ததென்று
கொட்டு முரசே !

71. BEAT O DRUM!

Beat O drum, proclaiming
'Happiness unsullied for all,
And riches of right kind to everyone
We achieved,'

Beat O drum, proclaiming
'The fetters of life were gone!,

Beat O drum, proclaiming
'The ailment called poverty
Disappeared,
And the fortune called education
We realised!'

Beat O drum, proclaiming
'Our life was freed from evil and misfortune!'

Beat O drum, proclaiming
'The three-fold Tamil
That begot sageness on this earth
Came flourishing!'

Beat O drum, proclaiming
'The glory our lives marked!'
Beat O drum, proclaiming
'It's mother's duty
To bear a child and hand him to the world,
And to work and toil is everyone's duty!'

Beat O drum proclaiming
'The showers of honey
Our lives were blessed with!'

72. அவள் யார் ?

ஓர் நிலவே அவள்தானோ ! கதிர்தானோ !
கொம்புத் தேனோ ! — நடை
ஓவியமோ ! புள்ளி மானோ ! — வேண்டும்

நேயத்திலே நெஞ்சம் தோயும்போதில் — புதிதாய்
நேரிட்ட இன்பத்தேன் ஊற்றோ ? — வந்து
நெஞ்சைத் தொடும்குளிர் காற்றோ ? (ஓர்)

மாணிக்கச் சிரிப்புக் காரியோ ? — நெஞ்சை
மகிழ்விக்கும் வானம் பாடியோ ?
ஆணிப் பொன்னே அவள் மேனியோ ? — மொழி
அனைத்தும் தித்திக்கும் சீனியோ ? (ஓர்)

ஆடும் மயிலோ, பாடும் குயிலோ ? — படம் விரித்
தாடும் மயிலோ, பாடும் குயிலோ ? (ஓர்)

நாடும் அகப்பொருளி னுக்கே — அவள்
நல்லதோர் இலக்கியமோ ?
தேடரிய கலைப்பொருளோ ? — அருமைச்
செந்தமிழின் இன்சுவையோ ? (ஓர்)

72. WHO IS SHE?

Is she the moon, the sun?
The honey formed on branches?
Is her gait that of a picture, a spotted deer?
It must be.
When the heart gets immersed in love,
Is she the fountain of honeyed bliss newly met?
Is she the cool wind caressing the heart?

Is she the one of a ruby's smile?
Or a skylark enthralling the heart?
Is her body one of choice gold?
Are her words all sugar tasting fine?

Is she the peacock dancing or the cuckoo singing?
The peacock with feathers spread?
Is she the exemplification choice
Of the theme of *akam* desired much?
Is she an artefact rare to find?
Is she the delicacy of Tamil hoary and lovable?

73 அவள்

பாருக்கோர் புதுமை
மாதர்க் கரசியவள் !
பார்க்கும் பார்வை தன்னிலே — வந்து
பாயும் காதல் மின்னலே !

அவள் வார்த்தை ஒவ்வொன்றுமே
நேர்த்தி மட்டுமல்ல !
நறுக்கிப் பிழிந்தநற் கன்னலே !

நேருக்கு நேரிரண்டு
கெண்டை கண்டேன் நெற்றி
நீராழி மண்டபத்தில் — அதற்
கப்புறம் ஓர்புறத்தில் — கடும்

போருக்குப் பாரை
அழைக்க வளைத்த இரு
புருவங் கண்டேன் நிறத்தில் !

பவழமோ கோவைப்
பழமோ மின்னற் பிழம்போ ?

பாவை இரண்டு உதடுமே — உண்டால்
சாவையும் நீக்கி விடுமே ! — அங்கே

தவழும் ஒளிச் சிரிப்பைத்
தான்கண்டால் என்னுள்ளம்
பேரின்பத்தைத் தொடுமே !

நுண் இடையும் அன்னம் போன்ற
நடையும் நிறைய மடை

உடையும் அழகின் பெருக்கா ? — இவை
கடையில் விற்கும் சரக்கா ? — மேல்

உடை என்று மின்னுடுத்தி
உலவிடும் தங்கத்தேர்
எனக்கல் லாமல் பிறர்க்கா ? (பாருக்)

73. SHE

She is a novelty to this world
A princess among women!
In the very glance she throws
There is the flash of lightning called love!

In her words every one of them
There is not just elegance!
It's sugarcane clipped off and pressed out!

In the hall in mid-tank called forehead
I sighted two fish;
Then I saw two eye-brows dark in the exterior
That for a battle fierce challenged the world.

Are they the corals red in hue?
The red fruits of the *kowai* creeper?
Or are they a column of lightning?
The two lips when drunk
Would render one deathless sure!

A sight of the lustre of smile she wears
Would send my heart to rapture supreme!

The delicate slender waist,
The swan's like gait
The attire of perfect spread -
Are they the flood of loveliness?
Or are they the commodity sold in a shop?
The golden car that moves about
With an upper garment lightning like
- Is it for somebody else and not for me?

74. பிறக்க முடியாது

பிறக்க முடியாதடி
உனைப்போல் ஒருத்தி !

பெண்ணழ கால் இந்த
மண்ணரசாள இனிப்
பிறக்க முடியாதடி
உனைப்போல் ஒருத்தி !

மறக்கவும் முடியாது
கண்ணே உன் முகத்தையும்
வாரிஒளி வீசும்
நகைமுத்துச் சரத்தையும் !

இறக்கவும் முடியாதே
உனை இழந்தே னென்றே.
பிறக்க முடியாதடி —
உனைப்போல் ஒருத்தி !

பறக்கவும் முடியாது
நீ என்னை விட்டே !
பச்சை மயிலேவா
வாழ்வின் பொருட்டே !
திறக்க வேண்டும் உன்வாய்
என்நலம் கோரி
தென்னாடு பெற்ற என்
கிளிப் பேச்சுக் காரி !

பிறக்க முடியாதடி —
உனைப்போல் ஒருத்தி!

74. ONE IMPOSSIBLE TO SEE BORN ON THIS EARTH

One of a kind you are, O my woman
It's impossible to see one born on this earth!

Of your like O my woman!
It's impossible to see one born henceforth
That with one's feminine loveliness
Could reign this earth!

Your face,
And the pearl-string of smile your lips wear
Which emits a mass of gleam
It's impossible to erase from mind O dear!

I can't resort to death too
Thinking you're lost to me;
One like you O my woman!
It's impossible to see born on this earth!
You can't take wings too
Leaving me right;
O peacock green hued
Come to see me alive and living!
You must utter a word
My well-being in mind
O the parrot-tongued,
The gift of this Southern Country!

One like you O my woman
It's impossible to see born on this earth!

75. திரும்பிப் பார்த்தால் என்ன ?

திரும்பிப் பார்த்தால் என்ன?
விரும்பிப் பார்த்த என்னை அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?

பெரிய வேலை உள்ளவன் போலே
பெண்ணை வெறுத்தவன் போலே
அரும்பும் சிரிப்பை அடக்கிச் சென்றான்
அசையும் தேரைப் போலே — அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?

குன்று சார்ந்த நாடும் வீடும்
கொடுவென்று கேட்டேனா? — நான்
சென்று வழியை மறித்துச் சிரித்து
மடியில் கைபோட் டேனா? — அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?

மானென் றும்ஒரு மயிலென் றும்எனை
அழைக்கச் சொன்ன துண்டா? — எனை
ஏன்என் றொருசொல் சொன்னால் உள்ளம்
ஒடிந்திடுமோ துண்டா? — அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன!

சதையில் மெருகும் முகத்தில் அழகும்
தாங்கிச் சென்றான் கொடியன் — நான்
அதிலே கொஞ்சம் இதிலே கொஞ்சம்
அள்ளிக் கொள்ளவா முடியும்? — அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?

பாதி மறைத்துப் பாதி விலக்கும்
படத்து நடிகை யாநான்?
காதல் கொண்டஎன் முகத்தைப் பார்க்கக்
கண்ணும் கூசுவ தேனோ? — அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?

75. WHY NOT CAST A FAVOURABLE LOOK?

Why not cast a favourable look!
Why should not he cast a favourable look
On me whose eyes went towards him in desire and love?

He went off
As if he were to attend a pressing work,
As if he despised women
He went suppressing his smile
And went like a car moving.
Why shouldn't he cast a favourable look on me?

Did I ask for the country of the hill tract and a house?
Did I intercept him on his way
And lay the hands in his pocket with a crafty smile?
Why shouldn't he cast a favourable look on me?

Did I ever demand that
I be praised as a deer and a peacock?
Would a word caring to me see his heart into pieces?
Why shouldn't he cast a favourable look on me?

The unkind and unfeeling one went off,
The one with lustre on the muscles and comeliness on the face,
Could I take up right
A handful here and another there?
Why shouldn't he cast a favourable look on me?

Am I an actress in a cinema
Half concealed and half exposed?
Why should his eyes go squinting from my face love-struck?
Why shouldn't he cast a favourable look on me?

76. கலப்பு மணம் வாழ்க

எனக்குப் பகைமேல் உனக்குக் காதலா?
என்று "மன்று ளா" டியார் இயம்பவே,
புதுப்பூ முத்துநகை புகலுகின்றாள்:
எதற்குநீர் எதைப்புகல் கின்றீர் அப்பா
அவர் உமக்கே அன்றுபோல் இன்றும்
பகையாய் இருப்பதைப் பாவைநான் என்றும்
எதிர்ப்பதே இல்லை. நீங்களும் என்போல்
மாதுநான் அவர்மேல் வைத்த காதலை
எதிர்க்க வேண்டாம் ! ஏனெனில் அப்பா
எட்டிய தென்மனம் அந்த இளைஞரை
ஒட்டியது மீட்க ஒண்ணுமோ சொல்லுக.

ஒழுக்கம் உடையவர்; கல்வி யுடையவர்
பழுத்த தமிழன்பு படைத்த மேலோர்
நான்அவ ராகி விட்டேன்; நான் என
வேறொன் றில்லை. அவரும் வீணாய்த்
தனித்தே இருந்து சாக எண்ணிலர்,
என்று சாற்றினாள் ! தந்தை இயம்புவான்:

நமது சாதி வேறு; நல்லோய்,
அவனது சாதி வேறென் றறிகிலாய்
என்று சினத்தைச் சொல்லில் ஏற்றினான்,
மங்கை இனிய வகையில் சொல்லுவாள்:

அப்பா உண்மையில் அவரும் என்போல்
மனிதச் சாதி, மந்தி அல்லர்
காக்கை அல்லர்; கரும்பாம் பல்லர்
என்று கூறத் தந்தை இயம்புவான்:
மனிதரில் சாதி இல்லையா மகளே?
என்று கேட்க — மங்கை இயம்புவாள்:
'சாதி சற்றும் என் நினைவில் இல்லை
மாது நான் தமிழனின் மகளாத லாலே;
என்றாள் செந்தமிழ் இலக்கியப் பைங்கிளி.
தந்தை, மக்கள் நிகர்எனும் தனது
சொந்த நிலையில் தோய்ந்தே
அந்த வண்ணமே வாழ்கஎன் றானே.

76. MAY INTERMARRIAGE PROSPER!

'Should you love the one who is my foe?'
Said Manrulāṭiyār, and Muttunakai fresh blossom like replied:
"Why should you link it with that O father!
That he remains your foe now as he did then
Never have I remonstrated against.
Likewise try not to thwart my love for him
For my heart has reached out to that young man
And can one untie the hearts united, tell me O father!
He is decorous and learned
He is noble with love consummate for Tamil;
I have become one with him, individual no longer;
He too would stay single to meet his end".
She averred to see father respond :
"Do see O my daughter virtuous!
Our caste and his are different"
Came his words fury marked;
Spoke the maid kindly and pleasing:

"O father he too is of the human kind
Not one of the monkey or the crow ;
Not a black serpent".
Retorted the father :

"Don't we have castes among men?"
"Distinctions of caste cross not my mind
Born as I was to a Tamil"
Replied the parrot like one versed in the letters of the hoary Tamil
Father devotion to offspring asserting said:
"May you flourish in the manner you wished".

77. நானும் அவளும்

நானும் அவளும் ! உயிரும் உடம்பும்,
நரம்பும் யாழும், பூவும் மணமும்,
தேனும் இனிப்பும், சிரிப்பும் மகிழ்வும்,
திங்களும் குளிரும், கதிரும் ஒளியும் *நானும் அவளும் !*

மீனும் புனலும், விண்ணும் விரிவும்,
வெற்பும் தோற்றமும், வேலும் கூரும்,
ஆனும் கன்றும், ஆறும் கரையும்,
அம்பும் வில்லும், பாட்டும் உரையும் *நானும் அவளும்!*

அவளும் நானும் அமிழ்தும் தமிழும்
அறமும் பயனும், அலையும் கடலும்,
தவமும் அருளும், தாயும் சேயும்,
தாரும் சீரும், வேரும் மரமும் *அவளும் நானும் !*

அவலும் இடியும், ஆளும் நிழலும்,
அசைவும் நடிப்பும், அணியும் பணியும்,
அவையும் துணிவும், உழைப்பும் தழைப்பும்,
ஆட்சியும் உரிமையும், அளித்தலும் புகழும் ! *அவளும் நானும் !*

77. SHE AND I

She and I!
We are soul and body,
Strings and the lute, flower and fragrance,
Honey and sweetness, laughter and joy,
The moon and coolness, the sun and brightness,

We are
Tamil and the nectar, virtuousness and its reward
Ocean and waves, penance and bliss
Mother and child, garland and comeliness, roots and tree!

Unhusked we are rice and rice-flour, man and shadow
Motion and acting, order and work
Assembly and assurance, toil and prosperity,
Governance and rights and liberality and laurels!

78. பெண்

பெண்ணென்றால் அவளல்லவோ பெண்? — உலகில்

(பெண்)

கண்ணவள் மாமியார்க்கே காப்பவள் மாமனார்க்கே
உண்மையில் வாழ்க்கையிலே உயிராவாள் கணவனுக்கே!

பொன்னான குணமுடையாள் பொய்யில்லா மனமுடையாள்
முன்னான அறமுடையாள் முத்தான சொல்லுடையாள்
தென்னாட்டின் பண்பாட்டில் தீராத பற்றுடையாள்
தன்வீட்டு விருந்தினர்மேல் தாய்போன்ற அன்புடையாள்!

(பெண்)

மாண்புடைய தமிழ் நெறிக்கு மாத்தமிழர் புகழ்ஒளிக்குக்
கோணல் வந்தால் ஒருதுளிக்கு நாணம் வரும் அந்தக் கிளிக்கு;
காணநல்ல நகை வேண்டாம் கற்பொன்றேஅவள் பூண்டாள்
ஆணழகன் வீட்டினுக்கே அறம்வளர்க்கும் திருவிளக்கே!

(பெண்)

காலையிலே தான்எழுவாள், கன்னித்தமிழைத் தொழுவாள்,
வேலை எதிலும் வழுவாள், வீணர் நிலைக்கே அழுவாள்,
ஏலாத சாதிமுறை எள்ளளவும் அவள் தழுவாள்,
ஞாலத்து வள்ளுவனார் நன்னெறி விட்டே நழுவாள்!

(பெண்)

பெண்டிர்க்குப் பெருமாட்டி பிள்ளைகட்கு வழிகாட்டி!
அண்டிடும் ஏழைகளை ஆதரிப்பாள் அமுதூட்டி!
வண்டமிழ்த் தாயான வையத்து மூதாட்டி
தொண்டுக்கே அன்புகாட்டித் தொழுவாள் மணமலர் சூட்டி!

(பெண்)

78. WOMAN

She is the woman exemplary unique in the world!
She is eye of her mother-in-law and prop of her father-in-law
She is the soul unfailing of her husband in life!
Disposition fine she does possess
And is of a mind free from falsehood,
Virtue tradition handed she has
Along with words pearl-like,
Love inexhaustible she has for the South's culture
Motherly care she extends to the visiting guests!

Dishonour to the gloried Tamil tradition
And disgrace to the glow of Tamil's renown
Would see that parrot-like one down with outrage;
She wore not ornaments choice but chastity,
She is the sacred lamp, virtues fostering in her man's home!

She wakes up in the morning and worships Tamil the undeflowered,
Lapses she would commit not in her daily works,
She would go distressed at those taking to evil ways,
She would keep off the practice of caste unbecoming,
Deviate she wouldn't from the codes of righteousness Valluvar set!

A princess among women, beacon-light for children!
She feeds the poor and the needy at her door-step!
Mother of the Tamil fecund, she's the ripe one among world's women!

Going the path of loving service
Worship she offers adorning her man with the nuptial wreath!

79 அண்ணல் பெயர் வாழ்க!

எடுப்பு

பிறந்தவர் யாவரும் பெற்றறியாப் புகழ்
பெற்ற காந்தி அண்ணலைப் பிரிந்தோமே! உலகில்

(பிறந்தவர்)

உடன் எடுப்பு

இறந்தார் அண்ணல் எங்கணும் பிறந்தார்
ஈந்துவக்கும் அனைத்தும் உலகுக் கீந்தார்!

(பிறந்தவர்)

அடிகள்

அறிந்தோர் யாவரும் அறிஞர் என்றேத்தினார்
அருளே உருவென உலகினர் வாழ்த்தினார்,
திறந்தெறிந் தாங்கிலர் பிடிப்பையும் மாற்றினார்,
திருநாட் டுரிமைகண் டனைவரும் போற்றினார்!

(பிறந்தவர்)

மதவெறி தன்னலம் மறைந்திட உழைத்தார்,
மாபெரும் நிலை நோக்கி நாட்டினை அழைத்தார்!
உதவா வேற்றுமை அனைத்தையும் பழித்தார்,
உலகின் நினைவில்தன் பெயரைவைத் திழைத்தார்!

(பிறந்தவர்)

வாழிய காந்தி அண்ணலின் நினைவே
வாழிய வாழிய அன்னோர் பெயரே!
ஆழிசூழ் உலகில் அவர்கண்ட பாதை
அனைவரும் தொடர்க! இன்புற்று வாழ்க!

(பிறந்தவர்)

79. MAY THE LOFTY NAME (OF GANDHI) PROSPER!

Oh we parted with Gandhi the noble scul
Who achieved renown unmatched by any one born on the earth!

Dead is that supreme being
Things abundant bestowing on men around,
Things men could give in liberality heartful!

Those that knew him found him sage,
'Grace incarnate' was the tribute the world paid,
His might realizing the Englishmen untied the fetters,
Plaudits poured in with this sacred land freed!
He strove for self-centred frenzy of religion to go,
A position lofty and sublime he led the country toward,
He reproached discords all unfruitful,.
His name he engraved in the memory of the world!

May the memory of the lofty being flourish!
May his name prosper for ever!
Let everyone of this sea-girt earth
Follow his path right and clear
And live to see joy and ecstasy!

80. லெனின்

யுகமாகிநின்ற லெனின் உலகாகிநின்ற லெனின்
உறவாகிநின்ற லெனினே
அகமாகிநின்ற லெனின் அறிவாகிநின்ற லெனின்
அரசாளவந்த லெனினே
சுகமாகிவந்த லெனின் துணையாகிவந்த லெனின்
சுதந்திரமான லெனினே
இகமாகிநின்ற லெனின் எமையாளவந்த லெனின்
இறையாகிவந்த லெனினே.

நறவூறு கின்ற மொழி பொருளார்க்கும்என்ற வழி
நடைகொண்டு வந்த லெனினே
உறவாகி உலகெங்கும் உழைப்பாளர் ஆட்சிநெறி
உறமாக்கி வைத்த லெனினே
இறவாமை கொண்ட ஒரு குடியாட்சிதன்னை இனி
இயல்பாக வேத முடிவாய்
அறவாழி புதிதாக அகிலாண்டம் நின்றுயர
அருளாகி நின்றலெனினே.

80. LENIN

An epoch, global in stature
And a kindred spirit that Lenin is.

Part of our inward nature, intellect incarnate
And one that's come to reign that Lenin is.

Bringer of bliss a prop in need
And liberty embodied that Lenin is.

Of the here and now, a sovereign over our lives
And a being divine that Lenin is.

One of tongue honeyed and the bringer of an order
That finds distribution of wealth for all that Lenin is.

Founder of an order that came dear to the world over
Whereunder workmen reigns of governance assumed.

People's rule a lasting order that it is
And end of the old order
And an order virtuous anew
Lofty and world-nourishing
All came symbolized in one that Lenin is.

81 . புரட்சிக்கவி — நிலவெழுச்சி

நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தைக் !
கோலமுழு தும்காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!
சொக்கவெள்ளிப் பாற்குடமோ, அமுத ஊற்றோ !
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப் பிழம்போ!

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்;
அவ்வாறே வான்கண்டேன்; திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள் தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான் !
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில் வாழ்வைச் சித்தரித்த வண்ணந்தானோ !

உனைக்காணும் போதினிலேஎன் னுளத்தில்
ஊறிவரும் உணர்ச்சியினைஎழுது தற்கு
நினைத்தாலும் வார்த்தைகிடைத் திடுவதில்லை
நித்திய தரித்திரராய் உழைத் துழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால், பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின்நிலவே உனைக்காணும் இன்பம் தானோ !

81. THE RISE OF THE MOON

Thro' your gleaming face you reveal your identity
With body concealed in the cloak called the blue firmament!

All your grace and beauty revealed,
Would this world go perishing by love's plenty?
You're the flower unique in the garden of the sky!
Are you the pot of milk of silver unalloyed!
Are you the fountain of ambrosia!

Are you the rising sun red in hue
Who turned a column of light glowing,
Having bathed in the ocean
Your scorching heat transformed into coolness thereon!

I saw the world growing dusky in the evening twilight;
I saw the sky and the directions growing dusky too;
Did the darkness intense then burst into laughter?
And are you O moon a pearl dazzling this laughter issued?

Are you the form winning
That Mother Nature painted
Rendering the sky a thing of beauty
Collecting all loveliness unspilt and unscattered,
Bringing it cool and infusing lustre into it
And offering it ready and prompt!

Words meet my mind labouring fails to unearth
To paint the feelings that well up in my heart
When I came to sight your form;
Is the ecstasy of your sight O moon lovely,
Like the one the indigent derive –
The indigent of eternal want,
Who go hungry toil unending bringing not its fruits,
When they sight pure warm rice full to the pot's brim
At the moment they go searching for a little gruel!

உன்னைஎன திருவிழியாற் காணு கின்றேன்;
　　ஒளிபெறுகின்றேன்; இருளை ஒதுக்கு கின்றேன்;
இன்னலெலாம் தவிர்கின்றேன்; களிகொள் கின்றேன்;
　　எரிவில்லை குளிர்கின்றேன் புறமும் உள்ளும் !
அன்புள்ளம் பூணுகின்றேன்; அதுவு முற்றி
　　ஆகாயம் அளாவுமொரு காதல் கொண்டேன் !
இன்பமெனும் பால்நுரையே ! குளிர் விளக்கே !
　　எனைஇழந்தேன், உன்னெழிலில் கலந்த தாலே !'

I see you with my eyes both,
Light I receive and darkness I keep off,
Thorns of life I clear off and joy I add;

Cool I come within and outside, passions burning undone!
A kindly heart I do come to wear
Which consummating turns into love extending to the sky.

O the foam of milk called joy! O the cool light!
Immersed in your beauty I lost myself!

82. மூட நம்பிக்கை

காக்கைசொல் நம்பிக் காசைமட்டும் போக்கடிக்காதே !

காக்கை இறைப்பில் கத்திக் கிடந்தது
வீட்டுக் காரன் கேட்டு வருந்தினான்
பறந்தது காக்கை சிறிதுநே ரத்தில்
மறந்த நண்பன் வந்தான் விருந்தாய் !

மற்றும் ஒருநாள் வந்து காக்கை
கத்திக் கிடந்தது — கடிதில் ஒருவன்
விருந்தாய் வந்தான் வீட்டுக் காரன்
தெரிந்து கொண்டான் காக்கையின் திறமையை !

ஒருநாள் விருந்தினர் ஒன்பது பேர்கள்
வரலா னார்கள் வருவதன் முன்பு
காக்கை எதுவும் கத்தவே யில்லை.
காக்கை மறந்ததாய்க் கருதினான் வீட்டினன் !

ஒருநாள் காக்கை ஓயாது கத்தவே
வரும்விருந் தென்று வழிபார்த் திருந்தான்

அஞ்சு மணிவரை ஆருமே வருகிலர்
அஞ்சல் வந்த தயலூரி னின்றும்
ஒருவன் வருவதும் ஓலை வருவதும்
சரிநிகர் என்று தான்நினைத் திருந்தான் !

நாளை வருவதாய் நண்பன் ஒருவன்
ஆள்ஒரு வனிடம் அஞ்சல் அனுப்பினான்.
மறுநாள் காக்கையும் வாய்ப்பறை அறைய
அறிவித் தபடி அவனும் வந்தான்.

82. SUPERSTITIONS

Lose Not Money Taking The Crow's Call

The crow on the roof went on crying
Hearing, the owner of the house felt distressed;
Flew off the crow moments later
And there came a friend for guest long-forgotten!

Came the crow another day and cried,
And there was a guest again prompt at the door;
Of the omen of the bird's call
The owner of the house felt certain!

It's yet another day,
There came guests nine at a time
And there was no crow's call preceding.
The owner took it for the bird's lapse of memory.

The crow's cry went for long yet another day
And he's looking for visit of guests.

The clock ticked five and none there was;
A post from another place he received then,
He took the letter received
As substituting for the visit of a guest.

There came word thro' a messenger –
The visit of a friend the next day the note conveyed.
Crow's call was heard that day
And the friend came true to the message.

The man expected the visit of his Kārūr
acquaintance,

மாரி யம்மன் தேருக்கு நண்பன்
காரூரி னின்று கடிது வருவான்
என்று நினைந்துகொண் டிருந்தான் வீட்டினன்.
அன்று காக்கையின் அறிக்கை தன்னை
நோக்கி யிருந்தான் காக்கையும் வந்தது.
காக்கா காக்கா என்றுகத் தியது.
மனைவியை அழைத்து வருபவ னுக்குத்
தனியே ஒருபடி சமைஎனச் சொன்னான்
காக்கை மேலும் கத்தியே கிடந்தது
நோக்கி யேதுப் பாக்கியோ டொருவன்
அண்டைவீட் டின்மேல் அமைவாய் வந்து
குண்டு பாய்ச்சிக் கொன்றான் காக்கையை !

கரிய காக்கை கழறிய வண்ணம்
மனையாள் சமைத்தாள் — வந்தவன் உண்டான்.

வீட்டுக் காரனே விளம்புவேன் கேட்பாய் !
மோட்டுக் காக்கை முழங்குவ துண்டு.
மக்கள் விருந்தாய் வருவ துண்டு
மும்முறை அன்று முந்நூறு தரம் !
இம்முறை சரியாய் இயலுவ துண்டு.
காக்கைசொல் நம்பிக் காசை மட்டும்
போக்கடிக் காதே புகல்வேன் இன்னும்
தன்பின் தொடரும் சாவை அறியாக்
கன்னங் கரிய காக்கையா அறியும்
இல்லிடை விருந்து வருவதை ?
நல்லதா மூட நம்பிக் கையதே ?

A visit thought to be certain and imminent
For the Māriyammaṉ Car festival,
The call of the crow he was looking for:
Came the crow too and its proclamation made.
Summoning his wife he gave the instruction:

"Prepare a meal of a measure special to the guest"
The crow went on with its call loud and long.
Sighting the crow there came a man gun in hand,
On the roof of the neighbouring house positioning
He aimed his gun and brought down the crow!

- Cries pathetic of the bird went on;
The wife made a meal, the guest relished.

- I have, a word for you O householder!
Crows would cry on housetops,
Guests visiting we do have,
Not three times but three hundred!
Coincidences do occur once in a while!
Lose not your money, I tell you again
Going by the call of the crow.
Will the crow dark foretell a guest's visit,
The crow that knows not of its impending death?
Will your superstition do any good?

83. நல்ல மாமி

மகனுக்கு வாய்த்த மணியே, மயிலே
ஆகமொத்த அன்பின் அழகு மருமகளே
உன்அத்தான் உன்னை விரும்பத்தான் பூணத்தான்
வேண்டுமெனில்
வீட்டிற்றான் மெல்லிநீ மாமனைத்தான் மாமியைத்தான்
கேட்டுத்தான் செய்வதென எண்ணாதே, கிட்டத்தான்
பெட்டியுண்டு நீதிறந்து பெண்ணே எடுத்துக்கொள்
அட்டியுண்டோ ? இல்லை ! அனைத்தும் உனதுடைமை
நீயும்என் மைந்தனும் நெஞ்சால் உயிரால்ஒன்
றாயினீர் ஆதலால் அன்னோன் விருப்பம்
உனக்குத் தெரியும் உடனே முடிப்பாய்
எனக்கிட்ட வேலையைநான் இன்பமெனச் செய்திடுவேன்
வானூர்தி ஒட்டுவதோ ? வாட்போர் பயிலுவதோ ?
ஊனூர் உழைப்போ, அரசின் அலுவலோ,
வாணிகமோ, நல்ல மருத்துவமோ ஓவியமோ
மாணவர்க்குக் கண்ணளிக்கும் மாண்பு வினையோ
வேண்டுமெனில் வீட்டுச் சமையலுக்கு நானுள்ளேன்
ஈண்டுச் சமையல் இலக்கியம்உண் டாக்க
விரும்புவை யாயின் அதுசெய்க; வெல்லக்
கரும்பேஉன் அத்தா னிடத்தில் கடுகளவு
தீய நடத்தை தெரிந்தால் திருந்தச்செய்
தூயவள்நீ நானுனக்குச் சொல்லல் மிகையாம் !
எனக்குமுன் மாமனுக்கும் என்ன இனி வேண்டும் ?
உனக்குமுன் அத்தான் தனக்கும் உளகாதல்
ஆர்ப்பதும் இன்பத்தில் ஆடுவதும் பாடுவதும்
பார்ப்பதெம் வாழ்வின் பயன் !

83. A BENEVOLENT MOTHER-IN-LAW

O a gem meet for my son! a peacock!
My lovely daughter-in-law consummate kindness embodied!
Should you desire to deck yourself everyday with ornaments and dress meet
For your husband to desire you right,
Think not O woman tender and pretty
That you need sufferance from father-in-law and mother-in-law;
There is the chest accessible to you,
Open it you could and take things you need.
No impediments to your will there are!
Things one and all are yours by right;
One by heart and soul that my son and you've come.
His wishes and desires you know, realize them swift;
Works assigned I shall do with pleasure
Cooking at home I shall take care of ;
Deeds creative that you will to realize outside,
Do you may –
Be it flying an aircraft
Practice of sword-fight, service around,
Service for the state or pursuits of trade,
As a physician good or painter,
Or as teacher the honoured light-giver to pupils –
O my sugary woman
Were you to notice in your man a trait unwholesome
Do see him freed of that evil!
One of the rightful kind unspotted as you are,
My words do sound redundant rather!
What more do we need, your father-in-law and I!
To see the love ripe between you and your husband,
To see you singing and dancing in ecstasy
Is our life's goal and fulfilment.

84, வானவில்
(விண் எழுது கவிதை)

மண்ணுலகு கடல், மலை அனைத்தும்உள் ளாக்கியே
வளைந்தது வானவில் ! என்னென்ன வண்ணங்கள் !
விண்முழுது கருமணல் அதன்மீது மாணிக்கம்,
வீறிடு நிறப்பச்சை, வயிரத் தடுக்குகள்
உள்நிலவும் நீரோடை கண்ணையும் மனத்தையும்,
உயிரினொடும் அள்ளியே செல்கின்ற தல்லாமல்
எண்ணற்ற அழகினால் இயற்கைவிளை யாடலின்
எல்லைகா ணேன், அதைச் சொல்லுமா றில்லையே !
புதுமைஇது வானிடைக் கண்டஅவ வோவியம்
போய், முகிழ் புனலிலே நொடிதோறும் கரைந்ததே
இ(து)அது எனச்சொல்ல ஏலா தொழிந்ததே
இன்பமும் துன்பமும் யாவுமே இவ்வண்ணமை
கதுமெனத் தோன்றிடும் மறைந்திடும் என்பதைக்
கண்ணெதிர்க் காட்டவரும் விண் எழுது கவிதையாம்
அதுநமக் குத்தெரியும் அன்றியும் கவிஞருளம்
அவ்வான விரிவினும் பெரிதென்ப தறிவமே !

84. THE RAINBOW
(A poem by the sky)

The rainbow arched over
The earth, oceans and hills all embracing!
How varied the hues therein are!
The black sand scattered all over the sky,
The carbuncle seen on the sands,
The dazzling green hue,
The mats of diamond for the surface
And the stream within -
They captivate my spirit, besides eyes and mind
And the extent of nature's play thro' beauteous forms numerous
Goes beyond my comprehension!
And indescribable they remain!
A thing wondrous it should be!
The picture of this maid seen in the sky gone,
And dissolved every second in the flood of the clouds!
Gone it is the traces of which all erased;
It is the poesy direct and obvious to the eyes
Which the sky above does compose
To bring home the truth
That prosperity and adversity do come and go
In moments unexpected and sudden;
In the manner the rainbow did
A truth it's which we know -
And yet the poet's mind is more extensive
Than this extensiveness of the rainbow.

85 . துணைவர் இலக்கணம்

மாலை ஏழு மணிக்கு வெள்ளையன்
வேலை யாக வெளியிற் சென்றவன்
மிதிபறக்க மிதி வண்டி பறக்க,
அதிவி ரைவாய் வீட்டை அடைந்து
கிள்ளையே கிள்ளையே கேள்செய்தி என்று
துள்ளிய வண்ணம் சொல்ல லானான் :
அழகரும் அம்மையும் மூன்று மக்களும்
காற்றுக் குக்கடற் கரையில் இருந்தனர்
ஏழரை மணிக்கெலாம் இங்கு வருவார்.
எட்டு மணிக்கெலாம் புகைவண்டி ஏறி
ஊருக்குப் போவதாய் உரைத்தனர் அவர்கள்
இங்குண வுண்பதாய் ஏற்றுக் கொண்டனர்
எங்கே எழுந்திரு ! சரியாய் இடையில்
அரைமணி தானுண்டு — அதற்குள் சமையல்
முடிய வேண்டும் இந்தா மூன்றுகுடம்
தண்ணீர், குண்டான், தட்டு முட்டுகள்
என்றே எதிரில் வைத்தான் ! கிள்ளை
சின்னபடி ஒன்றரை கழுவிச் சேர்த்தே
வெள்ளையன் மூட்டிய அடுப்பின் மேல்உள
பானையில் இட்டு, வற்றற் பானையும்
எண்ணெயும் புளியும் உப்பும் இட்டு
சட்டியும் வட்டிலும் தான் தொட்டிருக்கையில்
மிளகாய்த் தூள்மேல் வெள்ளையன் ஒட்டிய
குழவி குருகுரு வென்றது ! குழம்பு
சோற்றை இறக்கிய அடுப்புமேல் சொளசொள

85. THE ESSENTIAL TRAITS OF THE HELP-MEET.

Vellaiyan away from home on work,
Reached home hurrying at seven in the evening,
Riding the bicycle past the flying dust
And told his wife springing up in spirits.

'O Killai do lend your ears :
I saw Alakar and Ammai and their children
All on the beach the breeze enjoying,
By half past seven they'd come here
"We'd take the train for home at eight" they said.
And to take the meal with us they've consented.
"Rise up! it's just half an hour in between,
The meal must be ready by then sharp
Here are the things ready at hand".

Thus saying he got three pots of water,
The earthen pot and the utensils all needed.
Taking rice by one and half small measure
And cleaning it of husks in water,
Killai put it in the pot on the hearth
That Vellaiyan kindled;

As she went about seasoning
With the dried fruit, oil, tamarind and salt

என்றே வற்றல் நன்று மணக்கக்
கொதித்தது ! கிள்ளைகை கொத்த வரையையும்,
வெள்ளை யன்கை வெண்டைக் காயையும்,
ஆய்ந்தன குழம்பை அங்ஙனே இறக்கிப்
பொன்னெனக் கொத்தவரைப் பொரியல் இறக்குமுன்
வெள்ளையன் வாழை இலையினை வெடுக்கென
அறுத்துத் திருத்திக் கழுவிஅப் படியே
கூடம் பெருக்கிக் கூடப் பாய்இட்டு
நீடுசால் நிறைய நீர்நி றைத்துச்
செம்பும், துடைக்கத் துணியும் வைத்துத்
தன்னனா தான தான தானனா
என்று பாடிக் கொண்டே "என்ன"
என்று கூவினான். "எல்லாம் ஆயிற்று"
என்று மறுமொழி எழுப்பினாள் கிள்ளை
மணிப்பொறி டிங்கென ஏழரை வகுத்தது
நடுக்கட் டினிலே நாற்கா லிகளும்
விரிப்புப் பெட்டிமேல் வெற்றிலைத் தட்டும்
அழகின் சிரிப்பென அமைத்து முடித்து
வெள்ளையன் கைகூப்பி வேண்டக் கிள்ளைவாய்
மலர்தூய் வருக வருக என்ன
அழகர் வந்தார் அம்மை வந்தாள்
மழலை பேசி மக்கள் வந்தனர்
இருக்கை காட்ட இருந்தனர். உங்கள்
சிரிக்கும் சிறுவர் எங்கென்று கேட்க
வீட்டுப் பாடம் விரும்பி அங்கொரு
வீட்டுக் கேகினர் என்றது கேட்டுக்
கைய லம்பத் திரும்பினர் கண்டனர்
இருகையில் தண்ணீர் ஏந்தி நிற்கும்
தமிழ்ச்செல் வத்தைப் பாண்டியப் பையனை !
வாழ்த்தினர் வியந்தனர் செம்புநீர் வாங்கிக்
கைகால் முகம்கழீஇக் கடிதிற் சென்றே
எட்டுமணி கிட்டிற் றெனஉட் கார்ந்தனர்

And with the pot and the cup in hand,.
Heard was Vellaiyan's grinding chilly with the
little roller;
The rice taken out from the fire-place,
The curry mixture boiling bubbled up
With the dried fruits smelling sweet!
Killai's fingers ripped off the beans,
Vellaiyan's the lady's finger,
The curry mixture was taken off the fire then;
And before the beans fry was readied.
Vellaiyan cut a plantain leaf quick,
Altered it for a leaf-plate and washed it;
Swept the hall clean in the same breath,
Spread the mat, filled the barrel with water,
Kept the drinking cup and the washing-towel by
And uttering the tune *tannanā tana tāna tānanā*
He asked his wife of the readiness of things.
"All are ready" replied Killai prompt.
The clock struck half past seven,
Chairs arranged in the hall's middle,
And the betel-salver placed on the open table
All done to order the smile of beauty resembling,

Vellaiyan with folded hands entreating
And Killai extending a welcome in words unstained
and tender,

Alakar came in and Ammai came in
The children prattling accompanying;
They took the seats offered.

"Where are your children cheering"?
They inquired of the couple.

ஐவர்க்கு நால்வர் அருந்தொண் டாற்ற
விருந்துண்டு வெற்றிலை கைக்கொண்டு தெருவில்
வந்தனர், மாட்டு வண்டி வந்தது
வணக்கம் வாழ்த்து நன்றி வழங்கச்
சலசலச் சலங்கை மாடுகள் சரேலென
விரைந்தன. வெள்ளைய்ன் உடன்வி ரைந்தான்
புகைச்சல் வண்டி போனதோ கிடைத்ததோ
என்று கிள்ளை வீட்டுக் கேகினள்.
இரண்டு கடிகை ஏகின ! அந்தப்
புகைவண் டியது 'பூ'வென் றூதிற்று
வெள்ளையன் கிள்ளையே என்றழைத் தபடி
வண்டி கிடைத்ததே வண்டி கிடைத்ததே
அரைமணி அளவில் சோறுகறி ஆக்கிய
உன்றன் திறமை உவமை யிலாதது
என்றான் வெள்ளையன்; கிள்ளை இசைப்பாள்
ஆடவர் உலகே ஆடவர் உலகே
எனக்கென் துணைவர் போலநின்
மனைமார்க்கு நீதுணை புரிந்து வாழ்கவே

"They've gone to a house by
For the homework to do"
Come the reply.
Turning to wash their hands thereon,
They saw Tamilselvaṉ and Pāṇṭiyaṉ
Holding the vessel of water in both the hands,
And showered words of benediction and wonderment.
Taking the vessel of water offered
They washed their feet, hands and face,
Went in hurrying and took their seats
Saying "Nearing eight O' clock it's now".
Four serving five to heart's content,
They had their meal feast-like;
Betel in hand they stepped out into the street
Came the bullock cart thereon;
Greetings warm of reverence, adoration and gratitute over
The bullocks set out swift with their bells tinkling,
Veḷḷaiyaṉ followed them in haste too;
Kiḷḷai went in wondering
If they caught the train or not
Two *kaṭikai** passed,
The train came sounding the horn.
Veḷḷaiyaṉ returned and calling his wife said :
"They caught the train right O Kiḷḷai!
You got rice and curry readied in half an hour
Your skill goes unmatched!"
And responded Kiḷḷai :
"O the world of men!
You may prosper helping your wives
In the way my help-meet does".

* An Indian hour of 24 minutes

86. உலகுக்கு மீட்சி உண்டா?

புத்தர் — பெரியார் — வள்ளுவர்

கந்தை உடைஉடுத்துக் கைப்பிள்ளை தானேந்தி
வந்தாள் ஒருத்தி "வழியேதும் இல்லைஉங்கள்
வீட்டில்இட்ட வேலை செய்வேன் வேண்டிய தெல்லாம் என்றன்
பாட்டுக்குத் தக்கபடி" என்று சொன்னவுடன்
சோறு தருவதென்றும் திங்கள் தொறும்வெள்ளி
ஆறு தருவதென்றும் வேலைக் கமர்த்திடவே
இட்டபணி செய்தாள் நடுப்பகலில் என்மனைவி
வட்டிலிலே சோறுகறி வட்டித்தே உண்என்றாள்

"சாலையிலோர் வீட்டுக் குறட்டில்என் தாய்ஒருத்தி
மேலும் இரண்டுபேர் தங்கையரை வெம்பசி தான்
வாட்டி வருத்தும்இந்த வட்டிலொடு போய் அவர்க்கே
ஊட்டி வரவேண்டும்" என்றே உரைத்துநின்றாள்
உண்ணாரோ? ஊட்டுவதேன்? என்றுரைத்தாள்
என்மனைவி;
'கண்ணில்லார் மூவரும்' என்றாள் கலங்கும் கண்ணுடைய
என்மனைவி நெஞ்சம் இரங்கியே "நீஓடி
அன்னவரை இங்கே அழைத்துவா" என்றுரைத்தாள்.

86. IS THERE A REGENERATION FOR THIS WORLD? THE BUDDHA – PERIYĀR – VALLUVAR

Clothed in rags and a child in arms
There came a woman
And no sooner did she say,
"I have no means left,
I would attend to any work I'm told to here,
All that I need is support to my livelihood,"
Than she was given job in my house
With food regular and six silver coins a month;
She did the work asked of her,
And my wife giving her rice and curry in a plate at noon
Asked her to eat, to which she replied:
"My mother and my two sisters there are
Staying at the verandah of a house by the road
They are there pangs of hunger afflicting,
I must go feed them and be back".
"Why feed them, won't they eat?" said my wife.
"They are all blind" she said eyes suffusing with tears.
Moved by pity and compassion my wife said,
"Go at once and bring them all here."
In a reclining chair I was sitting,
They stood in the front in a row
A mother and two daughters holding on to the elder daughter's hand
The elder daughter our maid-servant
Fed the three as she sat feeding her child on milk,
And she had a few morsels of food –
Touching the hearts of all around.

சாய்வுநாற் காலியிலே சாய்ந்திருந்தேன் என்எதிரில்
தாய்இரண்டு பெண்கள் தலைமகளின் கைபற்றி
வந்து வரிசையாய் நின்றார்கள் பிள்ளைக்குக்
குந்தியே பாலூட்டிக் கொண்டேவே லைக்காரி
மூவர்க்கும் சோறூட்டி மூன்றுவிரல் தானுண்டு
யாவர்க்கும் நெஞ்சில் இரக்கத்தை ஊட்டிநின்றாள்
"ஏழைப் பணிப்பெண்ணே இந்த நகரமன்றம்
ஏழைகளுக் கேதேனும் ஏற்பாடு செய்கிலையோ"
என்றுநான் கேட்டவுடன் "இந்த நகரமன்றம்
ஒன்றுமில்லா எங்கட்கா ஒத்தாசை செய்யுமெ"ன்றாள்

எண்ணக் கடலிலே நான்ஆழ்ந்தேன் இக்கிழவி
கண்ணில்லாள் காமத்தை வென்றிருந்தால், இன்றிந்தப்
பெண்ணிரண்டும் ஏழைப் பெரியபெண்ணும் பிள்ளையும்
உண்ணுதற்கும் கட்ட உடைக்கும் சிறிதேனும்
ஒத்தாசை யற்ற உலகில் பிறந்தழியார் !
தொத்துநோய்க் காமம்வந்து தொட்டுவிட்ட போதிலுமே
கற்றவர்கள் சொல்லும் கருத்தடைமு றைகளைப்பின்
பற்றியிருந் தாலும் பழிநேர்ந்தி ராதன்றோ !

கண்ணிலார் இம்மூவர் மட்டுமா ? எண்ணிலார் !
எண்ணிலார் காதிலார் ! காலிரார், கையிரார்
எண்ணிலார் ! உண்ணிலார் எண்ணிலார் ! ஏதிருந்தும்
உள்நிறை வில்லார் உலகத்தில் எண்ணிலார்
தப்ப முடியாத சாவுகள் மூப்புநோய்
எப்புறமும் உண்டன்றோ, முப்போதும் துன்பன்றோ !

"Hasn't the City Council done anything
To alleviate the misery of the indigent O woman?"
As I queried the servant-maid said:
"Will this Council come to the succour of destitutes
like us!"
And I stood immersed deep in thoughts:
Had this blind aged woman overcome her passion for sex,
These two women and this fortuneless elder one
with a child
Wouldn't have come into this world to suffer,
The world that offers no relief whatever
For them to get food and clothes to wear!
Even if infected by the disease called lust,
Would this cursed state have befallen them
Had they adopted methods of sterilization the
informed advocate!
Are these three the only ones that're blind?
Countless they are!
Countless too are the deaf, the lame, the armless
And those that go without food!
Countless again is the number of men
That suffer inner discontent with all their riches!
Subject we are to the realities inescapable
– Death, old age and disease –
Aren't they pervasive and afflictions universal?
The wicked world that Lord Buddha found
Has come leaping down before my eyes!
I did in vain ask it to leave;
The words of the Buddha I heard from somewhere:
"Ponder over"
In the sea of reflection I remained immersed still.

புத்தர்பிரான் அன்றுகண்ட பொல்லா உலகென்முன்
பொத்தெனக்கு தித்தது, நான் "போ"என்றேன்
போகவில்லை
எண்ணிப்பார் என்றுரைத்தான் எங்கிருந்தோ புத்தர்பிரான்
எண்ணக் கடலினின் றேறவில்லை நானும்
மக்களெலாம் காமத்தை மாய்க்கத்தான் வேண்டுமா?
மக்கள்வரும் வாயில்களைச் சாத்தத்தான் வேண்டுமா!
யாரும் பிறவாமை இன்ப நிலைதானா?
பாரில் பிறப்புநிலை பட்டழிய வேண்டுமா?
ஈரா யிரத்தைந்நூ றியாண்டின்முன் இவ்வுலகில்
சீரார்ந்த புத்தர்நெறி இன்னும் சிறக்குமா?

ஈரோட்டார் என்பெரியார் "மக்களிலே தாழ்வுயர்வுப்
போராட்டம் வேரற்றுப் போனால் உலகில்
நலிவில்லை எய்தும் நலம்" என்றருளி னாரே!
தலையின்மேற் கொள்ளவே தக்கதன்றோ அன்னதுவும்?
வள்ளுவனார் இப்பெரிய வையத்தைக் காப்பதற்கோர்
தெள்ளு தமிழ்ப்பாட்டும் செப்பினர் — அஃது
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாம் தலை!

Should people undo their passion for sex?
Should we close the gates of entry into this earth?
Is not being born a state blessed?
Should procreation go extinct from this world?
Will the codes of the Buddha
That flourished on the earth
Two thousand five hundred years ago
Come valid to the present too?

Here are the words benevolent of the Periyār of Erode,
The one I hold dear to my heart:
"When the conflict between the high and the low –
When this conflict goes uprooted,
There is prosperity and no affliction ensues"
Aren't these words too worthy of taking on our heads?
Vaḷḷuvar has composed a poem too in this refined Tamil
To guide this world into the path righteous,
Which is,
"Share your meal with the needy, guard everything that lives;
That's the chief the hoarded wisdom gives"

87 . தாயும் சேயும்

அன்னைதன் பிள்ளையை அணைத்தாள் — அதனால்
கோடையிற் குளிர்புனல் ஓடையிற் குளித்தாள்

குழந்தை அசைத்த குளிர்மலர்க் கையவள்
உடலிற் படுமவள் உயிரே சிலிர்க்கும் !

அன்னை சுவைத்தஅச் சின்னஞ் சிறுகால்
வடியும் சாற்றுக் கொடி முந்திரிக்குலை !

செந்தா மரையின் சிற்றிதழ் போன்ற
இமையிடை உலவும் எழிற்கரு வண்டெனும்
கண்ணும் கண்ணிற் கலந்த ஒளியும்,
உண்ண உண்ண உளந்தெவிட் டாது !

பின்னிய தடுக்கில் வண்ணத் துகில்மேல்
சின்னதாய் அமுதச் சேற்றால், திருந்திய
அச்சிற் பதித்தெடுத்(து) ஆவியும் சேர்த்த
பச்சைக் குழந்தை பால்ஒழுகு வாயொடு
கால்கை அசைத்துக் கருமயிர் அசைய
மேற்செலும் பார்வை மின்னிக் கிடப்பதை
பெற்றவள் அன்பு பெருக பெருக
உற்றுப் பார்ப்பாள் உவப்பாள் ; சிரிப்பாள் !

தன்னரும் உடலைத் தரையில் தாழ்த்துவாள்
அன்புறு குழந்தையின் அழகு முகத்தொடு
தன்முகம் சேர்ப்பாள்; தாங்கா மகிழ்ச்சியில்
தன்னிதழ் பொன்னிதழ் மேல்வைத்
தன்பி லூரிஞ்சுமுத்தம் அனைத்துலகு விலைபெறுமே.

87. MOTHER AND CHILD

The mother embraced her child
And bathed thereby in a cool water stream in summer;
The hands of the child cool, flower-like that moves
Touches her body touching her very being;
Those tiny little legs that the mother tastes
Are the juicy orange and grape bunch.
The eye-brows tiny petals of the red-lotus like,
The eyes in between resembling the lovely black beetle
And the light that these eyes issue
Are all of a relish uncloyed!
Lying on a coloured cloth on the mat well woven,
Is an impression of lucid print dipped in ambrosial mud
That this tender fragrant child is,
Whose mouth oozes the milk,
Whose hands and legs move about,
Whose dark hair waves,
And whose eyes move up gleaming –
All of which the mother gazes at and smiles
Her love for the child increasing
And her heart rejoicing.

She inclines her delicate body towards the child;
Close to the winsome face of the beloved child
She brings hers and they touch,
The loving kiss that ensues to her joy exceeding
Between her lips and those golden ones
Is worth this whole world.

88. குழந்தை வளர்ப்பு

ஒருதேன் கூட்டில் இரண்டா யிரம்அறை
யிருந்தன; அழகாய் இருந்தன. தூய்மையாய்
இருந்தன. ஒன்றுபோல் இருந்தன அன்றோ !

அவ்வறை தோறும் அழகிய குழந்தைகள்
செவ்வனே வாழும். தேன்குடித் துறங்கும்
என்ன அழகிய ஏற்பாடு ! மிகமிக
நேர்மை யான நிறுவனம் அன்றோ

தழைந்த வாழ்வு தாய கம்பெறக்
குழந்தைகள் தம்மைக் கூட்டி வளர்ப்பது
முடியா தென்று முணுமுணுப் பார்க்கு
முடியு மென்று மொழிந்தன ஈக்கள் !

ஈக்கள் செய்தன இச்செயல் இந்நாட்டு
மாக்கள் செய்ய மதிபடைத் திலரே !

ஈன்றவர் ஈன்றார் இளங்குழந்தைகளை
தேன்கூட் டைப்போல் திருந்த வளர்ப்பது
நாட்டை முன்னின்று நடத்துவார் கடமை.

ஒருநாட்டி லுள்ள உடைமை அனைத்தும்
பெருநாட்டத் தோடு பேசுவ தாயின்
அந்நாட்டுக் குழந்தைகட் கன்றோ உரியவை ?
இந்நாட் டவர்க்கெலாம் ஏற்றவை செய்வதாய்த்
தலைமை பெற்றவர் தங்கள் குழந்தையின்
நிலையை மட்டும் நினைத்தால் போதுமா ?
தூய செவிலித் தாயை அமைத்தும்

88. BRINGING UP THE CHILD

Two thousand shelves there're in a bee-hive,
They were lovely, they were pure
And they looked alike, didn't they?

* * *

Babies graceful inhabited each shelf,
They drank honey and went slumbering
How well - wrought an order this is!
Is this not an institution fair to its core!

To bring up and foster children all together,
And to realize a life fulfilling to the mother land
The bees showed it achievable
To those that murmur 'it's impracticable.'

* * *

Unwise do the people of this land remain
For a deed to accomplish which the bees did.

* * *

Born are children whichever the womb be,
To see them brought up after the bees of the hive
Is the duty enjoined on men that lead the country.

Don't the possessions of a land one and all
Belong to the children born in that land,
As considerations of the larger good lead one to see?

For the men that have taken to guiding the land's destiny
With promise to work for the weal of all,
Will it do to think of the good of their own children alone?

Who knows not of things needful
– Getting a nurse virtuous to look after
And seeking ways ingenious to keep off ailments?

நோயுறா வண்ணம் நுண்முறை நாடியும்
ஆவன செய்வதை அறியா தவர்யார்?

எம்பிள்ளை கட்கே யாம்வாழ் கின்றோம்
செம்புபோல் செழும்பொன் செலவழிக் கின்றோம்
என்று நாளும் இயம்பினார் அன்றோ ?
அதுபோல் அன்னைநாட் டருஞ்செல் வங்களை
வளர்க்கும் பொறுப்பை வாங்கவேண் டாமா ?
இவ்வாண்டில் இத்தனை இளங்குழந் தைகள்
செவ்வெண்ணெய் இன்றிச் செத்தன என்ற
நிலைமுழுதறிந்தும் தலைமுழுகித் தீர்ப்பதா?
மாந்தர் பொதுஇயல்பு மண்ணாக லாமா ?
மனச் சான்றுமா வருத்த வில்லை ! ?

தெருத்தோறும் தெருத்தோறும் பெருத்த வீடு
மருத்துவர், மருந்து, திருத்தச் செவிலியர்
கட்டில்கள், தொட்டில்கள், கணக்கர் அமைக்க !
தெருத்தோறும் கருப்பெற்ற சேயிழை மாரைக்
கருத்தொடு நாடொறும் கண்கா ணிக்க !
குழந்தை பெறும்நாள் குறுகிடில் அவரை
மருத்துவ வீட்டில் வரவ ழைக்க
பெறும்நோய் இன்றிப் பெறும்வகை செய்க !
குறுநகை மதலையைக் குளுகுளு வென்று
மனமார்ந்த அன்பொடு வளர்த்து வருக
இரண்டாண் டானபின் இந்தா என்று
குழந்தைப் பள்ளிக்குக் கொடுத்து விடுக !
இன்னவை அனைத்தும் இன்னே செய்து
பொன்னா டாக்குதல் பொதுக்கடன் நமக்கே
குழந்தை வளர்ப்பு நிறுவனம்
தழைத்து திராவிடத் தாயகம் வாழ்கவே !

"It's for our children that we live,
It's for them that we spend fine gold as if it're copper
– Didn't they say thus day in and day out?
Shouldn't they take upon themselves likewise
The care of other children dear of this motherland?
Even after knowing details all
Of the infant mortality lack of nourishment caused,
Should one go unconcerned and uncaring?
Should we allow humanness buried?
Wouldn't the conscience prick one?

* * *

Let there be set up in every street
Large houses of care, physician, medicines and nursing maids
Cots, cradles and men of sage minds!
Let there be pre-natal care devoted and unfailing in every street!
The day of delivery nearing,
Let these women be taken to hospitals!
Let there be ways of delivery without labour pain!
Let the baby smiling be tended with loving care and comfort!
Years two passing,
Let the child be handed to school –
A kindly obligation they're enjoined on us all
To see ours a golden land;
Institutions of child-care thriving,
May our motherly Dravidian land prosper!

89. குயில்

மின்னும் கருமேனி விண்ணில் மிதப்ப, இரு
சின்னஞ் சிறுவிழியாம், செம்மணிகள், நாற்புறத்தும்
நோக்க, விரைந்து, கதிரும் நுழையாத
பூக்கமழும் சோலை புகுவது கண்டேன்;
கூக்கூ எனும் அக்குயிலின் குரல்கேட்டேன்;
ஆக்காத நல்லமுதோ! அடடாநான் என்சொல்வேன்!
விட்டுவிட் டொளிக்குமொரு மின்வெட்டுப் போல்நறவின்
சொட்டொன்றொன்றாகச் சுவையேறிற் றென்காதில்.

கருநெய்தற் காட்டரும்பு போலும் குவிந்த
இரண்டலகு தம்மிற் பிரிந்து குரல்எடுக்க
வாயிற்செவ் வல்லி மலர்கண்டு நான் வியந்தேன்!

ஓயாது சுற்றுமுற்றும் பார்க்கும் ஒளிக்குயில்தான்
இவ்வுலகம் இன்னல் நிறைந்ததென எண்ணிற்றா ?
எவ்வலியும் தன்னிடத்தே இல்லை என அஞ்சிற்றா ?

மாவின் கிளையை மணிக்காலால் தான்பற்றிப்
பாவின் இனிமைதனைப் பாரோர்க்குப் பாச்சுகின்ற
நேரத்தில், தன்விழியின் நேரிலுள்ள மாந்தளிரை,
ஆர அருந்தத் தொடங்கும் அவாவோடு.

பொன்னாய்ப் பொலியும் தளிரும், புதுமெருகில்
மின்னாய் மிளிர்கின்ற மென்தளிரும், பிள்ளைகளின்
மேனி எனப்பொலியும் மிக்கொளிசெய் நற்றளிரும்,
ஆன கிளிச்சிறகின் ஆர்ந்த பசுந்தளிரும்
கொத்தாய் இருக்கும். குயிலலகுச் சாமணத்தை
வைத்தெடுத் துண்ணும்; பின் தத்திப் பிறிதொருபால்

89. THE CUCKOO

With the dark shining body floating about in the sky,
The two tiny eyes red gem like gazing around,
I saw it entering the grove of sweet smelling flowers
The grove thick unpenetrated by the sun's rays even;
And I heard the strain 'coo' of this cuckoo.
Is it a feast delicious unprepared?
Oh, how could I describe it!

Like the flash of lightning of intermittent gleam
The music filled my ears
As if they were honey poured in drops.
O the bloom of red lily in its mouth
As the cuckoo opened its beaks to sing,
The beaks rounded like buds of dark *neytal* flowers!

Did the lustrous cuckoo
That went on looking about unwearied,
Think of this world as one sorrow abounding?
Did it fear that it had no might whatever?

As it went on infusing its music into the humans
Holding the mango branch with its jewel like legs,
It'd start eating the mango shoots in front with avidity

The shoots shining like gold,
And the fresh tender ones of lightning dazzle
All glow'd like the faces of children;
The sparkling sprouts unstained
And those of the wholesome hue of parrot's
green feathers
All there were seen in bunches.

வேறு தளிர் பார்க்கும்; இடையிடையே, மேல்கரும்பின்
சாறுநிகர் பாடல் தரும், தன்இறகடித்து
மற்று மொருகிளைக்கு மாறும், மறுநொடியில்
முற்றிலும் அஞ்சும், மகிழும் முடிவினிலே,
சேய்மையிலோர் சோலைக்குச் செல்லும் குயிலினிடம்
தூய்மை மிகுபண்பொன்று கேட்பீர்; சுவையைப்
படியளக்கும் வையத்தார் உண்ணும் படியே
குடியிருப்பொன்றில்லாக் குயில் !

The cuckoo would eat them by its tong-like beaks,
It would then leapto another branch for newer shoots
In the midst it'd issue strains of the juice of
sugarcane's upper stem's sweetness,
Flapping its wings it would take yet another branch.
Fear of extreme kind it would betray,
It would come joyous and cheering at the end.

Ask for a tune blameless and pure
From the cuckoo that flies to a distant grove:
And the bird shelterless would offer it free
For the world of men to cherish.

90 , சோலை ஆடலரங்கு

விட்டு விட்டுக் குழல் ஊதும்
மெட்டுவைத்துக் குயில் பாடும்
வட்டாரச் சோலையிலே
மாமயில் ஆடும் — நல்ல
மரங்கொத்தி அரங்கத்தில்
தாளங்கள் போடும்.

கட்டுக்கரை அலை மோதும்
காதினிக்கும் ஒரு மேளம் !
தட்டாமல் ஒத்தூதும்
தாமரை வண்டு — நல்ல
சிட்டுச் சலங்கை போடும்
ஒத்தாசை கண்டு

வெள்ளைப்பட்டுப் பெடை அன்னம்
வீறார்ப்பு நடை அன்னம்
உள்ளோடு உலாவையிலே
ஒட்டாரக் கிள்ளை — நல்ல
ஒழுங்கு பேசிக் கொண்டிருக்கும்
ஓயாத பிள்ளை.
கொள்ளைகொள்ளை கொடிமுல்லை,
கோத்தமுத்தும் இணை இல்லை
கள்ளொழுகும் உதடு காட்டிச்
சிரித்தாள் ஒருத்தி — அவள்
காட்சியெல்லாம் கண்டிருந்தது
ஓர் செம்பருத்தி !

90. THE FLOWER GROVE-THEATRE

There is the blowing intermittent of reeds,
There is the song tuneful of cuckoos,
The splendid peacock dances about in the grove
The woodpecker fine beats the cymbals in the grove-theatre.

The dashing of waves against the banks
Is the drum music sweet on the ears
The beetle over the lotus sounds the key note in harmony
Wherein comes the bell sound of the tiny *cittu* bird.

As the white silken she–swan of proud gait
Moves about in ecstasy heartful,
There is seen the obstinate parrot
That goes about unceasing in its prattle decorous.

There is the *mullai*-creeper grown in abundance
Whose pearl like buds wreathed are unmatched;
There is a maid smiling with her lips intoxicating
And there is the red cotton witnessing the sight of this maid!

91 வீட்டுத் தோட்டப் பூங்கா

தஞ்சையை விட்டுத் தண்வயல் "வடவார்ப்
புகைவண்டி நிலையம்" போந்ததென் வண்டி.

வண்டி நிலையத் தலுவலன் வாழும்
தனி வீடொன்றை இனிது நான் கண்டேன்.
நாலைந்து வாழைகள் நறுநிழல் தந்தன;
அகத்தி யொன்றும் அழகொடு நின்றது;
இளைய மாமரம் தளிர்ந்திருந்தது;
புடலை, அவரை, பூசணி எல்லாம்
கொடி நீண்டு குளிர்இலையோடு படர்ந்தன ;
பன்னிற நன்மலர் படைத்தன செடிகள் !

ஐம்பது சதுர அடி அளவுள்ள
தரையில் இந்தப் பச்சைத் தழையிடை,
செந்நிற ஓட்டு வீடு திகழ்ந்ததால்,
நீல மாமுகில் நீங்கா நிலையில்
செம்பருதி தன்னொளி சிறிதுசிறிது
காட்டியதேபோற் காட்சி தந்தது.

வீட்டின் கொல்லைப் புறத்தில் விரிபுனல்
வாய்க்கால் ஒன்று வாய்த் திருந்தது.
ஒருத்தி; என் மகள்; மரங்கொடி, செடிக்கெலாம்
அன்னை போல்வாள்; அவள் ஒரு வாளிகொண்டு
செல்வாள்; நீர்மொண்டு மீண்டு, தன்னருஞ்
செல்வர் உண்ணச் சேர்ப்பாள் ! காண்கையில்
எனது வண்டி எடுத்து நடையை,
இனிய காட்சியை இழந்தன கண்கள்.

அரசினர்க் கொன்று சொல்ல ஆசை,
வீட்டுத் தோட்டப் பூங்கா
நாட்டுவார்க்குத் தேவைநற் பரிசே.

91. THE ENCLOSED GARDEN

Leaving Tanjāvūr,
The train arrived at Vaṭavār station cool fields encircling.
I sighted a solitary house by
That an employee of the station was living in;
There were plantain trees four or fiveproviding cool shade;
There was the *akatti** tree standing in splendid posture;
There were the sprouts fresh of the young mango tree;
There were creepers spreading with cool leaves.
Of serpent-cucumber, beans and pumpkin;
The plants brought forth beauteous flowers of varied hues!

The house red-tiled amongst the greenery
On the floor measuring fifty square feet
Looked like
The reddish sun's rays appearing in shreds
With the clouds blue-hued staying on still.

There was a water course situated at the backyard,
There was a lass, my daughter
Who acted mother like to the plants, creepers and trees !
With a jar in hand she moved about
Watering the plants her darlings!
Absorbed as I remained,
The train started moving
With my eyes being denied a sight heart-filling.

I'd like to tell the government a word –
Those who set up enclosed gardens about their houses
Need to be given rewards fitting.

92 எறும்பின் தவம்

தரையிற் கிடந்த தங்கத் துகள்கள்
வரிசை மாறாது நடந்தன. அவற்றை
இரைக்குச் செல்லும் எறும்புகள் என்றனர்.

அரிய போர்வீரர் அணிநடை பயில
ஓராண்டு செல்லும் ஊசிமுனை எறும்புக்கு
ஈராண் டாயினும் வேண்டுமே என்றேன்.
வரிசை, ஒழுங்கும், மாறு படாமை
எறும்புகட் கெல்லாம் இயல்பில் அமைந்தவை !
மனிதன் ஒழுக்கநூல் ஆர்ந்தான் ஆயினும்
இனி அவன் திருந்துதல் எந்நாள் அறிகிலேம்
என்றனர் ! இதனைக் கேட்ட என் உதட்டு
மன்றில் சிரிப்பு வந்து குதித்தது.

எறும்புகள் நடந்துகொண் டிருந்தன; வழியைச்
சிறுகல் தடுத்தது; ஏறி இறங்கி
எறும்புகள் நடந்துகொண் டிருந்தன ! பெட்டி
குறுக்கில் கிடந்தது; சுற்றிக் கொண்டு
போகும் மனிதரின் மனநிலை பெறாமல்

வழிகோ ணாமல், வரிகோணாமல்
பெட்டிமேல் ஏறிப் பின்புறம் இறங்கி
எறும்புகள் நடந்து கொண் டிருந்தன; சுவரொன்று
நடுவில் நின்றது; நடுங்க வில்லை,
மலைக்க வில்லை, வலிகுன்ற வில்லை,
நடையின் விரைவு தடைபடவில்லை;
எறும்புகள் நடந்து கொண்டிருந்தன ! அரிசிநொய்க்
குவியலை அடைந்தன. ஒவ்வொன்று தூக்கித்
தாவ முடித்தன தம்புற்று மீண்டே.
மருந்தில்லாத நோய் சோம்பல்து !
அருந்தவம் ஊக்கம் ! அன்பு மக்களே !

92. THE PENANCE OF AN ANT

The particles of gold seen on the ground
Moved on in order in a row.
They called them ants in search of food.

I said:
'A year it needs for soldiers competent
To come accomplished in battle array;
And the ants the eye of the needle sized,
Need years two at least to learn this order'.
And they replied:
'Order, discipline and treading not of varied courses
Are all in their nature ingrained!
Uncertain we're of man coming reformed,
Versed though he be in works of ethics'
Hearing which my lips wore a swift smile.

The ants did walk on:
A small stone hindered their movement;
They continued their march climbing up the stone!
There was a box across
Human mentality seeks to take a course circuitous,
But the ants climbed up and down the box,
And continued their journey the path undeflected
and the row intact.

There was a wall across
They went not baffled, shivering or weakened of their will
Unaffected too was their pace of march,
They moved steady and firm on their course
Reaching the grits of rice heaped;
And to fruition did their effort come
Each returning to the anthill with a piece of rice on.
Sluggishness is an ailment incurable
And perseverance is a penance rigorous, O my
dear people!

93. சூறையில் ஓடம்

வீற்றிருக்கும் மணிமாடம்
விருந்துண்ணும் நடுக்கூடம்
ஆற்றிலே நடமாடும்
அழகான நம் ஓடம்.

ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம் !

காற்றோ குளிர்ந்துவரும்
கண்ணிலே விண்தெரியும்
சாற்றிலே சர்க்கரை போட்ட
தமிழ்ப் பாட்டும் தானேவரும்.

ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம் !

சிற்றலையின் வரிசையிலே
சேல்மீன்கள் விளையாடும்
முற்றிவிட்ட பகைபோல
முதலைஒன்று குறுக்கோடும்.

ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம் !

கற்றாழை மிதந்துவரும்
கண்ணெதிரில் வாள்சுழற்றும்
முற்றாத தென்னம்பாளை
முன்னேவந்து தான்சிரிக்கும்.

ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம் !

மேற்கை வெறுத்துவரும்
கிழக்கு நோக்கி விரைந்தோடும்
ஆற்றில் மிதக்கும் ஓடம்
காற்றுக்குமேல் ஆட்டம் போடும்.

ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம் !

93. A BOAT IN THE WHIRLWIND

A palatial one to seat,
A mid-hall for feasting
Is our boat well-wrought
That ferries across the river.
– Yes, O Yes!

Cool blows the wind,
Our eyes catch the skies,
Tunes of Tamil sugared juice like
Come flowing unbidden.
– Yes, O Yes!

In the ripples of water along
The *cēl* fish move sporting about,
A crocodile there goes across
As if one of rooted malice.
– Yes, O Yes!

There comes the aloe leaf floating
As if waving a sword to our eyes
Spathas unripe of the coconut
Come out smiling.
– Yes, O Yes!

Loathing the west
Eastward it ferries fast
Floating in the river
The boat goes dancing in the wind.
– Yes, O Yes!

கீற்றுத் தென்னைமேலே
கிள்ளைகளும் தமிழ்பேசும்
சேற்றுத் தவளைகளும்
திடும்திடும் பறைவீசும்.

ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம் !

வெள்ளாடு தழைமேயும்
வெய்யில் குடைபிடிக்கும்
புள்ளிமான் தென்துறையில்
பூரித்து நீர் அருந்தும்.

ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம் !

கள்ளிமலர் பூத்திருக்கும்
பொன்வண்டு காத்திருக்கும்
துள்ளி வரால் மீன்கள்
சூறையாடும் மாம்பழத்தை

ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம் !

வானம் கருத்ததண்ணே
காற்றுமழை வந்ததண்ணே
ஏனம் க[illegible]தண்ணே
என் கஞ்சி [illegible]ாய்ந்ததண்ணே.

ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம் !

கை சோர்ந்து போன தண்ணே
கண்தெரிய வில்லை அண்ணே
ஐயையோ நம் ஓடம்
ஆற்றில் தள்ளாடுதண்ணே.

ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம் !

ஒய்யென்று காற்றடித்தால்
மூச்சே ஒழிந்துவிடும்
பொய்தானோ நம் வாழ்வு
போனால் வராதே அண்ணே.

ஆமாமாம் ஆமாமாம் ஆமாமாம் !

The parrots too prattle in Tamil
Seated on the split coconut leaves,
The frogs mud-dwelling
Go about beating the *tiṭum* drum
– Yes, O Yes!

The goat eats the leaves
The sun's rays acting the umbrella,
There's in the southern watering place
The spotted deer drinking water in delight.
– Yes, O Yes!

There are the cactus flowers blussoming
The beetles gold-hued waiting on their wings,
The murrel fish leap up
Plundering the mangoes.
– Yes, O Yes!

The sky's darkened O brother
And the wind and the rain lash
My vessel has overturned
And my gruel's gone O brother!
– Yes, O Yes!

Wearied my hands are O brother,
Vision too fails
Alas our boat reels
In the current of the river!
– Yes, O Yes!

The whirl of the wind
Would take off one's life,
Is our life unreal!
Once gone we won't get it back O brother!
Yes, O Yes!

94. உயிர் உறங்கா இரவு

உலகத்தின் சுழற்சியினால்
பரிதிக் கோளம்
ஒளிமாற்றி எழுவண்ணம்
முகிலில் பூசும்.

பலகற்றும் அறிவில்லா
மனத்தினைப்போல்
பரவும் இருள்; பாழ்ப்பட்ட
சிற்றூர் தன்னை,

நலமுற்றச் செய்திடுவோம்
எனத்துணிந்த
நல்இளைஞர் போல் விண்மீன்
எங்கும் மின்னும்!

விலகட்டும் அறியாமை
என முன் நிற்கும்
பெரியராய் வெண்ணிலவு
விரிவான் தோன்றும்.

வான்பறவை இனமெல்லாம்
மரங்கள் தோறும்
மயக்குறநல் மக்களைப்போல்
குரல் அடங்கும்.

தேன்பறவை சிற்சிலதம்
குரல் அமிழ்தைத்
தித்திக்க எங்கிருந்தோ
முணுமுணுக்கும்.

ஆனிரையும் ஆடுகளும்
ஆன்றவர்போல்
அடங்கும்; அலை ஆழியோ
முரசொலிக்கும்!

ஊனுறங்கும், உயிர் உறங்கா
துணர்வில் ஓங்கி,
ஒளியுலகை வரவேற்க
விழித்திருக்கும்.

94. THE NIGHT WHEN THE SOUL WENT SLEEPLESS

There's the earth's revolution,
That sees the native lustre of the sun the orb transformed,
The clouds painted thereby in seven hues.

The darkness spreads'
Like the mind
That remains dark despite learning much;

The stars dazzle everywhere
Like the virtuous resolute youth
That strive to bring light to a decayed hamlet.

The moon appears on the sky's expanse
Like the men of nobility
That stand in the forefront to see darkness recede.

The birds of varied kinds
Go subdued of their din in their tree habitats
Like the virtuous men given to stupor.

Honey bees a few of them
Go humming about
Savouring their ambrosial tongue.

The herds of cows and sheep
Come tame like the sage men
But the turbulent ocean keeps clamouring.

The body is in slumber
But the soul remains wide awake

Keeping the consciousness aloft
To welcome the world of light.

95 எக்காளக் குயில்

நின்றசெங் காந்தள்பூ
நேரில் கை ஏந்த நெடும்
கொன்றை மலர்ப்பொன்னைக்
கொட்டுகின்றாள் — என்றே
அடைகுயில்கள் எக்காளம்
ஆர்த்தெனவே, மண்ணில்
கொடை வாழ்க என்று
குறித்து.

95. THE TRUMPETING CUCKOO

As the red-hued November flower * growing erect
Raised the hands spread,
The lofty *konrai* ** cast in plenty its floral gold.
Saying thus,
Trumpeted the cuckoos incubating,
Marking thereon a note of benediction
On munificence on the earth.

96. என்றைக்கும் பஞ்சமில்லை

கொன்றைக்கும் முல்லைக்கும்
கொம்புக்கும் கள்ளுக்கும்
என்றைக்கும் பஞ்சமே
இல்லையே, இன்றைக்கும்
ஊதவில்லை என்றதுண்டா
உள்ளவண்டு ? வெள்ளத்தேன்
போவதில்லை என்றதுண்டா ?
போய் !

96. NO FAMINE EVERMORE

No famine evermore there is
For jasmine and *konrai* flowers
For cornet and honey.
Has the beetle withdrawn its singing even now?
Has the flood refused to flow?
Never!

97 பந்து விளையாட்டு

கரடிகள் கீழிருந்து
கை ஏந்த ஏந்த
மரக்கிளை ஆடரங்
காகக்
குரங்கு பந்தடித்தது
விளாம்பழம் கொண்டே !

97. BALL-PLAY

The bears on the ground
Raising their hands spread,
The monkeys threw the wood-apple for ball,
The branches of the tree being the sporting field

98 சாவாத உழவன்

வெயிலில் உழவன்
வியர்க்க உழுதிடும்
வயல் அயல் மரத்து
நிழலும் சுட்டதால்
குளிர்பொருந்து கூடம்
சென்றுபின், மாலைஅவ்
வயலிடை வந்தேன்,
உழவன்
உயிரோ டின்னும்
உழுகின்றானே !

98.THE UNEXHAUSTED PLOUGHMAN

A peasant ploughs a field
Sweating in the scorching sun,
Even the shade of the tree by burnt,
And I left for a cool sheltered hall;
I passed thro' the field in the evening
The ploughman was alive,
And he went on ploughing!

99. யார் குற்றவாளி ?

கொஞ்சும் குயில் ஒன்று
கூகூ என்றது
தென்றலால் அசைந்த
செவ்விதழ் அல்லிதான்
இகழ்ச்சிச் சீழ்க்கை
அடித்ததாய்த்
தகாதிது தடாபுடா
என்றது தவளையே.

99. WHO IS THE OFFENDER?

The prattling cuckoo bawled "coo coo";
Taking it for a whistle of dispraise
By the red-petalled lily waving in the breeze,
The frog croaked out a clamour of protest.

100 என் நிலைக்கு முல்லை சிரித்தது

இரவு தங்கிப்
பகலில் வந்த என்
வரவுக்கு மனைவி
கண்சிவந்தாள்
மலர்வனம் சென்றேன்
அங்கும்
அலரிகண் சிவந்தது !
முல்லை சிரித்ததே.

100. THE JASMINE LAUGHED AT MY PLIGHT

My return the next day
After overnight stay away from home
Witnessed my wife's reddened eyes;
And to the flower garden I retired,
There too
The sweet scented oleander wore reddened eyes,
And the jasmine laughed at me.

SELECTED POEMS OF BHARATHIDASAN

TRANSLATED FROM TAMIL TO ENGLISH

By Dr. V. MURUGAN

பாரதிதாசன் கவிதைகள்

ஆங்கில மொழியாக்கம்

டாக்டர் வி. முருகன்